பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்


விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 07 திங்கட்கிழமை (22.12.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:026

# இலங்கையில் போரை நிறுத்த பாரதிய ஜனதா வலியுறுத்தும்

## இந்திய நாடாளுமன்றத்தில் கொண்டுவர அத்வானி உறுதி



இலங்கையில், வன்னிப் பெரு நிலப் பரப்பில் நடைபெற்று வரும் போரை உடன் நிறுத்து மாறு அந்நாட்டு அரசிடம் வலியுறுத்துமாறு, பிரதான எதிர்க் கட்சியான பாரதிய ஜனதா கட்சி இந்திய நாடாளுமன்றத்தில் ஆணித்தரமாக எடுத்துரைக்க உள்ளது.

இத்தகவலை முன்னாள்பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவருமான லால் கிருஷ்ன் அத்வானி தம்மைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத் திடம்தெரிவித்திருக்கிறார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## உயிருடன் பிடிபட்ட படைச்சிப்பாய்!

கொழும்பு, டிச. 22

அண்மையில் கிளாலிக்களமுனையில் இடம்பெற்ற சமரின் பின்னர் விடுதலைப் புலிகளால் படைச்சிப்பாய் ஒருவர் உயிருடன் பிடிக்கப்பட்டுள்ளார் என்று நேற்றிரவு இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இம்மாதம் 16ஆம் திகதி கிளாலியில் படையினர் மேற்கொண்ட முன்னகர்வு (16 ஆம் பக்கம் பார்க்க)

## நூற்றுக் கணக்கானோர் தேடுதலில் கைது

கொழும்பு,டிசெ.22

கொழும்பு, வெள்ளவத்தை, பொறளை, கொட்டாஞ்சேனை, வத்தளை மற்றும் நாரஹேன்பிட்டி, தெஹிவளை, கொகுவளை, நுகேகொடை ஆகிய பகுதிகளிலும் கம்பஹா, அநுராதபுரம் ஆகிய வெளி மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகளிலும் நேற்று முன்தினம் மாலை முதல் நேற்றுப் பிற்பகல் வரை இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய தேடுதலில் நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவித்தன.(அ-சி)

# புலிகளை தடைசெய்யும் முடிவை ஜனாதிபதி விரைவில் அறிவிப்பார்?

## பெரும்பாலும் அவரது கிறிஸ்மஸ் தினச்செய்தியில்!

கொழும்பு, டிச. 22

விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்கான முடிவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரைவில் அறிவிக்கக்கூடும் என்று இந்திய இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. பெரும்பாலும் எதிர்வரும் நத்தார் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி விடுக்கும் செய்தியில்,விடுதலைப் புலிகளை ஆயுதங்களை ஒப்படைக்குமாறு அவர் கோருவார் அல்லது தடையை எதிர்கொள்ளுமாறு எச்சரிக்கை விடுப்பார் என அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டி மேற்படிசெய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த இணையத்தள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகள் மீது தடைகளை விதிக்கவேண்டுமா விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தற்போதைய சட்டங்கள் போதுமானவையா (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.எஸ்.பி+ வரிச்சலுகை குறித்து ஜனவரி மாத இறுதியில் பேச்சு

கொழும்பு, டிசெ. 22

ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிவரும் ஜிஎஸ்.பி+ வரிச்சலுகை தொடர்பாக அடுத்த மாத இறுதியில் பேச்சு நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் கத்ரீன் ஆஸ்ரன், ஜனவரி மாத இறுதியில் இலங்கைக் குழுவுடன் இது குறித்துப் பேச்சு நடத்தத் தாம் தயாராக உள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தைத்த ஆடைத் தொழிலுக்கு ஊக்கமளிக்கக்கூடியதாக, ஐரோப்பிய ஒன்றியம் அளித்து வந்த ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இருந்து வந்தது. ஆனால், அரசின் மோசமான மனித உரிமை மீறல்களால் இச்சலுகை தொடர்ந்தும் இலங்கைக்கு கிடைப்பதில் சிக்கல் உருவானது.

இச்சலுகையைத் தொடர்ந்து வழங்குவது தொடர்பாக கடந்த ஒக்ரோபர் மாதம் பேச்சுகள் ஆரம்பமாகின.

இந்நிலையில், அமைச்சர் ரோஹித போகல்லாகம தலைமையிலான குழு, ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளருடன் அடுத்த மாத இறுதியில் பேச்சுகளை நடத்தவுள்ளது என அறிய வருகின்றது.

இதேவேளை ஜி.எஸ்.பி+ வரிச்சலுகையை இலங்கை உட்பட 16 நாடுகளுக்கு வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் இம் மாதம் 9 ஆம் திகதி முடிவு செய்தது: இலங்கைக்கு தற்போதைய விசாரணை முடியும் வரை வழங்குவது என்றும் அதன் பின்னரே தீர்க்கமான முடிவுஎடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. (அ)

## ஒக்ஸ்பாம் தொண்டு நிறுவனம் மன்னாரிலிருந்து வெளியேற்றம்!

கொழும்பு, டிசெ.22

மன்னார் மாவட்டத்தில் கடந்த மூன்று வருடங்களாக இயங்கிவந்த தன்னார்வத் தொண்டு நிறுவனமான ஒக்ஸ்பாம் ஜி.பி. தனது பணிகளை முடித்துக் கொண்டு வெளியேறியுள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு முதல் இந்த நிறுவனம் மன்னார் மாவட்டத்தில் பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வந்தது. அரச கட்டுப்பாடற்ற பகுதியிலேயே இந்தத் தொண்டு நிறுவனம் அதிகளவில் சேவையாற்றி வந்தது.

மன்னாரில் வெளியேறினாலும் தொடர்ந்தும் வவுனியாவில் ஒக்ஸ்பாம் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பிராந்தியப் பணிமனை இயங்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேலும் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் மன்னாரை விட்டு வெளியேறுவதுடன் சில நிறுவனங்கள் தங்களது பணியாளர்களை ஆள்குறைப்பு செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## ஆழிப்பேரலை அனர்த்தத்தின் நான்காவது நினைவு தினம்

கொழும்பு, டிசெ.22

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் நான்காவது ஆண்டு நினைவு தினம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (26 ஆம் திகதி) அனுஷ்டிக்கப்படுகிறது.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற ஆழிப் பேரலை அனர்த்தங்களை நினைவு கூரும் வகையில் இலங்கையில் வருடம் தோறும் பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்த வருடத்திற்கான தேசிய பாதுகாப்பு தினத்தை நாடளாவிய ரீதியில் அனுஷ்டிப்பதற்கான விரிவான ஏற்பாடுகளை அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்கேணி தம் வசம் என்கிறது படை

கொழும்பு, டிசெ.22

வன்னியில் படை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் நேற்று நெடுங்கேணியைக் கைப்பற்றியுள்ளனர் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சனிக்கிழமை இடம்பெற்ற கடும் மோதலுக்குப் பின்னர் முல்லைத்தீவு மணியங்குளம் வீதியிலுள்ள நெடுங்கேணி கைப்பற்றப் பட்டுள்ளது என அமைச்சு தெரிவித்தது.

புளியங்குளத்திலிருந்து 19 கிலோமீற்றர் வடகிழக்கில் உள்ள நெடுங்கேணியை விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கைகளுக்கான தளமாகப் பயன்படுத்தி வந்தனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது குறித்து விடுதலைப்புலிகள் தரப்பில் தகவல் எதுவும் வெளியிடவில்லை.

## மின்சார சபை ஊழியர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிச. 22

இலங்கை மின்சாரசபை ஊழியர்களின் இந்த வருடத்திற்கான போனஸ் கொடுப்பனவை நிறுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கும் மின்சார சபை தொழிற்சங்கம் அதற்கு எதிராக இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துகிறது.

இன்று நண்பகல் 12 மணிக்கு கொழும்பில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபை தலைமைக்காரியாலயத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வன்னியில் மக்களை விடுவிக்கக் கோரி தென்மராட்சியிலும் வடமராட்சியிலும் பேரணிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 22

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களை விடுவிக்க வேண்டும் என்று கோரி தென்மராட்சியிலும் வடமராட்சியிலும் நேற்றுப் பேரணிகள் நடத்தப்பட்டன.

நேற்றுக்காலை 9.45 மணியளவில் கைதடிச் சந்தியில் இருந்து மக்கள் சாவகச்சேரி சந்தைவரை மக்கள் பேரணியாகச் சென்றனர். இந்த ஆர்ப்பாட்டம் பிற்பகல் ஒருமணிக்கு முடிவுற்றது. இந்தப் பேரணியில் ஆயிரக் கணக்கனோர் கலந்துகொண்டனர்.

கொடிகாமத்தில் இருந்து முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான பேரணி சாவகச்சேரி பஸ் தரிப்பு நிலையத்தை நண்பகல் சென்றடைந்தது. ஏ-9 வீதி வழியாக நடைபெற்ற இப் பேரணியில் இளைஞர், யுவதிகள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர். பேரணியில் கலந்துகொள்ள வசதியாக தென்மராட்சி சிற்றூர்திச் சங்கம் போக்குவரத்து வசதிகளைச் செய்திருந்தது. (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# முத்தலிப் கொலை வழக்கில் புலனாய்வுத்துறை அதிகாரி கைது

சிறிலங்கா புலனாய்வுத்துறை கட்டளை அதிகாரியாக இருந்த கேணல் முத்தலிப் கொலையுடன் தொடர்புள்ளவர் என தெரிவித்து சிறிலங்கா புலனாய்வுத்துறை மேஜர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு பம்பலப்பிட்டிக்கும் கொள்ளுப் பிட்டிக்கும் இடையில் சென்ற போது கேணல் முத்தலிப் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். முத்தலிப் பலியாகி மூன்று ஆண்டுகள் கடந்த பின்னர் புலனாய்வுத்துறை மேஜர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட மேஜர் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

முத்தலிப் சிறிலங்காவின் ஆழ ஊடுருவும் படையணியின் கட்டளையிடும் அதிகாரியாகவும் அதை வழி நடத்திய கண்டியில் கொல்லப்பட்ட பரமி குலதுங்காவுக்கு அடுத்த நிலை அதிகாரியாகவும் செயற்பட்டவர் ஆவார். (202)

## ஆபாசப்படம் நடித்த 21 பேரை தேடிப் பொலிஸார் வலைவிரிப்பு

ஆபாசப்படங்களில் நடித்தவர்கள் என்று கூறப்படும் 21 பேரைக் கைதுசெய்யும் நடவடிக்கையில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

பாடசாலை மாணவர்களைப் பயன்படுத்தியே இவர்கள் இப் படங்களில் நடித்துள்ளனர் என்றும் உள்ளூர் இணையத்தளங்கள், கையடக்கத் தொலைபேசிகள் போன்றவற்றில் இப்படங்கள் உலாவருகின்றன என்றும் பொலிஸ் திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பணியகம் தெரிவித்துள்ளது.

இப்படங்கள் சீடிக்களில் பதிவு செய்யப்பட்டு சந்தையில் திருட்டுத்தனமாக விற்பனை செய்யப்படுகின்றன என்றும் அப்பணியகம் தெரிவித்துள்ளது.

சுமார் 80 இற்கு மேற்பட்ட ஆபாசப் படங்களில் இவர்கள் நடித்துள்ளனர் என்று கூறிய பொலிஸார் இவர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டி வருவதாகத் தெரிவித்தனர். (அ-சி)

## கலந்துரையாடல்

யாழ். கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் காலை 8.30மணிக்கு நடைபெறும்.

2009 ஆம் கல்வி ஆண்டுக்கான வருடாந்த வேலைத்திட்டம், திட்டமிடல், உள்ளக மேற்பார்வை, கற்றல், கற்பித்தல் அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடையங்கள் தொடர்பாகக் கலந்துரையாடவிருப்பதால் சகல பாடசாலையின் அதிபர்களையும் அதிபர்கள் இல்லாவிடத்து பதில் கடமையை மேற்கொள்பவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (202-11)

## போதனா வைத்தியசாலை விடுதிகளில் உணவு உட்கொள்ள இடவசதி இல்லை

வண்ணை, டிசெ. 22

யாழ். போதனா வைத்தியசாலையில் சில விடுதிகளில் நோயாளர்கள் உணவு உட்கொள்வதற்கான இடம் இல்லாத குறை இருந்து வருகிறது.

குறிப்பாக 8 ஆம், 9 ஆம் விடுதி நோயாளர்கள் தமது படுக்கைகள் மற்றும் நடைபாதை வாங்குகளில் இருந்தே உணவுகளை உட்கொள்ளும் நிலைமை நீடிக்கிறது.

முன்னர் உணவு உட்கொள்ள விடுதியாக இருந்த இடம் தற்சமயம் வைத்தியசாலை பாவனைக்கு எடுக்கப்பட்டிருப்பதாலேயே மேற்படி நிலைமை தோன்றியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (202-160)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிஐயா சிவஞானம்

(தாணி வெளிக்கள உத்தியோகத்தரும் சமூக, சமயத் தொண்டரும்)



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், இராச வீதி, நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா சிவஞானம் நேற்று (21.12.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லாச்சியின் அன்புச் சகோதரரும், நீர்வேலி நடராசா செல்வலிங்கத்தின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2008) திங்கட்கிழமை மு.ப. 10மணிக்கு மைத்துனர் செல்வலிங்கத்தின் நீர்வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராச வீதி,
நீர்வேலி தெற்கு.

தகவல்:
மைத்துனர்: ந.செல்வலிங்கம்
மருமக்கள்: தாரணி, சிவபாலசிங்கம்(கிளியர்), சித்திரா, இந்திரா, விக்னேஸ்வரன், பவானி(பவா).

### Dr.பொன்னம்பலம் மகாலிங்கம்



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் பொன்னம்பலம் மகாலிங்கம் நேற்று (21.12.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கட்டத்தரணி தம்பிராசா - அன்னபூரணம் தம்பதியினரின் மருமகனும் திருமலர் தேவியின் அன்புக் கணவரும் சிவலிங்கத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புச் சகோதரனும் மஞ்சுளா தேவி (ஆசிரியை, குப்பிளான் விக்கினேஸ்வரா ம.வி.), மாலினி தேவி (கனடா), அன்னராசா (டென்மார்க்), இந்திராதேவி, விவேகானந்தன் (லண்டன்), விபுலானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் குமாரதேவன் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), பஞ்சலிங்கம் (கனடா), சசிகலா (டென்மார்க்), ஜெயக்குமார் (ஆசிரியர், நடேஸ்வராக் கல்லூரி), லவோதினி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் நிரோஜன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), அனோஜன் (யாழ். இந்துக் கல்லூரி), அபர்ணா (கொக்குவில் இந்துக் கல்லூரி), சரண்ஜா (கொக்குவில் இந்துக்கல்லூரி), சங்கீதா, கபிலன், செந்தூரன், நிலபன், எழிலன், பவிசன், அஸ்விதா, யாழினி, அகிலன் ஆகியோரின் பேரனும் இராசமணி, தனலக்சுமி, சிறிஸ்கந்தராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2008) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காடாகரம்பை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அன்னமகள்",
குப்பிளான், ஏழாலை.

தகவல்:
ம.திருமலர்தேவி (மனைவி).


## மலிவு விலையில்

5 ரூபாவுடன் Lazer Print எடுக்கவும், மற்றும் Colour Print; ஆய்வுக் கட்டுரைகள் கட்டவும் நாடவேண்டிய இடம் 'தாரங்கி', 137, பலாலி வீதி, திருநெல்வேலி.

## வாடகைக்கு உண்டு

இளவாலை, நாவலடி வைரவ கோவிலுக்கு அருகில் உள்ள மூன்று கடைக் கட்டடங்களும் வாடகைக்கு விடப்படும்.
தொடர்புக்கு: திருமதி அ.ஜீவேஸ்வரா
"பாலகிரி",
சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

Pirima சிகப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் Bahira புறொயிலர் குஞ்சுகள் 22.12.2008 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.
★றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
★சிற்றிபாம் றேடர்ஸ், கல்வியங்காடு.
★ரவி, தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
★திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி.


## கோப்பாயில் கிணறுகள் இறைப்பு

இலங்கை செஞ்சிலுவை சங்க கோப்பாய் பிரிவு தனது எல்லைப் பிரிவில் உள்ள 18 பொதுக் கிணறுகளைஇறைத்துச் சுத்தம்செய்யவுள்ளதாக அதன் செயலாளர் தெரிவித்தார்.

முதற் கட்டமாக இந்த வாரத்தில் அச்செழு, ஆவரங்கால், உரும்பிராய் பகுதிகளில் உள்ள பொதுக்கிணறுகளை இறைத் துச் சுத்தம் செய்யும் நடவடிக்[illegible] எனத் தெரிவித்தார். (202-111)


## துளிர்கள் நிறுவனத்தின் உளசமூக தொழில் வாண்மை கற்கைநெறி

- பயிற்சி பிரிவு :- 06
- பயிற்சி காலம் :- 12 மாதங்கள்
- தகைமை :- G.C.E. A/L சமூக சேவையில் ஈடுபாடு
- விரிவுரைகள் :- சனி, ஞாயிறு (வாரநாள்களில் கற்க விரும்புவோர்க்கு 2 நாள்கள் தனியான பிரிவு)
- இவற்றுடன் 06 மாதங்கள் அடிப்படை ஆங்கில சான்றிதழ் கற்கை நெறி, Spoken English Classes.

ஆர்வமுள்ள இருபாலாரும் 30.12.2008க்கு முன் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம்

குறிப்பு:- அரச, அரச சார்பற்ற ஊழியர்களும், மாணவர்களும், ஆசிரியர்களும் இக்கற்கை நெறிகளை தொடரலாம். வயது உங்களுக்கு ஒரு பிரச்சினையல்ல.

O.L.R அவனியூ,
3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

இயக்குநர்
துளிர்கள்

118, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(80994)


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
12.05.1933

மறைவு
03.12.2007

### அமரர் கதிரவேலு சின்னத்துரை

திதி: தசமி (22.12.2008)

அன்பின் இருப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் பார் போற்றும்
திண்மை உள்ளம் கொண்ட
பண்பாளர் பாரதனில் நீங்கி
ஆண்டொன்று கடந்தாலும்
ஆறாது எம் துயரம்.

இன்று (22.12.2008) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற கிரியை நிகழ்விலும், மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

40/1, குறுக்குத் தெரு,
நல்லூர்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### கனகசபாபதிஐயர் சதாசிவஐயர்

(ஓய்வு பெற்ற சிரேஷ்ட தட்டெழுத்தாளர், கட்டடங்கள் திணைக்களம், கொழும்பு)

பலாலி கிழக்கு, அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கினை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கனகசபாபதிஐயர் சதாசிவஐயர்(ஓய்வுபெற்ற சிரேஷ்ட தட்டெழுத்தாளர், கட்டடங்கள் திணைக்களம், கொழும்பு) நேற்று (21.12.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.30 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் பலாலி கிழக்கு, அம்மன் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பிரம்ஸ்ரீ கனகசபாபதிஐயர்- அன்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சபாரத்தினக்குருக்கள்-கோமதி அம்மா தம்பதியினரின் மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், சக்திகுமாரன்(முகாமைத்துவ உதவியாளர், வடமாகாண பொது நிர்வாக செயலகம், திருகோணமலை), நளினி (சுருக்கெழுத்தாளர், மக்கள் வங்கி, சுன்னாகம்), சந்திரமவுலி (பொறுப்பதிகாரி, மானிப்பாய் கிராம உப அலுவலகம், வலி.தென்மேற்குப் பிரதேச சபை, தனியார் கல்வி நிறுவன ஆங்கில ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீபவானி, சிவசர்மா, ஸ்ரீலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி ஷைலஜா விஜயானந்தசர்மா, சிந்துஜா, திவேதிகா காலஞ்சென்ற கோகுலவர்ணன் வர்ணதீபா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ( 22.12.2008) திங்கட்கிழமை மு.ப 10மணியளவில் 237, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் மேற்கில் அமைந்துள்ள அவரது தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

237, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### செல்லையா சிவசுப்பிரமணியம்



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு இல.08, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவசுப்பிரமணியம் 20.12.2008 சனிக்கிழமை பி.ப. 4 மணியளவில் காலமானார்.

அன்னார் அமரர்களான செல்லையா-செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் அமரர் கருணானந்தம் (கொடிகாமம்) அவர்களின் சகோதரனும் கந்தப்பிள்ளை - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் விஜயலட்சுமி (பவானி - கனடா)யின் அன்புத் தந்தையும் கிருஷ்ணராஜா (ராசன் - கனடா)வின் மாமனாரும் தரணிகா, மயூரன், சுஜானி, கிருஷிகா (கனடா) ஆகியோரின் பேரனும் சின்னம்மா (அமரர்), செல்லம்மா (அமரர்), இரத்தினம் (கனடா), வேலுப்பிள்ளை (அமரர்), இராசலிங்கம் (அமரர்), கனகரத்தினம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் சுப்பிரமணியத்தின் (மணியம் - சித்தங்கேணி) சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.12.2008) திங்கட்கிழமை இல.591, காலி வீதி, கல்கிசை மகிந்த அந்தியகால சேவை நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 5 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவரின் துயர் பகிர்வு அராலி மத்தி, நாகம்மாள் கோவிலடி, வட்டுக்கோட்டையில் உள்ள சகோதரன் சண்முகவடிவேல் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:- ச.நாகேஸ்வரி
நாகம்மாள் கோவிலடி,
அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
T.P. 077 6100280

தகவல்:
பவானி (மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழர்களுக்கு நீதி செய்யும் தாராளம் சிங்களத்திடம் கிஞ்சித்தும் கிடையாது

நீதியும், நியாயமும், கௌரவத்துடன் கூடிய வாழ்வுரிமையும் கேட்டு அஹிம்சை வழியில் - காந்தீய நெறியில் - சமாதான முறையில் - அமைதி மார்க்கத்தில் - போராடிய ஈழத் தமிழர்கள், அதை ஒட்டி அதிகாரத்தில் இருந்த பௌத்த - சிங்களத் தலைமைகளுடன் பல்வேறு ஒப்பந்தங்களைச் செய்தார்கள்; உடன்பாடுகளுக்கு இணங்கினார்கள்.

தமிழினத்தின் அரசியல் தன்னாட்சிக்கான கோரிக்கையின் தீவிரத்தையும், தமிழ்த்தேசிய உணர்வெழுச்சியின் வீரியத்தையும் கண்டு திகைத்த பௌத்த - சிங்கள அரசுத் தலைமைகள், தமிழர்களின் கிளர்ச்சியை முளையிலேயே அடக்குவதற்காக - வேகம் பெறும் தமிழர்களின் வெகுசனப் போராட்டத்துக்கு அரண் கட்டுவதற்காக - தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு தொடர்பான சில சலுகைகளை வழங்குவதற்குத் தயார் என்பது போல அவ்வப்போது போக்குக் காட்டின.

இந்தப் பின்புலத்தில் பௌத்த - சிங்கள அரசியல் மற்றும் அரசுத் தலைவர்களோடு உடன்பாடுகளைச் செய்யவேண்டியவரானார் தமிழர்களின் பிரதிநிதியான தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம்.

பண்டா - செல்வா, டட்லி - செல்வா என்று செய்யப்பட்ட இந்த ஒப்பந்தங்கள் எல்லாம் சிங்களத் தலைமைகளினால் கிழித்து வீசப்பட்டன. பேரினவாதத்தின் ஏமாற்று நாடகத்தில் பகடைக்காய் ஆனார்கள் தமிழர் தலைவர்கள்.

அத்தகைய சூழ்நிலைப் பின்புலத்தில்தான் ''தமிழர்களை இனி ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்'' என்று கூறினார் தந்தை செல்வநாயகம்.

அதேபோன்ற கருத்தை மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி வண.இராயப்பு ஜோசப்பும் இப்போது கூற வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்.

*''இலங்கை வாழ் தமிழ் மக்களை இனி அந்தக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். இனிமேல் சர்வதேச சமூகத்தை நம்பிப் பயனில்லை. தன்னார்வத் தொண்டர் அமைப்புகளும், உலக நாடுகளும் சமாதானம் வழங்கும் நிறுவனங்களும் தமிழ் மக்களின் மீது கரிசனை காட்டும் என நம்பியிருந்தும் பலன் இல்லை. கடைசியில் - அனைவரும் கைவிட்ட நிலையில் - இறுதியில் - அந்த இறைவனிடம்தான் கையேந்துகின்றோம். அவர்தான் எங்களை இரட்சிக்க முடியும்''* - இப்படித் தனது நத்தார் தினச் செய்தியில் அப்பட்டமாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றார் மன்னார் மறை மாவட்ட ஆயர் வண. இராயப்பு ஜோசப் அடிகளார்.

இதேபோன்ற கருத்தையே வெளியிட்டிருக்கிறார் அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபையின் தலைவர் அருட் கலாநிதி செல்லத்துரை ஜெயநேசன் அடிகளார்.

*''இன்று எமது நாடு பாரிய அழிவைச் சந்தித்துக் கொண்டு நிற்கின்றது. நீதிக்காக - சமாதானத்திற்காக - நிம்மதிக்காக - அமைதியான வாழ்க்கைக்காக - எமது மக்கள் ஏங்கித் தவிக்கின்றார்கள். நீதி கேட்கின்ற மக்கள் அநியாயமாகத் துன்புறுத்தப்படுகின்றார்கள். சமாதானத்தை எதிர்பார்த்த மக்கள், அகதிகளாக்கப்பட்டு, நிர்க்கதி நிலையில் பல இன்னல்களினால் நாளாந்தம் செத்துக்கொண்டிருக்கின்றார்கள். நீதி மறுக்கப்படுகின்றது. நிம்மதி குலைக்கப்படுகின்றது. சமாதானம் சிதைக்கப்படுகின்றது.''* - இப்படிக் கவலையும் விசனமும் தெரிவித்திருக்கின்றார் அமெரிக்கன் இலங்கை மிஷன் தலைவர் வண.ஜெயநேசன் அடிகளார்.

இவ்வாறு மதத் தலைவர்கள் விசனத்துடனும் கவலையுடனும் குறிப்பிட்டு, தமிழ் மக்களைக் காப்பாற்றுமாறு இறைவனிடம் இறைஞ்சும் அளவுக்கு இந்தத் தேசத்தில் தமிழர்களின் அமைதி வாழ்வு அவலப்பட்டு, பங்கப்பட்டுப்போய் இருக்கின்றது. தமிழினத்துக்கு எதிரான பேரினவாதக் கொடூரம் அவ்வளவு தூரத்துக்கு விஸ்வரூபம் எடுத்து பேயாட்சி புரிகின்றது. தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்ப துயரங்களை எதிர்கொண்டு பேரவலப்பட்டு நிற்கின்றார்கள்.

தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்துவது என்பதைத் தவிர, இனநெருக்கடியைத் தீர்த்து, அமைதியை நிலைநாட்டி, ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினையை நியாயமான முறையில் தீர்த்து வைப்பதற்கான தெளிவான திட்டம் - உருப்படியானதும், ஆழமான தரிசனத்துடன் நெறிக்கப்பட்டதுமான ஒரு யோசனைப் பொறி - பிரதான சிங்களத் தரப்புகளிடம் என்றும் இருக்கவில்லை. அதற்கான மனப்பக்குவமோ, தாராளமோ அவர்களிடம் அன்றும் இல்லை; இன்றும் இல்லை; இனியும் வரப்போவதும் இல்லை.

தமிழர்களின் நீதி, நியாயமான கோரிக்கைகளை - அவற்றுக்கு மூலமான கோட்பாடுகளின் அடிப்படைகளை - நியாயமான முறையில், புறநிலை நோக்குடன் ஆழமாக அலசிப் பார்த்து, முற்போக்கான முறையில் சிந் தித்து, நியாயம் செய்யும் மனப்பக்குவம், ஆட்சி அதிகாரத்திலிருக்கும் பௌத்த - சிங்களப் பேரின வாதத் தலைமைகளிடம் இல்லவே இல்லை.

அதனால்தான் தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற கோரிக்கை பல தரப்புகளாலும் இன்று முன்வைக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

தமிழர்களைக் காப்பாற்றும் அந்தக் கடவுள் யார்? அவர் எந்த வடிவத்தில் வரமுடியும் என்பதைத் தமிழர்கள் தாமே புரிந்து கொள்ள வேண்டும்.

# செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட பின்னடைவால் அடுத்த ஆண்டிலும் போர் தொடரும் நிலை

**'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை களநிலை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் 21.12.2008 அன்று அப்பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில் இருந்து சிலபகுதிகள் இங்கு தரப்படுகின்றன.**



சமீபகாலம் வரை தமிழ்ஈழ விடுதலைப்புலிகளின் அரசியல் அதிகாரப் பிரதேசமாகவிருந்த கிளிநொச்சியை மீண்டும் கைப்பற்றுவதற்கான தமது மிகப் பிரதான தாக்குதல் நடவடிக்கையை கடந்த செவ்வாய்க்கிழமை அரச படைகள் அதீத குண்டுத்தாக்குதல்களுடன் ஆரம்பித்தார்கள். சுமார் 7000 படையினர் இதில் ஈடுபடுத்தப்பட்டனர். நான்காவது ஈழப்போர் ஆரம்பமானதற்குப் பிறகு இடம்பெற்ற மிகப் பயங்கரமான மோதல் இதுவெனக் கூறப்படுகின்றது.

ஐந்து வெவ்வேறு அரங்குகளில் படையினர் மோதல்களில் ஈடுபட்டிருந்தனர். தமது கடும்நிலை போராளிகளைக் களத்தில் இறக்கியுள்ள புலிகள் கிளிநொச்சி வீழ்ச்சியுறுவதைத் தவிர்ப்பதற்கான கடும் எதிர்ப்பு மோதல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இரண்டு முனைகளில் அநேகமாக படையினரால் ஓரளவு முன்னேறி மேலும் சில பகுதிகளை தம் கட்டுப்பாட்டில் கொண்டுவரமுடிந்தது. ஏனைய பகுதிகளில் அவர்கள் தமது பழைய நிலைகளுக்குத் திரும்பும்படி செய்யப்பட்டனர்.

### மிகைப்படுத்திக் கூறுவது வழமை

போரில் பின்னடைவை சந்திப்பவர்கள் எதிர்த்தரப்பினரின் சேதங்கள் பற்றி மிகைப்படுத்திய எண்ணிக்கைகளை வெளியிடுவார்கள் என்பது வெளிப்படை. இலங்கையில் மட்டும் அது மாறுபாடானது என்று கூறமுடியாது. இந்த விடயத்தைக் கடந்தவாரம் அதிகாரப்பூர்வ மற்றும் சர்வதேச ஊடகங்கள் மெய்ப்பித்துக் காட்டியிருந்தன. அதிகாரத் தரப்பு மற்றும் புலிகளின் சேதங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் இருதரப்பினராலும் மிகைப்படுத்தப்பட்டவையாகவே காணப்பட்டதாக அவர்கள் தெரிவித்திருந்தார்கள்.

ஊடகங்கள் போர்க்களங்களுக்கு அனுமதிக்கப்படுவதில்லையென்பதால் சுயாதீனமான விவரங்களைப் பெற முடியாதிருக்கிறது. அதேசமயம் இராணுவத் தரப்பிலிருந்து பெறப்படும் தகவல்களும் முன்னர் போன்று வெளியிடப்பட முடியாதநிலை இருக்கின்றது. இதற்கான காரணம் வெளிப்படையாகும். இல்லையெனில் போர் நடவடிக்கைகளுக்கு நிதி ஆதாரங்களை அள்ளி வழங்குகின்ற பொதுமக்கள் போர் நிலைமைகளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றிருப்பார்கள். துருப்பினர் செய்யும் தியாகங்கள் மற்றும் அவர்களின் சாதனைகள் வெளிவருவதாகவிருக்கும். அவர்கள் எதிர்கொண்டுள்ள எதிர்த்தரப்பினரின் நிலைமைகளையும் உலகம் புரிந்துகொள்ள வசதி கிடைத்திருக்கும்.

கிளிநொச்சியை மீளக் கைப்பற்றுவதற்கு பெரும் எடுப்பிலான நடவடிக்கை ஒன்றை முன்னெடுப்பது தொடர்பாகப் பாதுகாப்பு மற்றும் தற்காப்பு உயர்மட்ட அதிகாரிகள் மட்டத்தில் ஆலோசனைகள் நடைபெற்று வந்ததாகக் கடந்த வாரம் பேச்சடிபட்டது.

கிளிநொச்சி எந்த நிமிடத்திலும் வீழ்ச்சியடையலாம் என்ற செய்திகள் வெளியானதால் அந்த நிகழ்ச்சியைக் கண்டு வெளியிடுவதற்கு வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் பலர் வந்திருந்தார்கள். ஆனால் அவர்களில் பலர் இப்பொழுது திரும்பிச்சென்றுவிட்டார்கள்.

செவ்வாய்க்கிழமை நள்ளிரவுக்குப் பிறகு, 53, 55 படைப்பிரிவுகள் முகமாலையில் தமது நிலைகளிலிருந்து புறப்பட்டார்கள். இவர்களின் முன் அரங்க நிலையானது குடாநாட்டையும் நாட்டின் ஏனைய பகுதிகளையும் இணைக்கின்ற குறுகிய நிலப்பரப்பின் ஊடாக செல்வதாய் உள்ளது. 53ஆவது பிரிவு கிளாலியின் மேற்குப் பக்கமாக கெரில்லா நிலைகளை நோக்கி நகர்ந்தது. 55 ஆவது பிரிவின் அணிகள் - முன்னர் புலிகளின் முதலாவது தற்காப்பு அரங்கு என்று கருதப்பட்ட பகுதியில் இப்போது இவர்கள் நிலைகொண்டுள்ளனர் - முகமாலையில் இப்போது கைவிடப்பட்டுள்ள வாயில் நிலையின் கிழக்கிலிருந்து நகரத் தொடங்கினார்கள்.

### பெரும் எடுப்பில் படைநகர்வு

எதிர்நிலைகளில் இருந்த புலிகளின் அணிகளுக்கும் இவர்களுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டது. கெரில்லாக்கள் கடும் எதிர்ப்பைக் கட்டவிழ்த்துவிட்டடிருந்தார்கள். ஆனால் படையினர் கிளிநொச்சியைப் பிடிப்பதற்கான நகர்வாக இதனை மேற்கொள்ளவில்லையென்பது அப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. சிறிது நேரத்தின்பின் அவர்கள் தமது முந்திய நிலைகளுக்குத் திரும்பிவிட்டார்கள். அப்படியான கடும் முன்நகர்வானது செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கே ஆரம்பமானது. மேலும் மூன்று அரங்குகளிலிருந்தும் ஏககாலத்தில் படைகள் நகரத் தொடங்கின.

இராணுவ செயல் அணி - 1 குஞ்சுப்பரந்தனிலிருந்து தன் முன்நகர்வை ஆரம்பித்தது. தென்திசையாகச் சென்று பின் கிழக்கு நோக்கி 'ட' எழுத்தின் வடிவில் தன் நகர்வை முன்னெடுத்தது.

இந்தப் படையணிகளின் நகர்வைத் தடுத்து நிறுத்துவதற்குப் புலிகள் ''யாழ் செல்லும் படை'' அணியையும் மாலதி படையணியையும் முன் நிறுத்திக் கடும் எதிர்ப்பை உருவாக்கி இருந்தார்கள். இருந்தாலும் படைகள் சுமார் 500 மீற்றர் தூரம் முன்னேறினார்கள்.

## கிளிநொச்சி, முல்லைத்தீவிற்காக இறுதிவரை போராட புலிகள் உறுதி

செவ்வாய்க்கிழமை மிக மோசமான மோதல்கள் அடம்பனிலேயே இடம் பெற்றது.

கடும் மழை காரணமாக களநிலைகள் சேறும் சகதியுமாக மாறிவிட்டன. முன்னாலிருந்த மண் அணை மற்றும் அகழியை நோக்கி நகர்ந்த படையணிகள் முழங்கால் மட்ட சேற்றுக்குள் நிற்க வேண்டிய நிலைக்குள்ளானார்கள். இப்பகுதியிலேயே கடும் சண்டைகள் இடம்பெற்று பல படையினர் காணாமல் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

வன்னியின் மேற்கில் இடம்பெற்று வந்த மோதல்கள் புதன்கிழமை காலையில் முடிவுக்கு வந்தன. அடுத்த இரண்டு நாள்களிலும் விட்டு விட்டு மோதல்கள் இடம்பெற்று வந்தன.

திருமுறிகண்டிக்கும் இரணைமடுவுக்கும் இடைப்பட்டதோர் இடத்தில் புலிகள் படைநிலைகள் மீது தாக்குதல் ஒன்றை தொடுத்ததால் கடும் சண்டை வெடித்தது. அந்த இடம் அடம்பனுக்கு கிழக்கில் உள்ளது.

### இருதரப்புக்கும் பலத்த இழப்பு

இருதரப்பிலும் பெரும் இழப்புகளைச் சந்தித்ததாகத் தகவல்கள் கூறின. படையினர் தாம் கைப்பற்றிய பகுதிகளில் தமது நிலைகளை மாற்றி அமைக்க வேண்டியிருந்தது.

செயல் அணி-1 மற்றும் 57ஆவது பிரிவுகளின் விடியற்காலை நகர்வு முதலில் எதிர்ப்பு இல்லாமலே இடம்பெற்றது. அதன்பின்னர் ஒன்றன்பின் ஒன்றாக நான்கு அலைவரிசைகளாகப் புலிகள் வந்து மோதினார்கள் என்று வன்னியிலுள்ள உயர்மட்ட இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார். ஊடகங்களுக்குத் தகவல் கொடுக்கும் அதிகாரம் இல்லையென்பதால் பெயர் வெளியிட அவர் விரும்பவில்லை. சில சமயங்களில் அருகாமையில் இருந்தே சண்டை செய்தார்கள். அச்சமயங்களில் சிறு ஆயுதங்களையும் யந்திரத் துப்பாக்கிகளையும் அவர்கள் பயன்படுத்தினார்கள் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். ஏனைய இடங்கள் மோட்டார் குண்டுகள் வந்து விழுந்தன. மோட்டார் பருவக்காற்று வீசியது என்று சொல்ல வேண்டும் என்றார் அவர்.

கெரில்லாக்கள் தமது வெடிபொருள்கள், ஆட்டிலறிகள், மோட்டர்கள், எறிகுண்டுகள் மற்றும் ஏனைய இராணுவப் பொருள்களின் கையிருப்புகளை மீள புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது இரகசிய புலனாய்வுத் தகவல்களிலிருந்து தெரியவருகிறது. கடற்படையினரும் இதனை ஊர்ஜிதப் படுத்தினார்கள். நான்கு கெரில்லா படகுகளைத் தாம் தாக்கி அழித்ததாக அவர்கள் கூறியுள்ளார்கள். அந்தப் படகுகள் இராணுவ சாதனங்களை ஏற்றிவந்த ஒரு கப்பலுக்கு பாதுகாப்பு அளித்து வந்ததாகக் கருதப்படுகின்றது. முல்லைத்தீவுக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளதாம். கடந்தவாரம் புதிதாக உருவாக்கப்பட்ட செயல் அணி-4 வெலிஓயா அரங்குப் பகுதியில் களம் இறக்கப்பட்டது. இப்பகுதியில் படையினர் இன்னமும் புலிகளின் எதிர்ப்பு நிலைகளைச் சென்றடையவில்லை.

### 5ஆவது செயல் அணியை உருவாக்க ஏற்பாடு

5ஆவது செயல் அணி ஒன்றை உருவாக்குவது இராணுவத்தின் திட்டங்களில் ஒன்றாக இருந்து வருகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு இராணுவத்துக்கு ஆள்சேர்க்கும் செயற்பாடுகள் மும்முரப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த வருடம் ஆள்சேர்ப்பில் 32 ஆயிரம் பேர் கலந்துகொண்டனர். இந்த வருடம் ஜனவரியிலிருந்து நவம்பர் வரையான ஆள்சேர்ப்பில் 38 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். இராணுவத்தின் விசேஷப் பிரிவுகளான சிறப்புப்படையணிகள் மற்றும் கொமாண்டோ அணிகளை விஸ்தரிக்கவும் இராணுவத்தினர் விரும்புகின்றனர்.

### புலிகள் நடத்தும் இறுதிப் போராம் இது

தமிழர்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காகத் தாம் நடத்தும் கடைசிப் போர் இதுவாகும் என புலிகளின் தலைவர்கள் பொதுமக்களிடம் கூறியிருப்பதாகத் தெரியவருகின்றது.

கிளிநொச்சியையும் முல்லைத்தீவையும் தற்காத்துக்கொள்ள இறுதிவரை போராடப் போவதாக அவர்கள் தமது தலைவருக்கு வாக்குறுதியளித்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட பெரும் பின்னடைவுடன் இந்த வருட இறுதிவரைக்கும் இன்னொரு தடவை கிளிநொச்சி முல்லைத்தீவை மீட்டெடுக்கும் தீவிர செயல்பாடு நடைபெற மாட்டாது என்று கருதலாம். இதன் தெளிவான கருத்து என்னவென்றால் 4ஆவது ஈழப்போரானது 2009ஆம் ஆண்டிலும் தொடரும். அதுபோலவே கிளிநொச்சியை மீட்டெடுப்போம். அதன்பிறகு முல்லைத்தீவு என்ற கோஷங்களும் மீள முழங்கப்படும் என்பதாகும். (ப)



## நாளை

| | |
|---|---|
| மார்கழி 08 | 23.12.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | மு.ப. 11.01வரை |
| நட்சத்திரம்: | சுவாதி |
| | மு.ப. 11.47வரை |
| சுபநேரம்: | 10.56 - 12.26 |
| ராகுகாலம்: | 03.26 - 04.56 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா தவிர்ந்த ஏனைய நாடுகளின் துருப்புகள் ஈராக்கில் தங்கியிருக்க அனுமதிக்கும் பிரேரணை தோல்வி

பக்தாத், டிச. 22

2008 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் அமெரிக்கா தவிர்ந்த பிரிட்டிஷ், அவுஸ்திரேலியா மற்றும் இதர நாடுகளின் படைகள் ஈராக்கில் தொடர்ந்து நிலைகொள்வதற்கு அனுமதி அளிக்கும் வரைவுத் திட்ட மசோதா ஈராக்கிய நாடாளுமன்றத்தில் தோல்வி கண்டது.

இப்படைகள் ஈராக்கில் நிலைகொள்வதற்காக ஐ.நாவர்ல் விதிக்கப்பட்ட காலஎல்லை டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இப்படைகளின் பிரசன்னத்தை நீடிப்பதற்கான மசோதா, ஈராக்கிய நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அமெரிக்கத் துருப்புகள் தவிர்ந்த இதர நாடுகளின் 6 ஆயிரம் துருப்புகள் தொடர்ந்தும் நிலைகொள்வதற்கு வழிசெய்யும் பொருட்டு, இந்த வரைவு மசோதா உருவாக்கப்பட்டது.

நாடாளுமன்ற வாக்கெடுப்பில் மசோதாவுக்கு எதிராக 80 வாக்குகளும், ஆதரவாக 68 வாக்குகளும் அளிக்கப்பட்டன. தோல்வியுற்ற இந்த மசோதா திருத்தங்களுக்காக மீள அமைச்சரவைக்கு அனுப்பப்படவுள்ளது.

அமைச்சரவையின் திருத்தங்களோடு இம் மசோதா அடுத்த வாரம் மீள நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அதிகாரபூர்வ வட்டாரமொன்று பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தது.

நாடாளுமன்ற விவாதத்தில், சுனி ஈராக்கிய கூட்டு முன்னணிப் பிரதிநிதி ஹூஸைன் அல்-பளுஜி பேசுகையில், ''ஈராக்கிற்கும் இதர நாடுகளுக்குமிடையிலான உறவுகள் சர்வதேச சட்டத்துக்கிணங்க உருவாக்கப்பட வேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார்.

''பரஸ்பர நல்லுறவுகள், ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் ஆகியவற்றின் மூலமாக நிறுவப்பட வேண்டும். இந்த மசோதா இவற்றிற்கு அப்பாற்பட்டது. இது அரசின் மிகப் பெரிய தவறு. அதனால்தான், நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டுவிட்டது'' என பின்னர் இவர் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

''இந்த மசோதா தோற்கடிக்கப்பட்டமை ஒரு தேசிய சாதனை. ஐ.நாவால் விதிக்கப்பட்ட காலஎல்லை முடிவடைந்ததும், அந்நியத் துருப்புகள் வெளியேற நிர்ப்பந்திக்கப்படும் என நான் நம்புகிறேன்'' என கடும் போக்காளரான ஷியா மதகுரு மொஹ்டடா சத்ரின் விசுவாசியான நஸார் அல்-இஸாவி, எம்.பி. ஊடகமொன்றிற்குத் தெரிவித்தார்.

அதேவேளை, 1,40,000 அமெரிக்கத் துருப்புகள் 2011 ஆம் ஆண்டு இறுதிவரை தொடர்ந்தும் நிலைகொள்ள தனிப்பட்ட இராணுவ உடன்படிக்கையொன்றின் மூலமாக அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

# டென்வர் விமான நிலையத்தில் ஜெற் விபத்து; 40 பேர் காயம்

டென்வர், டிச. 22

டென்வர் சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட ஜெற்விமானமொன்று ஓடு பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் 40பேர் காயமடைந்தனர். இவ் விமானம் டென்வரிலிருந்து ஹூஸ்டனை நோக்கிப் புறப்படவிருந்தது என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

107 பயணிகளுடனும் ஐந்து சிப்பந்திகளுடனும் போயிங் 737 என்னும் இவ்விமானம் புறப்பட்டதும் ஓடு தரையிலிருந்து விலகி விபத்துக்குள்ளனது. அதேவேளை விமானத்திலும் தீப்பற்றிக் கொண்டது என விமான நிலைய முகாமையாளர் ஏ.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

''காயமடைந்த 38 பேர் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். சனிக்கிழமை மாலை நிகழ்ந்த இவ்விபத்துக்கான காரணம் உடனடியாக வெளியாகவில்லை. விசாரணை மேற் கொள்ளப்பட்டுள்ளது'' என்றும் அவர் விளக்கினார்.

விபத்து நிகழ்ந்த சமயத்தில்டென்வரில் குளிரான காலநிலை நிலவியது. எனினும் பனிப்பொழிவு ஏற்படவில்லை. விமானத்தில் பற்றிய தீ உடனடியாக, தரை யிலிருந்த அதிகாரிகளால் அணைக்கப்பட்டது என விமான நிலையப் பேச்சாளர் ஜெப்கிரீன் ஏ.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

# அடுத்த வருடம் ஆப்கானிஸ்தானுக்கு மேலும் 30 ஆயிரம் வெளிநாட்டுத் துருப்புகள்

வாஷிங்டன், டிச. 22

அடுத்த ஆண்டு ஆப்கானிஸ்தானுக்கு மேலதிகமாக 30 ஆயிரம் துருப்புகள் அனுப்பி வைக்கப்படும் எனக் கூட்டுத் தலைமை அதிகாரிகளுக்கான தலைவர் அட்மிரல் மிக்கி முல்லன் தெரிவித்தார். இதன் மூலம் ஆப்கானில் நிலைகொண்டுள்ள வெளிநாட்டுத் துருப்புகளின் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆப்கானில் தற்போது 31 ஆயிரம் துருப்புகள் நிலைகொண்டுள்ளன. இவற்றில் 14 ஆயிரம் துருப்புகள் நேட்டோ தலைமையிலான சர்வதேச பாதுகாப்பு உதவிப்படையில் அங்கம் வகிக்கின்றன. இசாப் என்னும் இந்த உதவிப்படையில் மொத்தம் 51 ஆயிரம் துருப்புகள் உள்ளன.

ஆப்கான் தலைநகரான காபூலுக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய அட்மிரல் மிக்கி முல்லன், பத்திரிகையாளர் மாநாடொன்றில் ஆப்கானின் பாதுகாப்பு நிலைவரத்தை விளக்கினார். அதிகரித்துவரும் தலிபான் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் ஆப்கானில் முறியடிக்கப்பட்டுவிடும் என அவர் தெரிவித்துக்கொண்டார்.

''ஆப்கானில் தலிபான் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன. அவர்களோடு இதர இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த அல்-குவைதா தீவிரவாதப் போராளிகளும் இணைந்துள்ளார்கள். இவர்களின் கூட்டுத் தாக்குதல்கள் பல்வேறு பாகங்களிலும் இடம் பெற்று வருகின்றன'' என்றும் அவர் கூறினார்.

''ஆப்கானுக்கு 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் துருப்புகள் வரை அடுத்த ஆண்டில் அனுப்பி வைக்கப்படும். எனினும், சரியான எண்ணிக்கை இன்னும் முடிவு செய்யப்படவில்லை. தேவையை நாம் அங்கீகரித்துள்ளோம். இது பூர்த்தி செய்யப்படும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''பெரும்பாலான துருப்புகள் தென் ஆப்கானுக்கே அனுப்பி வைக்கப்படும். இவை அங்குள்ள பிரிட்டிஷ், கனேடிய, டச்சு துருப்புகளோடு இணைந்து செயற்படும். அங்குதான் தலிபான் போராளிகளின் தாக்குதல்கள் உச்சமடைந்துள்ளன. அவர்களுக்கு எதிரான சண்டை தீவிரமடையும்'' என்றும் மிக்கி முல்லன் தெரிவித்தார்.

''அடுத்த ஆண்டு ஈராக்கிலிருந்து மீளப் பெறப்படும் அமெரிக்கத் துருப்புகளும் ஆப்கானுக்கு அனுப்பி வைக்கப்படும். அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பராக் ஒபாமாவையும், எதிர்வரும் மாதங்களில் ஆப்கான் பிராந்திய விவகாரத்துக்குப் பரிகாரம் கண்டுவிடுமாறு ஆலோசகர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்'' என்றும் மேலும் அவர் விவரித்தார்.

உலக அரங்கில்

# பாக். தீவிரவாதிகளின் முகாம்களை இந்தியா எந்த நேரத்திலும் தாக்கக் கூடும்

## சர்வதேச உளவு நிறுவனங்கள் தகவல்

புதுடில்லி, டிச. 22

பாகிஸ்தானிலுள்ள தீவிரவாத முகாம்களை, எந்த நேரத்திலும் இந்தியா தாக்கக்கூடும் என்ற தகவலை சர்வதேச உளவு நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன.

மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலை தொடர்ந்து, பாகிஸ்தான் மீது இந்தியா போர் தொடுக்கும் என்று பரபரப்பான தகவல்கள் வெளியாகி வந்தன. ஆனால், பாகிஸ்தான் மீது போர் தொடுக்கும் திட்டம் இல்லை என்று இந்தியா தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், 'ஸ்டிராட்பர்' போன்ற சர்வதேச அளவிலான தனியார் உளவு நிறவனங்கள் பாகிஸ்தான் மீது இந்தியா நேரடியாக போர் தொடுக்காவிட்டாலும், அங்குள்ள தீவிரவாத முகாம்களை அழிப்பதற்காக தாக்குதல் நடத்தலாம் என்ற கணிப்பை வெளியிட்டுள்ளன.

அந்த உளவு நிறுவனம் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

இந்தியா தற்போது உலக நாடுகள் மூலம் தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாகிஸ்தானை நிர்ப்பந்தித்து வருகிறது. ஆனால், பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்காது என்பதும், நடவடிக்கை எடுக்க முடியாது என்பதும் இந்தியாவுக்குத் தெரியும். அதனால், பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்கத் தவறினால், இந்தியாவின் பொறுமை நீடிக்காது என்றும் உலக நாடுகளிடம் தெரிவித்து வருகிறது.

எல்லைப் பாதுகாப்புப் படையை உஷார் படுத்தி, மேற்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் ஊடுருவலைத் தடுக்க தீவிர நடவடிக்கை மேற்கொண்டுவரும் சூழ்நிலையில், எந்த நேரத்திலும் பாகிஸ்தானிலுள்ள குறிப்பாக பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயற்பட்டுவரும் தீவிரவாத பயிற்சி முகாம்களை அழிப்பதற்காக எந்த நேரத்திலும் இந்தியா தாக்குதல் தொடங்கலாம். தரை வழியாகவோ அல்லது வான் வழியாகவோ இந்தத் தாக்குதல் நடைபெறலாம்.

அதுவும் இந்தியா மீது மீண்டும் தீவிரவாத தாக்குதல் எதுவும் நடைபெற்றால், அடுத்த வினாடியே தாக்குதல் நடப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

- இவ்வாறு அந்த உளவு நிறுவனம் தெரிவித்து இருக்கிறது.

# தினமும் 20 லட்சம் பீப்பாய் எண்ணை உற்பத்தியை குறைப்பதற்கு பெற்றோலிய நாடுகள் தீர்மானம்

## விலை வீழ்ச்சியைத் தடுக்க இந்த ஏற்பாடு

துபாய், டிச. 22

மசகு எண்ணெய் விலைவீழ்ச்சி அடைவதைத் தடுப்பதற்காக தினமும் 20 இலட்சம் பீப்பாய்கள் எண்ணெய் உற்பத்தியைக் குறைக்க பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (ஓபெக்) முடிவு செய்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 147 அமெரிக்க டொலராக இருந்தது. ஆனால், இப்போது இந்த விலை 50 டொலருக்கும் குறைவாகவுள்ளது.

இது குறித்து பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு கவலை கொண்டுள்ளது. அல்ஜீரியாவில் இந்த அமைப்பின் அவசரக் கூட்டம் நடைபெறவுள்ளது.

சவூதி அரேபியாவில் எண்ணெய்த்துறை அமைச்சர் அலி நயாமி, ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் தினமும் உற்பத்தி செய்யப்படும் மசகு எண்ணெயில் 20 இலட்சம் பீப்பாய்களைக் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் இதற்கு உறுப்பு நாடுகள் சம்மதித்துள்ளன என்றும் தெரிவித்தார்.

இந்த அமைப்பில் சேராத ரஷ்யா, அஜர்பைஜான் ஆகிய நாடுகளும் மசகு எண்ணெய் உற்பத்தியில் தினமும் 6 இலட்சத்து 60 ஆயிரம் பீப்பாய்களைக் குறைக்கப் போகின்றன என அறிவித்துள்ளன.

இது தொடர்பாக ரஷ்ய துணைப் பிரதமர் இகோர் செச்சின் கூறுகையில், ரஷ்ய எண்ணெய் நிறுவனங்கள் சந்தைக்கு அனுப்பும் எண்ணெய் அளவைக் குறைக்க ஏற்கனவே முடிவெடுத்துள்ளன என்றும் ஒரு நாளைக்கு சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் பீப்பாய்கள் அளவுக்கு இந்த எண்ணெய் குறைப்பு இருக்கும் என்றும் கூறினார்.

அஜர்பைஜான் எண்ணெய் உற்பத்தியில் தினமும் 3 இலட்சம் பீப்பாய்கள் அளவுக்கு குறைக்கப்படும் என்று அந்த நாட்டின் எரிசக்தித் துறை அமைச்சர் நட்டிக் தெரிவித்தார்.

# இராணுவம் - தீவிரவாதிகள் வடமாலியில் கடும் மோதல்

## இரு தரப்புகளிலும் 20 பேர் பலி

பாமகோ, டிச. 22

வடமாலியில் இராணுவத்துக்கும், டுயாரக் தீவிரவாதிகளுக்குமிடையே மூண்ட மோதலில் 20 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 9 இராணுவ வீரர்களும், 11 தீவிரவாதிகளும் அடங்குவர். அத்துடன் இராணுவ வீரர்களில் பலர் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுள்ளனர் என மாலியின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

தலைநகரான பாமகோவின் வட-கிழக்கே 500 கிலோ மீற்றர் (310 மைல்) தொலைவிலுள்ள நம்பாலா நகரில் இந்த இராணுவத் தளம் அமைந்துள்ளது. இதன்மீது டுயாரக் தீவிரவாதிகள் தாக்குதலைத் தொடங்கியதும் இரு சாராருக்குமிடையே சண்டை மூண்டது என நகர அதிகாரியொருவர் கூறினார்.

''இந்த இராணுவ முகாம் மீது பொழுது புலர்வதற்கு முன்னர் மும்முரத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் இருபதுக்கு மேற்பட்ட இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டார்கள். பெருந்தொகையான வீரர்கள் காயமடைந்தார்கள்'' எனத் தீவிரவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தீவிரவாத அமைப்புக்கும், அரசுக்குமிடையே ஜூலையில் சமாதான உடன்படிக்கையொன்று கைச்சாத்தானது. அதன் பின்னர் மூண்ட முதல் மோதலாகுமிது. முன்னாள் இராணுவ ஜெனரலும், மாலியன் ஜனாதிபதியுமான அமடு ரமணி டூரியின் கடந்த வார அறி[illegible] மோதல் மேற்கொள்ளப் [illegible] இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

''தீவிரவாதிகள் ஆயுதங்களை கீழே போட வேண்டும். போர் வேண்டுமென எண்ணுபவர்கள் வேறு எங்காவது போகலாம். நான் சமாதானத்தையே விரும்புகிறேன்'' என ஜனாதிபதி தமது வடமாலி விஜயத்தின்போது குறிப்பிட்டிருந்தார்.

புதிய தாக்குதல் தொடர்பாக இராணுவ வட்டாரங்கள் குறிப்பிடுகையில், ''சனிக்கிழமை அதிகாலைக்கு முன்னர், நம்பாரா இராணுவ முகாமை நோக்கி இருபதுக்கும் மேற்பட்ட வாகனங்களில் வந்த தீவிரவாதிகள் இத்திடீர்த் தாக்குதலை மேற்கொண்டார்கள். இதையடுத்து, இரு சாராருக்குமிடையே மூர்க்கமான சண்டை மூண்டது'' எனக் குறிப்பிட்டன.

ஜூலை மாத சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட மறுத்து மாற்றங்களுக்கான வடமாலி டுயாரக் கூட்டமைப்பு இத்தாக்குதலுக்கு உரிமை கோரி அதன் இணையம் மூலமாக அறிக்கையொன்றை விடுத்துள்ளது. இந்த தீவிரவாத கூட்டமைப்பின் தலைவராக இப்ராஹிம் அக் பஹங்கா இருந்து வருகிறார்.

இத் தலைவருக்கு நெருங்கிய வட்டாரமொன்று ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்திற்குத் தகவல் தருகையில், ''இந்தத் தாக்குதலில் எங்கள் போராளிகளின் கை உயர்ந்துள்ளது. இருபதுக்கு மேற்பட்ட இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்'' எனத் தெரிவித்தது.

இந்த அமைப்பின் பேச்சாளர் ஹமா ஹக்சித் அஹ்மத் குறிப்பிடுகையில், பேச்சுகளில் ஈடுபடுமாறு அரசை முடுக்கிவிடவே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது - என்றார்.

# நைஜீரியாவிலுள்ள ரஷ்ய நிறுவனத்தின் பணியாளர்கள் இருவர் கடத்தல்

அம்புஜா, டிச. 22

நைஜீரியாவிலுள்ள ரஷ்ய அல்ஸ் கொன் அலுமினிய நிறுவனத்தைச் சேர்ந்த இரு ஊழியர்கள் துப்பாக்கிதாரிகளால் கடத்தப்பட்டுள்ளார்கள் என இந்த நிறுவன அதிகாரி யூ.சி.ரஸல் அறிக்கையொன்றின் வாயிலாகத் தெரிவித்துள்ளார்.

நைஜீரிய கழிமுக நகரான இகோட் அபாஸியில் இவ்விரு ஊழியர்களும் கடத்தப்பட்டுள்ளார்கள். இவர்களை மீட்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களின் கரையோர வசிப்பிடத்தின் முன் புறம், அதிவிரைவான படகுகளால் தாக்கப்பட்டது. நைஜீரியாவில் சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்துள்ளன. அதனால் எண்ணெய் நிறுவனங்களிடமிருந்து பெருந்தொகையான பணவசூலிப்பில் ஆயுதக் கும்பல்கள் ஈடுபட்டு வருகின்றன என நிருபர்கள் குறிப்பிட்டார்கள்.

''நைஜீரியாவில் வெளிநாட்டினருக்கு எதிரான தாக்குதல்கள் சர்வ சாதாரணமானவை. அதேவேளை, கடத்தப்பட்ட இரு ஊழியர்களும் எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரம் வெளியாகவில்லை'' என இதார்-டாஸ் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

2006 ஆம் ஆண்டு முதல் நைகர் கழிமுக எண்ணெய் வளப் பிராந்தியத்திலிருந்து இருநூறுக்கு மேற்பட்ட வெளிநாட்டினர் தீவிரவாதிகளால் கட[illegible] உத்தியோகப்பூர்வ [illegible] குறிப்பிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டப் பிரதேச சபைகளின் ஆதன வரிகளின் மறுமதிப்பீடு

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ்.மாவட்டத்தின் பிரதேச சபைகளினது ஆதனவரிகளின் மறுமதிப்பீடு அடுத்த வருடம் முற்பகுதியில் இடம்பெறவுள்ளது.

மதிப்பீட்டுத் திணைக்கள தலைமை மதிப்பீட்டாளர் இதற்கான உறுதிமொழியளித்துள்ளார்.

எனவே உள்ளூராட்சி சபைகள் இதற்கான ஆரம்பக் கட்ட வேலைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என வடக்கு மாகாண உள்ளூராட்சி, நிவாரண மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

ஆதன வரி மீள்மதிப்பீடு தொடர்பாக மேலும் அவர் தெரிவித்திருப்பதாவது;

உள்ளூராட்சிச் சபை ரீதியாக சகல வீடு, காணிகளும் தனித்தனியாக அட்டவணைப்படுத்த வேண்டும். மேலும் தெருக்கள் ரீதியாக ஆதனங்கள் இலக்கமிடப்பட வேண்டும். குடிமதிப்பீடுகளும் செய்யப்படுதல் வேண்டும்.

கடைகள், வீடுகளுடன் கூடிய கடைகள் என்பவற்றின் நீளம், அகலம், உரிமையாளர் பெயர் விபரம் பதிவு செய்யப்படுவதுடன் உத்தேச வியாபார மாதாந்த புரழ்வு, கிடைக்கக்கூடிய லாபம் அனைத்தும் பெயரேட்டில் தனித்தனியாகப் பதிவு செய்ய வேண்டும்.

இந்த வேலையைத் துரிதப்படுத்தி உள்ளூராட்சி உதவியாளர்கள் தலைமையில் தொழில்நுட்ப அலுவலர், முகாமைத்துவ உதவியாளர்கள், வருமான மேற்பார்வையாளர்களை உடன் ஈடுபடுத்த வேண்டும் என்று கேட்டுள்ளார். (202-95)

# ஒரு மிளகாய் 2 ரூபா!

வலி.வடக்கு, டிசெ.22

குடாநாட்டில் சில்லறை வியாபார நிலையங்களில் பச்சைமிளகாய் ஒன்று 2 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

கடந்த மாத இறுதியில் பெய்த பெருமழையாலும் வெள்ளத்தாலும் மரக்கறிப் பயிர்கள் பெரும்பாலும் அழிவடைந்தன. இதனால் தற்போது குடாநாட்டின் சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் என்றுமில்லாதவாறு உயர்வடைந்து நுகர்வோரைத் திக்குமுக்காட வைத்துள்ளன.

பச்சை மிளகாய் கிலோ 800 ரூபா முதல் ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இந்த விலையேற்றத்தால் நுகர்வோர் பச்சை மிளகாயை அதிகளவில் கொள்வனவு செய்யாது ஒன்று, இரண்டெனக் கொள்வனவு செய்கின்றனர். இதையடுத்து வியாபாரிகளும் ஒரு மிளகாய் 2 ரூபாய் என விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. (202-86)

# தீவனங்கள் போதியளவு விற்பனை

கோப்பாய், டிசெ.22

யாழ்.மாவட்ட கால்நடை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தால் உற்பத்தி செய்யப்படும் தீவனங்கள் பாவனையாளர்களுக்கு போதியளவு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் கடனடிப்படையிலும் அங்கத்தவர்களுக்கு இந்தத் தீவனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் தீவனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பாவனையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தன. எனினும் தற்போது தேவையான அளவு தீவனங்கள் வழங்கப்படுவதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, பால் உற்பத்தியை பெருக்கும் வகையில் மாடு வளர்ப்பை மேலும் ஊக்குவிக்கும் முகமாக பால் வழங்கும் அங்கத்த வர்களுக்கு 25 ஆயிரம் ரூபா கடன் வழங்கும் திட்டமும் நடைமுறையில் உள்ளதாகவும் 'லாண்ட் ஒ லேக்ஸ்' நிறுவனம் இச்சங்கத்தின் தரத்தை உயர்த்துவதற்கான செயற்றிட்டங்களுக்கு அனுசரணை வழங்கி வருவதாகவும் சங்கத்தின் பொது முகாமையாளர் தி.ஜெய கணேஷ் தெரிவித்தார். (50-72)

# தென்மராட்சி தெற்கில் கோயில்கள் சேதம்

யாழ்ப்பாணம், டிசெ.22

அண்மையில் வீசிய 'நிஷா' பெரும் மழையுடன் கூடிய காற்றினால் தென்மராட்சி தெற்குப் பகுதியிலுள்ள கோயிலாக் கண்டி மத்தி - மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய மடப்பள்ளியின் கூரைச் சீற் - கோயிலாக் கண்டி அம்பலத்தடி வைரவர் ஆலய ஓடுகள், கோயிலாக் கண்டி திரு மூலாட்டினேஸ்வரர் ஆலய மண்டப சீற் என்பன காற்றினால் தூக்கி வீசப்பட்டு சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (202-131)

# நிகழ்வுகள்

நல்லூர், டிசெ.22

அச்செழு வளர்மதி சனசமூக நிலைய முன்பள்ளியின் கலைவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் க.கந்தசாமி தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி.கிழக்கு கோப்பாய் பிரிவின் தலைவர் இ.மயில்வாகனம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

பாடசாலையில் இருந்து விடைபெறும் மாணவர்கள் புதிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு, ஆசிரியர் கௌரவிப்பு, பேச்சுப் போட்டிகள், கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (202-711)

* * *

வடமராட்சி, டிசெ.22

கிறிஸ்து பிறப்பு ஒளி விழா கற்கோவளம் மெதடிஸ்த தேவாலயத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கும், நெல்லியடி மெதடிஸ்த தேவாலயத்தில் வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளது. (212-236)

* * *

வடமராட்சி, டிசெ.22

கிறிஸ்து பிறப்பு இன்னிசை வழிபாடு கற்கோவளம் மெதடிஸ்த தேவாலயத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கும் கரவெட்டி இடைக்குறிச்சி தேவாலயத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 10 மணிக்கும் நடைபெறவுள்ளது. (202-236)

* * *

வடமராட்சி, டிசெ.22

கிறிஸ்துவின் திரு அவதார நிகழ்வை ஒட்டிப் பருத்தித்துறை - கட்டைவேலி சேகர மெதடிஸ்த திருச்சபையின் ஏற்பாட்டில் நத்தார் பாடகர் குழு வீடு சந்திப்பு நிகழ்வுகள் கட்டை வேலி, அல்வாய், கரவெட்டி இடைக்குறிச்சி பருத்தித்துறை ஆகிய மெதடிஸ்த தேவாலயப் பிரிவுகளில் நாளை செவ்வாய்க்கிழமையும், நெல்லியடி மெதடிஸ்த தேவாலயப் பிரிவில் நாளை மறுதினம் புதன்கிழமை யும் நடைபெறவுள்ளது. (202-236)

# வலி.கிழக்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார விழா

யாழ்ப்பாணம், டிசெ.22

வலி.கிழக்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிறைவு நாள் விழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபைச் செயலர் த.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்துகொள்வார்.

இவ்விழாவையொட்டி பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

கட்டுரை

*கனிஷ்ட பிரிவு:* வ.திவாகரன் (கோப்பாய் சரவணபவனந்த வித்தி.), க.நவநிதி (கோப்பாய் சரபவனந்த வித்தி.), ந.ரேணிகா (புனித தெரேசா மகளிர் கல்லூரி).

*சிரேஷ்ட பிரிவு:* இ.வேணுஜா (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி.), அ.அருள் பிரியா (புனித தெரேசா மகளிர் கல்லூரி), ப.மதுஷா (ஆவரங்கால் மகாஜனா),

*உயர் பிரிவு:* சி.சுகன்யா (புனித தெரேசா மகளிர் கல்லூரி), நி.தனஞ் செனி (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), வைரம் மிகா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

பேச்சு

*கனிஷ்ட பிரிவு:* வே.கிறிஷ்ணவி (புனித தெரேசா மகளிர் கல்லூரி), ந.அஜந்தா (புனித தெரேசா மகளிர் கல்லூரி), சி.சங்கீதா (புனித தெரேசா மகளிர் கல்லூரி)

*சிரேஷ்ட பிரிவு:* பு.நிக்ஷலா (புனித தெரேசா மகளிர் கல்லூரி), தே.நிவேக்கா (புனித தெரேசா மகளிர் கல்லூரி), இ.இதயதீபா (நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை)

*உயர் பிரிவு:* கு.தட்ஷாயினி (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ம.கெலன் சோபியா (புனித தெரேசா மகளிர் கல்லூரி), சி.சாமந்தி (புனித தெரேசா மகளிர் கல்லூரி) (202)

# 120 பேரின் வாகன இலக்கத்தகடுகள் யாழ்.மாவட்ட போக்குவரத்துத் திணைக்களத்தில்

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக் களத்துக்கு 120 பேரின் வாகன இலக்கத் தகடுகள் கிடைத்துள்ளன.

உரிமையாளர்கள் பதிவுப் புத்தகம் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றைச் சமர்ப்பித்து அலுவலக நாள்களில் இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் கேட்டுள்ளார். கிடைக்கப்பெற்ற இலக்கத் தகடுகளில் பிறமாகாணங்களில் வாகன உடமைமாற்றம் செய்யப்பட்டு அதற்கான வாகனப் பதிவுப் புத்தகம் கிடைத்தவர்கள் தமது பிறமாகாணத்திற்குரிய வாகன இலக்கத் தகடுகளை ஒப்படைத்து தமது புதிய இலக்கத் தகடுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

NP GA - 4912, NP GB - 3030, NP GB - 4185, NP GC - 5508, NP GD - 4461, NP GG - 9229, NP GH - 5269, NP GH - 7404, NP GI - 9963, NP GI - 2601

NP GI - 4644, NP GI - 7652, NP GK - 1722, NP GK - 1736, NP GK - 1877, NP GK - 1927, NP GK - 2004, NP GK - 4213, NP GK - 9472, NP GL - 8562, NP GL - 8975, NP GL - 9017, NP GL - 9067, NP GM - 1872, NP GN - 4510, NP GN - 7568, NP GO - 0062, NP GO - 0947, NP GO - 3401, NP GO - 4222

NP GO - 5590, NP GO - 5896, NP GP - 6562, NP GP - 7016, NP GQ - 2013, NP GQ - 2877, NP GQ - 8598, NP GR - 0533, NP GR - 9558, NP GR - 9802,

NP GS - 8654, NP GT - 0087, NP GT - 0171, NP GT - 0303, NP GT - 2237, NP GT - 6541, NP GT - 6464, NP GT - 6526, NP GT - 9706, NP GU - 3102, NP GV - 4835, NP GW - 5327, NP GW - 9685, NP GX - 9110, NP HA - 8502, NP HA - 9892, NP HC - 5261, NP HC - 6453, NP HE - 1900, NP HI - 2683, NP HI - 4893, NP HK - 3648,

NP HK - 3649, NP HK - 5302, NP HM - 9441, NP HN - 2000, NP HN - 4381, NP HN - 7326, NP HN - 9260, NP HO - 0488, NP HO - 9106, NP HO - 9369, NP HR - 2184, NP HR - 2215, NP HR - 2229, NP HR - 2233, NP HR - 5726, NP HS - 6857, NP HS - 7965, NP HS - 4065, NP HT - 1697, NP HV - 1348, NP HV - 3147, NP HV - 3176, NP HV - 3178, NP HV - 3180, NP HV - 9237, NP JA - 1817, NP JC - 4555, NP JC - 5328, NP JC - 8376, NP JD - 1285, NP JD - 7109, NP JG - 1235, NP JJ - 2756, NP JJ - 5675, NP JJ - 7670, NP JL - 9153, NP JN - 6794, NP JP - 8227, NP JQ - 5519, NP JR - 3616, NP JU - 7157, NP JW - 0755, NP JX - 3533, NP JY -0749, NP KA 1860, NP KB - 6397, NP ME - 7171, NP QA - 0767, NP QA - 6618, NP QC - 1054, NP RA - 1103, NP RA - 2427, NP RD - 4021, NP TR - 6843, NP HJ - 0962, NP HJ - 4220, NP JA 2071.




# வெள்ளத்தால் காலம் மாறிப் போச்சுது; கொழும்பிலிருந்து மரக்கறி இறக்குமதி!

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு மரக்கறிப் பொருள்கள் ஏற்றுமதி செய்த காலம்மாறி, தற்போது கொழும்பில் இருந்து யாழ்ப்பாணச் சந்தைக்கு மரக்கறி எடுத்து வரப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

அண்மைய இயற்கை அனர்த்தத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் மரக்கறிகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கிலோ ஆயிரம் ரூபாவை சில மரக்கறி வகைகள் எட்டியுள்ளன. இந்நிலையில் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்ட கத்தரிக்காய், போஞ்சி போன்றவை மருதனார்மடம் சந்தைக்கு விற்பனைக்கு வந்திருந்ததை அவதானிக்க முடிகிறது.

கத்தரிக்காய் கிலோ 600 ரூபாவாகவும் போஞ்சி கிலோ 700 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன. (202-45)

# மருந்துகள் அன்பளிப்பு

வேலணை, டிசெ.22

வேலணை வைத்தியசாலைக்கு லயன் கங்கைவேணியன் ஒரு தொகுதி மருந்துப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

அண்மையில் இவ் வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அதன்போதே அவர் இந்த உதவியைச் செய்துள்ளார். (202-267)



யாழ்.றோட்டறிக் கழகத்தின் மாதாந்த அதிதிப்பேச்சாளர் தின நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. யாழ்.பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி உதயனி நவரட்ணம் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஆர்வலர்களையும் படத்தில் காணலாம். (படங்கள் : லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# EDWARD MAKES RED OINTMENT

## றெட் ஒயின்மென்ற்

நீர்ச்சிரங்கு, புண், புரை, பருக்கள், கட்டு, படுவன், அக்கி, கிரந்தி அவியல், தலை அவியல், சொறி, தீச்சுட்ட புண், வெட்டுக்காயம், உரோஞ்சல், வட்டக்கடி, அரைக்கடி சகலதையும் குணமாக்கவல்லது.

**றெட் ஒயின்மென்ற் எனக் கேட்டு வாங்குங்கள்**
**எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்**

டாக்டர் காபிரியேல் எட்வேட் (L.A.M.P., R.I.M.P.)
வைத்தியாச்சாரி, வைத்தியபூபதி, கலாயோதி
63, குருசோ வீதி, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 021 222 8171
edward makes @ hotmail.com
(80786)


# துன்பங்களை எதிர்நோக்கியுள்ள மக்களின் நன்மை கருதியே போர் நிறுத்தத்திற்கான கோரிக்கை விடுக்கப்பட்டது

## மன்னார் ஆயர் தெரிவிப்பு

அவலப்படும் மக்களின் துன்பங்களை துடைக்கும் யேசு கிறிஸ்துவின் புனித பிறந்த நாளிலாவது இருவார காலத்திற்குப் போர் நிறுத்தம் அவசியம் என மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகை வவுனியா கோமரசங்குளம் பகுதியில் புதி தாக புனரமைப்புச் செய்யப்பட்ட தேவால யத்தை திறந்து வைத்து உரையாற்றும் போது தெரி வித்துள்ளார்.

வன்னிப் பகுதியில் தற்போது இடம் பெற்று வரும் யுத்தம் காரணமாக சுமார் மூன்றரை லட்சத்திற்கும் அதிகமான பொதுமக்கள்அகப்பட்டு மிக மோசமாகப் பாதிக் கப்பட்டுள்ளனர். இதனைக் கருத்திற் கொண்டு கிறிஸ்து பிறந்தநாளிலாவது மக் கள் ஆறுதலாக இருக்க இருவாரகாலத்திற்கு போர் நிறுத்தம் அவசியமென்பதற்கா கவே போர்நிறுத்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

ஒரு போதும் எதிர்நோக்காத வகையில் தற்போது மனித அவலங்களை மக்கள் சந்தித்து வருகின்றனர்.

இதனை நான் நேரில் கண்ணுற்ற போது பெருங் கவலையடைந்தேன். தொடர்ச்சி யான மோதல்கள் காரணமாக வன்னிப்பகு தியில் உள்ள மக்கள் நடைபிணங்களாக அலைந்து திரிகின்றனர். விமானக் குண்டு வீச்சுகள், எறிகணைத் தாக்குதல்கள் என்பன காரணமாக கர்ப்பிணிகளும், கைக்குழந் தைகளும் அதிர்ச்சிக்குள்ளாகி, உளத்தாக்கத்திற்கு உட்படுகின் றனர்.

ஐந்து மறை மாவட்ட ஆயர்களும் மற் றும் சிலரும் இணைந்து போரில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பினரையும் குறைந்தது ஒரு வாரத்திற்காவது யுத்த நிறுத்தத்தினை மேற்கொள்ளுமாறு கேட்ட போதும் அரசாங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (4)

# வடிகால்களைத் துப்புரவு செய்யவில்லை

வண்ணை, டிசெ.22

குருநகர் அடம்பன் வீதி, 1ஆம், 2ஆம், 3ஆம் குறுக்கு வீதிகளிலுள்ள வடிகால்கள் யாழ்.மாநகரசபை சுகாதாரப் பகுதி ஊழி யர்களால் துப்புரவு செய்யப்பட்டு பல வாரங் களாவதாக அப்பகுதிக் குடியிருப்பாளர் கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக 'நிஷா' புயல் ஏற்பட்ட பின் பாக மேற்குறிப்பிட்ட பகுதிகளுக்கு சுகா தாரப் பகுதி ஊழியர்கள் வருகை தராத தால் நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் நெருக்கடியான குடியிருப்பா ளர்களைக் கொண்ட குருநகர் பகுதியில் தொற்று நோய்கள் மக்களைத் தாக்கும் அபா யம் தோன்றி வருவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (202-160)

# வவுனியாவில் சூட்டுக்காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

வவுனியா, டிசெ.22

வவுனியாப் பகுதியில் சூட்டுக்காயங்க ளுடன் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சட லம் நேற்று மீட்கப்பட்டிருப்பதாக, வவு னியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கூமாங்குளம்- நெளுங்குளம் பிரதான வீதியில் இந்தச் சடலம் மீட்கப் பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் வவுனியா வைச் சேர்ந்த 36 அகவையுடைய ஒரு பிள்ளையின் தந்தையான ஜீவரட்ணம் புஷ் பராஜா என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் வெளிநாடுகளுக்கு இளைஞர் களை அனுப்பும் பயண முகவராகத் தொழிற் பட்டு வந்தார். இவர் கூமாங்குளம் பகு திக்கு பணம் சேகரிப்பதற்காக நேற்று முன் தினம் மாலை சென்றபோதே அவர் மீது இனந் தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவரின் சடலம் வவுனியா வைத்திய சாலையில் காவல் துறையினரால் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4)

## நினைவாராதனை அழைப்பு



அமரர் ஜோ.அரியரட்ணம்

05.12.2008 அன்று காலமான எமது குடும்பத் தலைவர் ஜோ.அரியரட்ணம் அவர்களின் நினைவாராதனை நாளை(23.12.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

16.சோமசுந்தரம் அவனியு,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (80990)

தகவல்:
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் பொன்னுத்துரை வில்வராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்- யாழ்.இந்துக் கல்லூரி)

அன்னையின் மடியில்
16.04.1937

ஆண்டவன் அடியில்
14.12.2007


திதி: தசமி (22.12.2008)

ஆண்டுகள் இரண்டு ஆனாலும் ஆறவில்லை எம் துயர்
ஆயிரம் உறவுகள் இங்கிருந்தும் அப்பா உங்களுக்கு ஈடாகுமா?
அவனியில் நாம் சிறப்புடன் வாழ அரவணைத்து வழி காட்டினீர்கள்
ஆலமரம் சாய்ந்து போனதே ஆனால் விழுதுகளின்
விழிகளில் ஈரம் இன்னும் ஆறவில்லை.

நீங்கா நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''விநாயகர் இல்லம்'',
6.செல்லர் வீதி, நல்லூர்.
தொ.பே.:021 222 7823 (80980)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### நமசிவாயம் ஏரம்பமூர்த்தி

(இளைப்பாறிய அதிபர்-SLTS- CLASS- I)

அன்னை மடியில்:10.05.1939 ஆண்டவன் திருவடியில்: 22.11.2008

அன்பான சேவையினால் அனைவரையும் கவர்ந்து
அரச கடமையுடன் ஆன்மீகப் பணியினையும்
ஆத்ம திருப்தியுடன் முன்னின்று மேற்கொண்டு
ஆண்டவன் திருவடி தேடிச் சென்றாயோ?
எப் பிறப்பில் உமைக் காண்போம்.

அன்னாரது இல்லத்தில் இன்று (22.12.2008) நடைபெறும் சபிண்டிகரணக் கிரியைகளில் கலந்து கொள்ள உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை. (சி/556184)

குடும்பத்தினர்.


## கேதுசன் வைண்டிங் சென்ரர்

மோட்டர், மின்விசிறி மற்றும் இலத்திரனியல் மின் உபகரணங்கள் அனைத்தும் குறிப்பிட்ட தவணையில் திருத்திக்கொடுக்கப்படும்.

இடம்: அச்சுவேலி பஸ்தரிப்பிடம்,
சபா கடை மேல்மாடி.
(81059)


## தவறிவிட்டது

டச்சு வீதி, உடுவில் என்னும் முகவரியுடைய சந்திரசேனா சுதாகரன் என்பவருடைய தே.அ. அட்டை (83019147[illegible]V), வி.சே.அ.அட்டை (0906006681), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன உடுவில் மகளிர் கல்லூரிக்கும் கோண்டாவில் டிப்போவிற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சன்_ நகைத்தொழி[illegible] [illegible] வழங்கப்படும்.

(81055) தொ.பே.: 077 1013859.

## உங்கள் குருத்துவப் பொன்விழாவில்

நன்றிப் பூக்களுடன்...

Dear Father



நீங்கள் குருவாகி
ஐம்பது ஆண்டுகள் ஆயிற்றா?

50

உங்கள் தோற்றம்
சொல்லவில்லை அதை
உங்கள் நடை, உடை, பாவனை
என்றுமே சொன்னதில்லை அதை
அவ்வளவோர் எளிமை
சிறியோரோடும் நட்புக்கொள்ளும் அன்பு
புறம் கூறாப் பண்பு
புதுமையின் மீது தாகம்
விடுதலையின் மீது ஒரு வெறி
கல்விக் கண் திறப்பே
கடைநிலை மனிதனின் விடிவுக்கு வழி
இக்கருத்து உங்களின் உயிர்ப்பு
உங்களால் கண் திறந்த
மனிதர்கள் கூடி
மகிழ்கின்றோம் இன்று

கொண்டாட முடியவில்லை
தமிழராய்ப் பிறந்ததால்
நம் கூற்று அது

கண் திறந்த மாந்தரிடம்
காட்சிகள் தோன்றும்
வாழ்வோம்.

வாழ்த்தி நிற்கின்றோம்
உங்கள் பெருந்தன்மையால்
உங்கள் நண்பர்களானோம்.

அருட்பணி பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தனது குருத்துவப் பொன் விழாவை 21.12.2008 அன்று நன்றியோடு நினைவு கூருகின்றார்.

(81056)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
25.03.1924

ஆண்டவன் அடியில்
22.11.2008

### திருமதி கணபதிப்பிள்ளை தங்கம்மா (கனடா)

(நாரந்தனை வடக்கு)

ஆலமரமாய் இருந்து விழுதுகள் பல நிலத்தினைத் தொட
அந்நிழலில் ஆறிய பறவைகள் எம்மைவிட்டு
வீழ்ந்து போனது ஏனோ! எம் குடும்ப விளக்கே!
மலர்ந்த உன் வதனச் சிரிப்பை இனி எம் வாழ்நாளில் காணக்கிடைக்குமா?

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமாகிய திருமதி கணபதிப் பிள்ளை தங்கம்மா அவர்களின் மரணச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமாகவும் மற்றும் பல வழிகளிலும் உதவி நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

83/15, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (சி/556178)

மகள்- கலாதேவி,
மருமகன்- சகாதேவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயிட்ஸ் எனும் உயிர்க்கொல்லி நோய் குடாநாட்டில் அகலக்கால் வைக்க இடந்தராமல் விழிப்படைவோம்

இன்று உலகம் பூராகவும் பேசப்படும் விடயமாக HIV/AIDS எனும் கொடிய உயிர்க்கொல்லி நோய் காணப்படுகின்றது. ஏழை, பணக்காரன், வளர்ச்சியடைந்த நாடுகள், வளர்முக நாடுகள் என எந்த வேறுபாடுமில்லாது சகலரையும் பாதிக்கக்கூடிய அசாத்திய வல்லமையுடையதாக இந்நோய் காணப்படுகின்றது. இன்று வரை HIV/AIDSஐ மாற்றக்கூடிய எவ்வித மருந்துகளும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இந்த வகையில் உலகநாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த HIV/AIDS தொற்றுடைய நாடாக இலங்கை காணப்பட்டாலும் புள்ளிவிவரங்களின்படி வருடாவருடம் தொற்றுடையோர் தொகை அதிகரித்து வருவதே இன்றைய பாரிய பிரச்சனையாக சகல தரப்பினராலும் நோக்கப்படுகின்றது. இலங்கையின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்.மாவட்டம் குறைந்த HIV/AIDS தொற்றுடைய நிலையிலேயே காணப்படுகின்றது.

> சர்வதேச எயிட்ஸ் தினத்தையொட்டி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் திறந்த கட்டுரைப் போட்டியை நடத்தியது.
> 'எயிட்ஸ்' குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் முகமாக நடத்தப்பட்ட அந்தப் போட்டியில் பரிசில் பெற்ற முதல் மூன்று கட்டுரைகளில் ஒன்று இங்கு பிரசுரமாகிறது.

HIV என்றால் என்ன? AIDS என்றால் என்ன? அவற்றின் வரலாறு யாழ்.மாவட்டத்தின் சமகால மாற்றம் யாது? இவற்றிற்கும் HIV/AIDS தூண்டப்படுவதற்குமான சந்தர்ப்பங்கள் யாது? தடுப்பதற்கான அணுகுமுறைகள் போன்றவற்றை நோக்குவதே இக்கட்டுரையின் நோக்காக அமையும்.


**HIV என்றால் என்ன?**

HIV என்பது மனித நிர்ப்பீடணக் (Immunity) குறைபாட்டை ஏற்படுத்துகின்ற வைரஸ் ஆகும். அதாவது மனித நோய் எதிர்ப்பு சக்தி குறைபாட்டினை ஏற்படுத்துகின்றது. இதன் விளைவு HIV தொற்றாகும்.

**கிருமியின் தாக்கம்**

ஓர் ஆரோக்கிய நபர் HIV தொற்றுக்கு உள்ளாகி ஆரோக்கியமற்ற, எயிட்ஸ் என்கின்ற, மரணத்திற்கு முந்திய நிலைக்கு உள்ளாகிறார். ஏனைய கிருமிகளைப் போன்று இவ்வைரஸ் நேரடியாக நோயை தோற்றுவிக்காது மனித உடலுக்கு நோயை எதிர்க்கின்ற வல்லமையைத் தருகின்ற குருதியிலுள்ள வெண்குருதிச் சிறுதுணிக்கைகளை தாக்கியழிக்கின்றது.

வைரசின் இரசாயன அமைப்பு AIDS




**AIDS என்றால் என்ன?**

HIV தொற்றினால் நோய் எதிர்ப்பு சக்தி படிப்படியாகக் குறைவடையப் பல்வேறு நோய் தொற்றுக்கள் மனித உடலில் ஏற்படும். HIV தொற்றினால் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைந்து விட்டது என்பதைக் காட்டும் ஒரு நிலையாக AIDS உள்ளது. அதன் விளக்கம்:-

A - Acquired - பெறப்பட்ட
I - Immuno - நீர்ப்பீடனக்
D - Deficiency - குறைபாட்டுக்
S - Syndrome - குணங்குறிகள்

மனித உடலின் உள்ளகக் கட்டுமானம், நோய் எதிர்ப்புச் சக்தியின் கட்டமைப்பு மற்றும் போசாக்கு நிலை என்பவற்றைப் பொறுத்து AIDS எனும் நிலையினை அடையப் பலகாலம் எடுக்கும்.

1980களில் HIV வைரஸ் தோன்றியிருக்கலாம் என கருத்துக்கள் கூறப்பட்டபோதும் 1981ஆம் ஆண்டிலேயே நியுயோர்க் நகரில் ஆண் ஒருவரில் எயிட்ஸுக்கான குணங்குறிகள் அவதானிக்கப்பட்டன.

இலங்கையில் 1986இல் முதலாவது HIV தொற்றாளர் இனங்காணப்பட்டார். இவர் ஒரு வெளிநாட்டவர். 1987இல் இலங்கையைச் சார்ந்த முதலாவது தொற்றாளர் காணப்பட்டார். இலங்கை சுகாதார சேவையினால் வெளியிடப்பட்ட 2007ஆம் ஆண்டு 3ஆவது காலாண்டு அறிக்கையின்படி 923 பேருக்கு HIV தொற்றுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் 5000இற்கு மேல் தொற்றாளர்கள் இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

## பொதுமக்கள் சகலரும் அறிந்திருக்கவேண்டிய முக்கிய விடயங்கள்

**யாழ்.மாவட்டத்தில்**

யாழ்.மாவட்டத்தினைப் பொறுத்தவரை முற்காலத்திலிருந்த வாழ்வியற் கோலங்கள் தற்காலத்தில் பலவாறு மாற்றம் பெற்று வருகின்றன. உலகமயமாக்கல், நகரமயமாக்கல் போக்கால் பல நன்மைகள் இடம்பெறுகின்றபோதும் தமிழர்களாகிய எமக்கேயுரிய பண்பாட்டு வழக்கங்கள் வலுவிழந்து வருவதை நோக்கமுடிகின்றது. இவை பல எதிர்நிலை நடத்தைக் கோலங்களை எமது சமூகத்தினுள் பலவந்தமாக உட்புகுத்துகின்றன. இத்தகைய சமகால மாற்றங்களுக்கும் அதிகரிப்பிற்குமிடையில் நேரிடைத் தொடர்புகள் காணப்படுகின்றன.

**எவ்வாறு தொற்று ஏற்படுகின்றது?**

HIV/AIDS பின்வரும் 3 வழிகளில் மனிதனில் தொற்றுகின்றது.

1. HIV தொற்றுடைய ஒருவருடன் ஏற்படுத்தும் பாதுகாப்பற்ற வழமைக்குப் புறம்பான பாலியல் உறவுகள்.

*உ+ம்:* பலருடனான பாலியல் தொடர்பு, ஓரினச்சேர்க்கை.

2. HIV தொற்றுடைய ஒருவருடைய குருதி மனிதனுடைய சில செயற்பாடுகள் மூலம் ஏனையோரைச் சென்றடையும் போது தொற்றுகின்றது.

உ+ம்: குருதிப்பரிமாற்றம், தொற்றுடைய குருதிப் பொருள்களை மாற்றீடு செய்தல், தொற்றுடைய ஊசியைப் பயன்படுத்தல்.

3. தொற்றுடைய தாயிடம் இருந்து பிறக்கும் குழந்தைகளுக்கும், தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளுக்கும் தொற்று ஏற்படலாம்.

யாழ்.குடாநாட்டினைப் பொறுத்தவரை பண்பாடு, கலாசாரம் போன்றவற்றிற்கு முதன்மையளிக்கும் நிலைமை முன்னர் காணப்பட்டது. ஒருதார மணம், மாற்றான் மனை தேடாமை, திருமணத்திற்கு முன்பான பாலியல் தொடர்பற்ற நிலை போன்றன ஒழுக்கமாகப் பேணப்பட்டது. தற்போது இத்தன்மைகளில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன.

**பாலியல் அறிவூட்டல்**

பாலியல் என்பது சாப்பிடுதல், நீர் அருந்துதல் போன்ற ஒரு சாதாரண மனிதத் தேவையாக அமைந்தன. ஆனால் எம் சமுதாயத்தில் பாலியல் கதைக்கக்கூடாத விடயமாகவும், திருமணமானவர்களுக்கே உரியதாகவும், திருமணம் வரை அறியப்படக்கூடாத விடயமாகவும் நோக்கப்படுகின்றது. இவற்றால் பாலியல்சார் பூரண அறிவற்ற நிலையே காணப்படுகின்றது. இன்று சினிமா, நீலப்படங்கள், மஞ்சள் பத்திரிகைகள் இலகுவாகச் சகல தரப்பினரையும் சென்றடையக் கூடியதாகவுள்ளது. இணையத்தளம் இவற்றிற்கான பிரதான ஊடகமாக இருக்கின்றது. இவை பாலியலை சாதாரண மனித தேவை என்பதிலிருந்து பாலியலை வியாபாரமாக்கும் இன்னோர் நிலைக்கு இட்டுச் செல்கின்றன. இவற்றால் பிழையான பாலியலறிவூட்டப்படுகின்றது. இவை இளவயதினர் முதல் முதியோர் வரை பலருடன் பாலியல் தொடர்பினை வைப்பதற்கு ஊக்கியாக அமைகின்றன. பலருடனான பாலியல் தொடர்பு HIV/AIDS பரவ ஏதுவாக அமைகின்றது.

**தவறான எண்ணம்**

யாழ்.குடாநாட்டில் HIV தொற்றுடையோர் தொகை குறைவாகக் காணப்படுவதனாலும், HIV தொற்று வெளிப்படையாக காணப்படாததனாலும் பலரும் எயிட்ஸ் சார் விழிப்புணர்வற்ற நிலையில் உள்ளனர். எயிட்ஸ் தொடர்பான பிழையான அறிவுடையோராகவும் காணப்படுகின்றனர். 'பருவமடையாத பெண்களுடனான பாலியலுறவு, ஓரினச் சேர்க்கை போன்றவற்றின் மூலம் எயிட்ஸ் பரவாது.' 'நான் வெளிநாடு செல்லாததனால் எனக்கு எயிட்ஸ் வர சந்தர்ப்பமில்லை. ஆகவே பல[illegible] உடலுறவு வைக்கலாம்' என்பது எண்ணப்பாட்டுடன் இத்தகைய [illegible]களில் ஈடுபடும் தன்மை காணப்படுகின்றது. இவையும் எயிட்ஸ் பரவ ஏதுவாகின்றது.

தற்போது யாழ்.குடாநாட்டில் பலதார மணங்கள் சாதாரண நிகழ்வாகிவிட்டன. கல்வி அறிவற்றவர் முதல் கற்றோர் வரை பலரிலும் இந்நடத்தைகள் காணப்படுகின்றன. திருமணமானவர்கள் திருமணமானவர்களையும், திருமணமானவர்கள் திருமணமாகாத சிறுவயதுப் பெண்களையும் திருமணம் செய்கின்ற தன்மை காணப்படுகின்றது. அத்தோடு இங்கு மணமகன் குறைவு மற்றும் சீதனக் கேள்வி அதிகரிப்பால் வெளிநாட்டு மணமகனைத் திருமணம் செய்யும் நிலை காணப்படுகின்றது. இதில் சிலரது நிலைமை பரிதாபமாக அமைகின்றது. ஏற்கனவே வெளிநாட்டில் திருமணம் செய்துவிட்டு இங்குள்ள பெண்ணையும் திருமணம் செய்து ஏமாற்றும் நிலையுள்ளது. ஏமாற்றப்பட்ட பெண்கள் வேறொரு வரைத் திருமணம் செய்தல் அல்லது மீளவும் தனதுறவுகளுடன் சேர்ந்திருக்கின்ற நிலைமையுள்ளது.



இதுபோன்று வேலைத்தளங்களில் மேலதிகாரிகள் அல்லது சக ஊழியர்கள் பலாத்காரமாகவோ அல்லது மற்றவரின் சம்மதத்துடனோ சக ஊழியர்களுடன் பாலியல் தொடர்புகளை ஏற்படுத்தும் நிலைமையுள்ளது. இவையனைத்தும் எயிட்ஸ் மற்றும் ஏனைய பாலியல் நோய்கள் ஏற்பட ஏதுவாக அமைகின்றன.

**ஏது நிலைகள்**

எமது பண்பாட்டில் தங்கை, தமக்கை போன்றோர் திருமணம் செய்த பின்பே ஆண் திருமணம் செய்யும் நிலையுள்ளது. இதனால் ஆடவரின் திருமண வயதெல்லை அவரின் விருப்பின்றியே தள்ளிப்போகும் நிலைமை காணப்படுகின்றது. அதே போன்று சாஸ்திர சம்பிரதாயங்களினாலும் சீதனமின்மை போன்றவற்றினாலும் திருமணவயது தள்ளிப்போகும் நிலைமை அல்லது திருமணமாகாத நிலைமை காணப்படுகின்றது. இத்தகையோரில் சிலர் ஓரினச்சேர்க்கை, சந்தர்ப்பம் கிடைக்கும்போது பலருடன் பாலியல் தொடர்புகொள்ளும் நிலைமை, பாலியல் விலகல் நடத்தைகளில் ஈடுபடுதல் போன்றன காணப்படுகின்றன. இவை எயிட்ஸ் மற்றும் பாலியல் நோய்கள் ஏற்பட ஏதுவாக அமைகின்றது.

*(வளரும்....)*

மணிவாசகன் நிமலன்,
*நல்லூர் கோட்டக்கல்வி அலுவலகம்.*

## முன்னோரைப் பின்பற்றுவோம்

*இயற்கை அனர்த்தம், மழையின்மை, போர்க்களத்தில் மடியும் இளைஞர்கள், சொத்துக்கள் அழிவடைதல், வாழ்வாதாரம் அற்ற நிலையில் பல்லாயிரக் கணக்கான அகதிகள்.... இவ்வாறு பல்வேறு துன்பியல் நிகழ்வுகள் தினசரிப் பத்திரிகைகளில் எழுதப்படுகின்றன. வாசகர்கள் ஒரு சில நிமிடங்களுக்கு அவற்றைப் படிக்கின்றார்கள். பின்பு தமது வேலைகளில் கண்ணாக இருக்கின்றனர். திருமணச் சடங்குகள், கோயிற் திருவிழாக்கள், குடமுழுக்கு போன்ற பல இன்பமான நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறுகின்றன.*

*ஆனால் துன்பியல் நிகழ்வுகள் நடக்கவே கூடாது! இவ்வாறான நிகழ்வுகளை நிறுத்துவதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? துன்பப்படும் உடன்பிறப்புகளை நாம் எப்படிக் காப்பாற்றலாம்? இத்தகையவர்களுக்கு உதவுவது நமது தலையாய கடமை. இந்நிலையில் தமது கொள்கைகளுக்கு விரோதமானவர்களை விமர்சனம் செய்து திட்டுவதால் பயன் ஏதும் கிடைக்கப்போவதில்லை.*

*முப்பதாண்டுப் போரை எமது வாசகர்களால் நிறுத்தமுடியவில்லை. பத்திரிகைச் செய்திகள், விமர்சனங்கள் ஆகியவற்றால் எதுவும் சாதிக்கமுடியவில்லை. எனவே இதற்கெல்லாம் தீர்வுகாண எமது முன்னோர்கள்தான் வழிகாட்டியிருக்கிறார்கள். திருக்குறள் முதலிய நீதி நூல்களிலும் திருமுறைகளிலும் மக்களின் துன்பத்தைப் போக்குவதற்கான அறிவுரைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.*

*'வெள்ளத்தனைய இடும்பை அறிவுடையான்*
*உள்ளத்தில் உள்ளக் கெடும்''*

*என்பதற்கு இணங்க மேற்கூறப்பட்ட நூல்களைப் பாராயணம் செய்தல், கேட்டல் - கூற்றம் உதைக்கும் அல்லவா?*

**க.மகேசன்** *(நல்லூர்).*

## இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை மேம்படுத்துதல் சேவை



இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் விற்பனை மேம்படுத்தும் சேவையை 'மக் கோஸ்ற் கட்டர்' சுப்பர் மார்க்கெற்றில் கடந்த 18ஆம் திகதி தொடக்கம் ஆரம்பித்துள்ளது.

ஒரு மாதம் வரை நடைபெறவுள்ள இச்சேவையில் வாடிக்கையாளர் மத்தியில் தற்போதைய சூழ்நிலையில் காப்புறுதியின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துவதனையும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் ஏற்கனவே காப்புறுதித் திட்டத்தில் இணைந்து ஐந்து வருடங்களுக்குள் காலாவாதியான காப்புறுதித் திட்டங்களைப் புதுப்பிப்பதற்கான சந்தர்ப்பத்தினையும் மக்களிற்கு வழங்கும் அதேசமயம் இவ்வருட இறுதியில் நடைபெறுகின்ற மாபெரும் சீட்டிலுப்பில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பினையும் வழங்குகின்றது.

அத்துடன் குறைந்த கட்டுப்பணத்தில் கூடிய காப்புறுதித் தொகையினை வழங்கும் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது. அதிகூடிய பங்குலாபத்தினையும் மக்களிற்கு வழங்கக் காத்திருக்கின்றது என அந்நிறுவனத்தின் ஆயுள் காப்புறுதி விற்பனை முகாமையாளர் அரியநாயகம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இத்திட்டத்தில் முதலாவது வாடிக்கையாளராக ஜெகதீபன் பார்த்தீபன் என்பவர் இணைவதையும் அவருக்கு நிறுவனத்தின் ஆயுள் காப்புறுதி விற்பனை முகாமையாளர் அரியநாகம் ரஞ்சித் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ரீ.சேட்டைப் பரிசாக வழங்குவதனையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
நத்தார் வாழ்த்துக்கள்

MMBL
MONEY TRANSFER
An Aitken Spence _ MMBL COMPANY

WESTERN UNION
மணி டிரான்ஸ்பர்

உலகெங்கிலுமிருந்து யாழ்ப்பாணத்திற்கு
சில நிமிடங்களில்




வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புபவர் அருகிலுள்ள வெஸ்டர்ன் யூனியன் முகவர் நிலையத்தை அணுக வேண்டும். பின்னர் பணம் பெறுபவரின் பெயர், விலாசத்துடன் அனுப்பப்படவேண்டிய பணத்தைக் கையளிக்கவும்.




பற்றுச் சீட்டுடன் அலுவலகர் உங்களுக்கு 10 இலக்கங்கள் கொண்ட இரகசிய எண்ணைத் தருவார். MTCN என அழைக்கப்படும் (மணி டிரான்ஸ்பர் கொன்ட்ரோல் நம்பர்). இந்த இலக்கங்களானது ஒவ்வொரு வெஸ்டர்ன் யூனியன் முகவர் நிலையங்களிலும் சரியான பணம் பெறுபவரை அடையாளம் கண்டுகொள்ள உதவியாக இருக்கும்.



பணம் அனுப்புபவர், பணம் பெறுபவருக்கு இரகசிய எண்ணையும், அனுப்பும் பணத்தொகையையும் தெரியப்படுத்தல் வேண்டும்.




பணம் பெறுபவர், பெற்றுக் கொண்ட இரகசிய இலக்கத்துடனும், அடையாளப்படுத்தும் ஒரு தஸ்தாவேஜுடனும் அருகிலுள்ள MMBL முகவர் நிலையத்தை அணுக வேண்டும்.
- தேசிய அடையாள அட்டை • அங்கீகரிக்கப்பட்ட கடவுச் சீட்டு
- அங்கீகரிக்கப்பட்ட வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம்
- கிராம சேவையாளர் வழங்கிய படத்துடனான அங்கீகாரம்
- அடையாள அட்டை தொலைந்ததற்க்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கடிதம்
- இராணுவம் அல்லது பொலிசாரினால் அங்கீகரிக்கப்பட் அடையாளப்பத்திரம்




MMBL முகவர் நிலைய அலுவலகர், உங்களது அடையாள அட்டையையும் இரகசிய இலக்கத்தையும் சரிபார்த்த பின்னர் உடனடியாக பணத்தை உங்களுக்கு வழங்குவார். இந்த நடைமுறைக்குச் சில நிமிடங்களே செல்லும்.

மேலதிக விபரங்களுக்கு வாடிக்கையாளர்களின் உடன் சேவை தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் 011 4529999

உலகில் எப்பாகத்திலிருந்தும் வெஸ்டர்ன் யூனியன் மூலம் பணத்தை அனுப்பி யாழ்ப்பாணத்திலுள்ள பின்வரும் Money Master நிலையங்களில் உடனடியாகப் பெறமுடியும்.

விரைவானதும்,நம்பகமானதும், வசதியானதுமான சேவை உங்களுக்குத் தேவையாயின் உங்கள் அருகில் உள்ள Money Master நிலையத்திற்குச் செல்லுங்கள்.

| Money Master நிலையங்கள் | நகரம் | தொலைபேசி இல |
|---|---|---|
| ஸ்ரீ முருகன் முகவர் தபால் நிலையம் | யாழ்ப்பாணம் | 021-2222670 |
| குமார் முகவர் தபால் நிலையம் | யாழ்ப்பாணம் | 021-2223453 |
| ராஜு ஸ்டோர்ஸ் | யாழ்ப்பாணம் | 021-2225224 |
| சங்கீதா ஏஜென்சி | யாழ்ப்பாணம் | 021-2228546 |
| மாஹாலக்ஷ்மி ஸ்டோர்ஸ் | யாழ்ப்பாணம் | 021-2222024 |
| காரை எக்ஸ்பிரஸ் | யாழ்ப்பாணம் | 021-2229942 |
| தினேஸ் பேக் ஹவுஸ் | மானிப்பாய் | 021-2222570 |
| திருமுருகன் கொம் நெட் | திருநெல்வேலி | 021-2227310 |
| சந்தியா மல்டி கோட்யாட் | நல்லூர் | 021-2226960 |
| நீதினி முகவர் தபால் நிலையம் | சுண்ணாகம் | 021-2226267 |
| குமரன்ஸ் குரூப் | சுண்ணாகம் | 060-2215055 |
| ஸ்ரீ முருகன் | காரைநகர் | 021-2225392 |
| வசந்தா முகவர் தபால் நிலையம் | கைதடி | 021-2223850 |
| அஸ்வினி மல்டி பிளாஸா | கோண்டாவில் | 021-4590630 |
| நியூ அம்பிகா ஸ்டோர்ஸ் | நெல்லியடி | 021-2263571 |
| சரண்யா கொமினிகேஷன் | சங்கானை | 021-4591220 |
| கணேசா ஏஜென்சி | பருத்தித்துறை | 021-2263928 |
| கணேசா சென்டர் | இணுவில் | 021-2225708 |
| ஓம் சரவன பவா கொம் | கொற்றாவத்தை.பொலிகண்டி | 060-2212616 |
| வட்டு சிவன் கொமினிகேஷன் | வட்டுக்கோட்டை | 021-2223734 |
| சாருஜன் கொமினிகேஷன் | கொக்குவில் சந்தி | 021-2223200 |
| V.M.K.ஜுவலர்ஸ் | சாவகச்சேரி | 021-4590975 |
| கதிரவன் ஜெம்ஸ் ஜுவலர்ஸ் | யாழ்ப்பாணம் | 021-2229315 |

MMBL Money Master
வேகமாகவும், இலகுவாகவும், பாதுகாப்பாகவும்

MMBL மணி டிரான்ஸ்பர் பிரைவேட் லிமிடட்
இல-300, காலி வீதி
கொழும்பு 03
தொடர்பிலக்கம் - 011 452 9999, 0777915543, 0777735632

# ராசி பலன்

22-12-2008 முதல்
28-12-2008 வரை

பொ.சந்திரலிங்கம்

## மேஷம்



அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழிற் துறை யில் முன் னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.

## இடபம்



கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ் டம் இருக்காது. தெய்வீகநாட்டம் இருக்காது. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப் பர். மன அமைதி இருக்கும்.

## மிதுனம்



மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர்; உதவியை எதிர்ப்பார்ப்பர், தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு தாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமை யலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## கடகம்



புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நல முண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. மன அமைதி இருக்காது.

## சிம்மம்



மகம், பூரம், உத்தரம் 1

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. மன அமைதி இருக்காது.

## கன்னி



உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர், மனஅமைதி இருக்கும்.

## துலாம்



சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ டம் இருக் காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன் னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

## விருச்சிகம்



விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாண,வாய்ப்பு தாமதமாகலாம். பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர்பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள்கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமணவாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளில் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில் துறையில் முன் னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## தனுசு



மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமை யலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய மூதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

## மகரம்



உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வி யில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## கும்பம்



அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமணவாய்ப்புண்டு. முதலீடுகள் அமை யலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழிற் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

## மீனம்



பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன இறுக்கத்தாலும் உடல் உபாதை வரலாம்



கேள்வி: பெண் வயது 50. கைகால் உளைவு, களைப்பு உண்டு. டாக்டரிடம் காட்டினேன். பல பரிசோதனைகள் செய்து நோய்கள் ஒன்றுமில்லை என்று கூறினார்.வயது காரணமாக இப்படி ஏற்படுகின்றது என்று காரணம் சொன்னார். டாக்டரின் பதில் திருப்தி இல்லாமல் விசேட வைத்தியர் ஒருவரின் ஆலோசனை பெற்றேன். அவரும் சகல பரிசோதனைகளும் செய்து, என்னிடம் எதுவித பிரச்சினையும் நோய்களும் இல்லை என்று கூறினார். மேலும் நான் நோய்களைக் கற்பனை செய்வதாயும் மனதில் தான் நோயே தவிர உடலில் இல்லை என்றும் கூறினார். இப்பொழுது நான் ஏதாவது நோய்க்குணங்களைச் சொன்னால் எனது கணவர் விசேட வைத்தியர் கூறியவிதம் - 'உனது நோய் எல்லாம் உனது மூளையில்தான்' என்று கூறுகின்றார். இதனால், எனது மனம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. நான் கூறும் நோய்க் குணங்கள் எனக்கு உண்மையாகவே உள்ளன. ஆனால், டாக்டர்களும், கணவரும் நம்பமறுப்பது வேதனையாக உள்ளது. எனக்கு உண்மையிலே மனோவியாதியா? அறிவுரை வேண்டும்.

பதில்: அநேகமான பெண்களின் நோய்களை மனநோய், ஹிஸ்டீரியா (Hysteria) என்று கணிக்கும் வைத்தியர்கள் சிலர் மருத்துவ உலகில் இருக்கின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இதற்கு சில காரணங்கள் உண்டு. பெண்கள் மன இறுக்கமாக (Stress) இருக்கும்போது, தமது நோய்க் குணங்களை உணர்ச்சிகரமாக விவரிப்பது ஒரு காரணம். இது வைத்தியர்களை நோயின் மூலத்திலிருந்து விலக்கி குழப்பமடைய வைத்துவிடுகிறது. மேலும் வைத்தியர்களின் படிப்பறிவுக்கு - அனுபவத்துக்கு உங்களின் நோய்க்குறி கள் ஏற்றுக்கொள்கின்ற மாதிரி அமையா விட்டாலும் - உங்களை அவர்கள் மனோ நோயாளி ஆக்கிவிடுகின்றார்கள். மேலும் மருத்துவத்தில் ஆண்களை விட பெண்களே அதிகளவில் Depression எனப்படும் மனோநோயால் பாதிக்கப்படுவதும்- டாக்டர்களை Bias எனப்படும் ஒருபக்கச்சார்பான முடிவெடுக்க தூண்டுகின்றது. இது தவிர சில நீண்டகால நோய்கள் நோயாளிகளுக்கு - 'ஒன்றுமே ஆகவில்லையே' என்ற Depression நிலைக்கு நோயாளிகள் ஆளாக்கிவிடுவதால் - உண்மையான நோயின் தன்மையை விட இவர்களிடம் Depression நோய்த் தன்மை மேலோங்கி நிற்க ஏதுவாகிறது.

Chronic Fatigue Syndrome என்றொரு நோய்நிலை உள்ளது. இதனால், பீடிக்கப் பட்ட வர்களுக்கு உடல்வலி, எதிர்ப்பு சக்திக் குறைபாடு என்பவை பொதுவாகக் காணப்படும். எத்தனை இரத்தப் பரிசோதனைகளோ அல்லது விசேட பரிசோதனைகளோ செய்தாலும் அவையாவும் எதுவித நோயையும் சுட்டிக் காட்டும் முடிவுகளைத் தரா. இதனால் கூட டாக்டர்கள், நோயாளியின் மனதில்தான் நோய் உள்ளது என்ற தவறான முடிவுக்கு வருகின்றார்கள்.

சிலவேளைகளில் மனஇறுக்கத்தால் கூட சில உடல் உபாதைகள் ஏற்படலாம். இதனை மருத்துவத்தில் Somatoform Disorders அல்லது Psycho Somatic Disorders என்று குறிப்பிடுவார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் ஒரு நோயாளி மருத்துவரிடம் அவரது நேரத்தை வீணாக்கவோ, பொய் சொல்லவோ வருவதில்லை. தனது நோயின் கொடுமையைத் தாங்காமல் மருத்துவ உதவி பெறத்தான் வருகின் றார். எந்த நோய்க்கும் உடல்பாதிப்பு, மனப்பாதிப்பு இரண்டும் உண்டு. அவை எந்த அளவில் சேர்ந்திருக் கின்றன என்பதைப் பொறுத்தே உடல் வியாதியா, மனோ வியாதியா என்று தீர்மானிக்கப்படவேண்டும். மனோ வியாதிதான் என்பது தீர்மானிக்கப்பட்டா லும் - அதுவும் ஒருநோய்தான் என்பதை டாக்டர், நோயாளியின் குடும்பத்தவர்கள், நண்பர்கள் புரிந்துகொண்டு அதற்கு சிகிச்சை அளிக்கவேண்டும். நோய் மனதில்தான் என்று சொல்லி நோயாளியைப் புண்படுத்தக்கூடாது. நான் மட்டுமல்ல - அநேக - மருத்துவர்கள் இந்த மனோ நிலையைக் கொண்டவர்கள். ஒருசிலர் இதற்கு விதிவிலக்காக இருப்பது மருத்துவ உலகிற்கு அவமானம்.

★

கேள்வி: பெண் வயது 40. எனது வயது ஏற ஏற எனது உடலில் எப்படியான மாற் றங்கள் ஏற்படும்? எனது நிறை அதிகரிக்குமா? எனது உடல் இயக்கங்கள் குறைவுபடுமா? விளக்கம் தரவும்.

பதில்: 40 வயதுஎன்பது உங்கள் ஆயுட் காலத்தில் பாதிக் காலத்தை கடந்து கொண்டிருக்கும் பருவம். இதனை Mid Life என்று குறிப் பிடுவர். இந்தப் பருவத்தில் உடலின் உள் இயக்கங்களில் எனக் குறிப் பிடப்படும் Metabolism குறைவு படும். நாங்கள் பிறந்ததிலிருந்து எமது உடல் இயக்கங்களில் 'ஆக்கு வதும் அழிவதுமான' செயல்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதனை Anabolism உடல் ஆக்கத்தொழில்பாடு (புதிய கலங்கள் உருவாகுவது) Catabolism உடல் அழிவுத் தொழில்பாடு என்று கூறலாம். இந்த ஆக்கல், அழித்தல் தொழிற்பாடு கூட்டாக Metabolism எனப்படும். வயதாக வயதாக இந்த ஆக்கல் தொழில்பாடு குறைந்து அழித்தல் செயற்பாடு அதிகரிக்கும். நரை, திரை, மூப்பு என்பன இதனால் ஏற்படுகின்றன. இந்தத் தொழிற்பாடுகள் கூட்டுமொத்தமாக குறைந்த அளவில் செயற்படுவதால் இந்தத் தொழில்பாட்டுக்குத் தேவையான சக்தியின் அளவு குறை யும். சாதாரண மனிதனுக்குத் தினமும் கிட்டத்தட்ட 1500 கலோரி சக்தி தேவை. வயதாகும்போது இந்த சக்தி தேவை 500 - 600 கலோரிகள் குறைவாகிறது. இதனாலும் வயதேற எமது பௌதீக இயக்கங்களும் (Physical Activity) குறைவுபடுவதால் நாம் உட்கொள்ளும் உணவு, உடலில் செலவழியாமல் சேகரிக்கப்பட்டு எடையை அதிகரிக் கிறது. இந்த எடை அதிகரிப்பும் முழு உடம்பிலும் தெரியாமல் கீழ்வயிறு பகுதி, இடுப்பு, பிருஷ்டம் (But tocks), தொடை என்பவற்றில் கூடியளவு படிகிறது. சாதாரண சராசரி பெண் வருடத்திற்கு இரண்டு இறாத்தல் நிறை அதிகரிக்க இவை காரணமாக இருக்கின்றன.


ஆனால், இந்த கூடும் எடையை தவிர்க்க சரியான உணவு முறை, தேகப் பயிற்சி என்பவை உதவும். இந்த எடை அதிகரிப்பு கட்டுப்படுத்தப்படாவிடில் மார்பகப் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புண்டு. மேலும் பெண்களைப் பொறுத்தவரையில் மாதவிலக்கு நிற்கப்போகும் பருவத்தில் அவர்கள் இந்த நாற்பது வயது கால எல்லையில் உள்ளனர். இதனால், பெண் ஹோர்மோன்கள் சுரப்பு இந்தப் பருவத்தில் குறைவுபடுகிறது. இந்த குறைபாடு Osteoporosis எனப்படும் எலும்பு பலவீனமடையும் நிலையை உருவாக்கும். எனவே, வயதாவதைப் பற்றி கவலைப்படாதீர்கள். ஆனால், கவனம் எடுங்கள்.

★

கேள்வி: பெண் வயது 24. சமீபத்தில் தான் திருமணமாகியது. உடலுறவு கொள்ளும்போது தாங்கொணாத வலி ஏற்படுவதால் உடலுறவைத் தவிர்க்கின்றேன். இதனால், எனது தாம்பத்திய வாழ்க்கையில் பிரச்சினை ஏற்படுகிறது. பரிகாரம் கூறி எனது வாழ்க்கையைக் காப்பாற்றவும்.

பதில்: உடலுறவின்போது ஏற்படும் வலியை Dyspareunia என்று மருத்துவத் தில் கூறுவார்கள். இந்த வலி ஒன்றில் மேலெழுந்த வகையில் - பெண் உறுப்பின் வெளியில் அல்லது பெண் உறுப் பினது பாதையின் வாசலில் ஏற்படுவதாக இருக்கலாம் அல்லது உள்ளே இடுப்புப் பகுதி Pelvic Area இல் ஏற்படுவதாக இருக்கலாம்.

ஆரம்பத்தில் கூறிய மேலெழுந்த வாரியான வலிக்கு பல காரணங்கள் உண்டு. முதலிரவின்போது கன்னித் திரை எனப்படும் Hymen சவ்வு ஆணுறுப்பு உள்ளே [illegible]போது கிழிந்து இரத்தம் வருவதுண்டு. இதன்போது சிறிது வலி ஏற்படும். ஆனால், தொடர்ந்து உறவுகொள்ளும் போது வலி தானாகவே மறைந்துவிடும். சில பெண்களுக்கு இந்த கன்னித்திரை தடிப்பமாக இருப்பதால் இலகுவில் முதலிரவில் கிழியாது. எனவே, உடலுறவின்போது தடித்த இந்த சவ்வு ஒரு தடையாக இருந்து வலியைத் தரலாம். அடுத்ததாக உடலுறவின்போது பெண்களின் இச்சை உணர்வு தூண்டப்படாதவிடத்து (Sexual Stimulation) பெண் உறுப்பில் ஈரமற்று வரண்டுபோன தன்மை இருக்கும். அப்போதும் உடலுறவு வலியோடு கூடியதாக இருக்கும். அநேகமாக ஆண்கள் அவசரப்பட்டு, பெண்ணுக்கு உணர்ச்சி ஏற்படுவதற்கு முன் உடலுறவு கொள்ள முற்படுவதும், பால் உணர்வு, உடலுறவு பற்றி தப்பான மனோநிலையால் - பய உணர்வால் பெண்கள் இலகுவில் உணர்ச்சிவசப்படாமல் இருப்பதும் - அதனைப் புரிந்துகொள்ளாத



கணவன் அந்தச் சூழ்நிலையில் உடலுறவு கொள்ள முற்படுவதும் வலியை ஏற்படுத்தலாம். இந்த வலியால் மேலும் பயமும் வெறுப் பும் அடையும் பெண் உடலுறவு என் றாலே மன இறுக்கத்துக்கு ஆளாவாள். உடலுறவு என்றாலே பயமும் வெறுப்பும் மேலோங்கும். இதனால்கூட உடலுறவின்போது வலி ஏற்படும். பெண் உறுப்பில் தொற்று, யோனிவாயிலைச் சுற்றியுள்ள சுரப்பிகளில் தொற்று, Herpes தொற்று, சிறுநீர்த் தொற்று, கருத்தடைக்கு உபயோகிக்கும் ஆணுறை, பெண்களுக் குரிய Dia- phragm Cap என்பவற்றால் ஏற்படும் ஒவ்வாத தன்மை போன்றவையும் வலிக்கு காரணமாகலாம். சில பெண் களுக்கு மாதவிலக்கு நின்ற பின்னர் Menapause பருவத்தில் ஈஸ்ரஜோன் சுரப்புகள் குறைவதால் பெண் உறுப்புப் பாதை வரண்டு உடலுறவின்போது வலியைத் தரலாம். அதுபோல் பிரசவத் தின்போது குழந்தையை வெளியில் எடுப்பதற்கு பெண் உறுப்பு வாசலில் Episiotomy என்றொரு சத்திரசிகிச்சை செய்வார்கள். பிரசவத்தின் பின்னர் இந்த இடத்தில் இறுக்கமாக தையல் போடப் பட்டிருந்தால் உடலுறவின்போது வலி ஏற்படலாம்.

உடலுறவின் பின்னர் வலிக்கு இடுப் புப் பகுதியில் கருப்பை, சூலகம் மற்றும் அவற்றோடு தொடர்புடைய உறுப்பு களில் ஏற்படும் தொற்று ஆகியவையும் காரணமாக இருக்கும்.

எனவே, ஒரு தகுந்த பெண்நோயியல் (Gynaecologist) மருத்துவரின் ஆலோசனை உங்களுக்கு அவசியம் என்று கருதுகின்றேன். உங்கள் பிரச்சினை நோய்கள், தொற்றுகள் காரணமாக இல்லாவிடில் உள வள ஆலோசகர் (Counsellor) ஒருவரின் உதவி பெறவும். ★

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ
ஆலோசனை
'உதயன்'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை,கொழும்பு-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.மேற்கில் பொதுமக்களுக்கு விளக்கக் கூட்டம்

சுழிபுரம்,டிசெ.22

வலி.மேற்கு பிரதேச சபையின் செயற்பாடுகள், அடுத்த ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் என்பன குறித்து பொதுமக்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.

இதற்கென ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமையில் கூட்டம் ஏற்பாடாகி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக் கூட்டத்திற்கு வரியிறுப்பாளர்களும் அழைக்கப்பட்டு, குறைகள் கேட்கப்பட்டு தீர்வுகள் குறித்து ஆராயப்படவுள்ளது. (202-28)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1047 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கடகம் 01 02 03 36

19-12-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 500304522 - 500324475

ஜக்பொட் பரிசு ரூபா. 11,523,280/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 215,363 | 20/- | 4,307,260/- |
| 2 இலக்கங்கள் | 19,799 | 40/- | 791,960/- |
| 1 இல. + லக்கினம் | 19,520 | 60/- | 1,171,200/- |
| 2 இல. + லக்கினம் | 1,798 | 200/- | 359,600/- |
| 3 இலக்கங்கள் | 510 | 1000/- | 510,000/- |
| 3 இல. + லக்கினம் | 58 | 10,000/- | 580,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 11,523,280/- | - |
| மொத்தம் | | | 8,320,020/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 257,056 | | 8,820,020/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 12,004,280/-

தொடர் இலக்கம் 400308568 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 டிசெம்பர் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மாத்தறை | 500306813-0-27 |
| ஹம்பாந்தோட்டை | 500305799-1-29 |
| புத்தளம் | 500309581-5-24 |
| அனுராதபுரம் | 500316146-8-34 |
| மொனராகலை | 500309801-9-44 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ளது. (202-325)

## கலந்துரையாடல்

வலி.வடக்கு,டிசெ.22

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையேயான கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை நண்பகல் 1.45 மணிக்கு பிரதேச செயலர் திருமதி ச.மஞ்சுளாதேவி தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

2009 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் செயற்பாடுகள் சம்பந்தமாக கலந்துரையாடப்படவுள்ளதாகவும் அனைத்துக் கழகங்களினதும் பிரதி நிதிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு உடுவில் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் கேட்டுள்ளார். (202-86)


### Personal Class

புதிய ஆண்டிற்கான 1-12 வரையான மாணவர்களுக்கு English Personal Class & it Spoken With Grammar கற்க விரும்புபவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பித்துக் கொடுக்கப்படும். தொடர்பு:- கொக்குவில் கிழக்கு, கொக்குவில். தொ.பே. 077 1880466

### நாய்க்குட்டி விற்பனைக்கு

காவலுக்குரிய கலப்பின ஜேர்மன் செப்பேட் (இரண்டு மாதம்) ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

K.ரஞ்சா சரநாதன்

ரெயில் றோட், குளங்கரை, கொக்குவில் கிழக்கு.



## நிவாரண உதவி

வடமராட்சி,டிசெ.22

நிஷா புயல் மழை என்பவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறை கட்டைவேலி சேகரப் பிரிவு நிவாரண உதவிகளை வழங்யுள்ளது.

இதற்கென மெதடிஸ்த திருச்சபை தலைமையகம் 5 இலட்சம் ரூபா நிதியினை பருத்திதுறை கட்டைவேலி சேகரப் பிரிவுக்கு வழங்கியிருந்தது. பாதிக்கப்பட்டு வீடுகளை விட்டு வெளியேறி கோவில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்த குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ரூபா பெறுமதி கொண்ட உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. மேலும் பல நிவாரண உதவிகள் இச் சேகரப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. (202-236)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (கதிரமலை)**

திதி: ஏகாதசி (22.12.2008)

பிறப்பு 06-10-1950 இறப்பு 03-01-2008

ஆலமரம் போல் அசையாது எமை வளர்த்த
ஆசைமிகு அப்பாவே!
ஆண்டொன்று ஆனதப்பா
ஆறவில்லையே எம்மனம்
ஆறெனப் பாயும் விழிநீர் வற்றவில்லையே
ஆனாலும் அப்பாவே ஆத்ம திருப்திக்காய்
ஆவலுடன் உமைத் தேடுகின்றோம்
ஆண்டவன் அடிவருடி!

(80941)

44/7, மணல்தறை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுடன்: குடும்பத்தினர்.

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் செல்லையா மதியாபரணம்

(உரிமையாளர்: வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்)

திதி: 22.12.2008

அன்புத் தெய்வமே! பண்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய் எம்மை ஆளாக்கி
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு
இன்றுடன் இரு ஆண்டுகள் சென்றாலும்
என்றென்றும் உங்கள் பாச விளக்கின் ஒளி
அணையாத தீபமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கும்
எங்கள் நெஞ்சங்களில் என்றும் அழியாத
சித்திரமாய் நிறைந்திருக்கும் எங்கள்
அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்...

— குடும்பத்தினர்.

நடராஜா வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.



மலர்வு: 24.02.1933

உதிர்வு: 14.01.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘மும்பை கொலைவெறித் தாக்குதலில் ஈடுபட்டது பாகிஸ்தான்தான்!’ என ஆதாரங்களைக் காட்டி, அதன்மீது சர்வதேச அளவில் மிகப்பெரிய அழுத்தம் கொடுக்க இந்தியா ஐ.நா.சபையின் உதவியை நாடியது. சபையின் வருடாந்தக் கூட்டம் முடிவுறும் சமயத்தில்... அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து என

# அமெரிக்காவின் இரட்டை வேடம்!



உலகளவில் இஸ்லாமிய தீவிரவாதத்துக்கு பலியான நாடுகளைத் தன் அணியில் சேர்த்து மிகப்பெரிய விவாதத்தை பாகிஸ்தானுக்கு எதிராகத் தொடுத்தது இந்தியா.

எப்போதும் ‘ஆதாரம்... ஆதாரம்’ என்று கூச்சலிடும் பாகிஸ்தான் மௌனமாக இருக்க, தங்களுக்குக் கிடைத்த முதல்கட்ட விசாரணை விவரங்களை அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன், பாதுகாப்பு சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களிடையே பகிர்ந்துகொண்டன.

கோபத்தின் உச்சிக்கே சென்ற பான் கீ மூன் “இந்தியாவின் பக்கம் நியாயம் இருக்கிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும” என்று பல நாடுகளிடம் தாமே பேசி வேண்டுகோள் விடுத்தார். சீனாவை மட்டும் அவர் கேட்கவில்லை.

ஏன் சீனாவுக்கு மட்டும் விதிவிலக்கு?


இதற்கு முன்பு ஐ.நா.பாதுகாப்புச்சபை ‘பாகிஸ்தான் தன்னுடைய தீவிரவாத முகாம்களை மூடவேண்டும். லஸ்கர் இ-தொய்பா போன்ற தீவிரவாத இயக்கங்களைத் தடைசெய்யவேண்டும்’ என்று கூட்டாக முடிவுசெய்த போதெல்லாம் தன் ‘வீட்டோ’ அதிகாரத்தை உபயோகப்படுத்தி பாகிஸ்தானுக்கு எதிராக எந்தவித சர்வதேச நடவடிக்கையும் வராமல் பாதுகாத்து வந்தது சீனா. இம்முறை சீனா வாய் திறக்காது மௌனமாக இருந்து வருகிறது.

தவிர, ஒவ்வொரு முறையும் ஐ.நா.சபையில தீவிரவாதம் என்ற பேச்சை இந்தியா எடுத்தாலே காஷ்மீர் பிரச்சினை என்ற வாதத்தை எடுத்துவைத்து திசைதிருப்ப பாகிஸ்தான் முயல்வது வழக்கம். ஜவஹர்லால் நேரு காஷ்மீர் பிரச்சினையை ஐம்பது வருடங்களுக்கு முன்பு தாமே வலியச் சென்று சர்வதேச மயமாக்கிய பிறகும், இன்னமும் இதை பாலஸ்தீனம், வடகொரியா போன்று சர்வதேச விஷயமாகவே கருதுகிறது ஐ.நா.

இந்தமுறை சீனா மற்றும் பாகிஸ்தானின் முயற்சிகள் தனிமைப்படுத்தப்பட்டன. பாதுகாப்பு சபை பாகிஸ்தானின் முக்கிய தீவிரவாத அமைப்புகளான ஜமாத் -உத்-தாவா



சர்தாரி



மன்மோகன் சிங்



மசூத் அசார்

மற்றும் லஸ்கர்-இ-தொய்பா ஆகியவற்றை சர்வதேச தீவிரவாத அமைப்புக்களாக அறிவித்து லஸ்கர் -இ-தொய்பாவின் தலைவர் ஹபிஸ் முகம்மது சயித் உள்ளிட்ட அந்த அமைப்பினரை சர்வதேசத் தீவிரவாதிகள் பட்டியலில் சேர்த்து விட்டது. இது இந்தியாவுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி.

பாதுகாப்பு சபையின் இந்த நடவடிக்கையால் அந்தத் தீவிரவாத அமைப்புகளின் வங்கிக் கணக்குகள் முடக்கப்படும். அந்த அமைப்பினர் உலகில் எந்தநாட்டில் நுழைந்தாலும் கைதாவார்கள். சொத்துக்கள் முழுவதும் பறிமுதல் செய்யப்படும். அமெரிக்காவும் தன் பங்குக்கு ஆப்கானிஸ்தானில் கொலைவெறித் தாக்குதல்களை நடத்திவரும் லஸ்கர் அமைப்பின் ரஹ்மான் லக் மற்றும் அதன் தலைமை ஃபைனான்சியர் ஹாஜி முகம்மது அஷ்ரம் ஆகியோர் பெயரையும் சர்வதேசத் தீவிரவாதிகள் பட்டியலில் சேர்த்துவிட்டது.

பாதுகாப்பு சபையின் தீவிரவாத பட்டியலில் கடைசியாக சேர்க்கப்பட்ட பெயர் முகம்மது அகமத் பஷாசிக். இந்தியரான இவர், சவூதி அரேபியாவில் தங்கியுள்ள கோடீஸ்வரர். மசகு எண்ணெய் பணத்தை உலகெங்கும் உள்ள தீவிரவாதிகளுக்கு கச்சிதமாக அனுப்பி வைப்பதில் கைதேர்ந்தவர். பாகிஸ்தான் ஆதரவாளரான இவரும் இவரைச் சேர்ந்த பாகிஸ்தான் நம்பிக்கை நிதியங்களும் பயங்கரவாத அமைப்புகள் என்று ஐ.நா சபையால் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஐ.நா-சபையின் அறிவிப்பைத் தொடர்ந்து, பாகிஸ்தானில் கூடிய ஜமாத்-உத்-தவா கூட்டத்தில் அதன் தலைவர் மவுலானா அப்துல் அசிஸ் அலி, “ஐ.நா-வின் முடிவு எங்களைக் கட்டுப்படுத்தாது. எங்கள் செயல்பாடுகள் தொடரும். ஐ.நா. என்ன? எவரும் எங்களை அசைக்க முடியாது!” என கூச்சலிட்டிருக்கிறார்.

ஐ.நா-வின் முடிவுகள் பாகிஸ்தான் மீது இந்தியா போர் தொடுப்பதைத் தடுப்பதற்குத்தான் என்கிறார்கள் உலகப் பார்வையாளர்கள்.

“ஐ.நா. அவசரமாகக் கூடி இந்த கடுமையான முடிவுகளை எடுத்ததற்கு காரணமே, இந்தியா தன்னிச்சையாக பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத முகாம்களை தாக்குவதைத் தடுக்கத்தான். இந்தியாவை முழுமையாக ஆதரிக்கும் அமெரிக்கா, ஈராக், ஆப்கானிஸ்தான் போரில் தனக்கு ஆதரவு தரும் பாகிஸ்தானை ஒரேயடியாக எதிர்க்க விரும்பவில்லை. அதனால்தான் பாகிஸ்தான் மீது இராணுவ நடவடிக்கை எடுப்பதை ஆதரிக்கவில்லை. ஐ.நா-வில் உள்ள இஸ்ரேலியத் தூதர், ‘நாம் சேர்ந்து பாகிஸ்தானின் தீவிரவாத முகாம்கள் மீது குண்டுவீசலாம் அல்லது இந்தியா தாக்குதல் நடத்த அனுமதி வழங்கலாம்’ என கோரியும் அமெரிக்கா மறுத்துவிட்டது. செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பின் ஐ.நா. சபையின் கருத்தைக் கேட்காமலேயே தன்னிச்சையாக ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகிய நாடுகள் மீது போர் தொடுத்த அமெரிக்காவின் நிலைப்பாடு எங்களுக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை” என்கிறார்கள் அந்தப் பார்வையாளர்கள்.

“தனது ஆதிக்கத்தில் உள்ள ஆப்கானிஸ்தானின் எல்லைப் பகுதிகளில் தாலிபானின் நடவடிக்கைகளை தடுக்க பாகிஸ்தான் இராணுவம் முயன்றுவருகிறது. இந்தியா போர் தொடுத்தால் தன்னுடைய அனைத்துத் துருப்புகளையும் இந்திய எல்லை நோக்கி நகர்த்தப்போவதாக சொல்கிறது பாகிஸ்தான். அவ்வாறு நகர்த்தப்பட்டால் தலிபான்கள் காபூல் சென்று அமெரிக்க ஆதரவோடு செயல்பட்டுக் கொண்டிருக்கும் அமித் கர்சாய் அரசைக் கவிழ்த்துவிடுவார்கள். இது அமெரிக்காவுக்கு மிகப்பெரும் அடியாக இருக்கும். ஈராக் போரில் சிக்கித் தவிக்கும் அமெரிக்கா இப்போது காபூலையும் இழக்கத் தயாராக இல்லை. இதனால்தான் பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் தொடுக்க குறுக்கே நிற்கிறது. மேலும் பாகிஸ்தான் பிரதமர் சர்தாரிக்கு எந்த பலமும் கிடையாது. உளவுத்துறையான ஐ.எஸ்.ஐ, மதவாத ஜமாத் இயக்கங்கள், தலிபான் தலைவர்கள், பாகிஸ்தானின் வடக்கு மாகாணங்களான வாரிஸ்தான் போன்ற பகுதிகளில் வாழும் மலைஜாதியினர், போர்த் தலைவர்கள், பண முதலைகள் என பல்வேறு குழுக்கள் பாகிஸ்தானை ஆட்டிப் படைக்கின்றன. இந்த நிலையில் பாகிஸ்தான் மீது இந்தியா போர் தொடுத்தால் தன்னுடைய ஆப்கானிஸ்தான் லாகான் கழன்றுவிடும் என்பதால்தான் ஐ.நா. மூலம் ‘தீவிரவாத எதிர்ப்பில்’ உறுதியும் காட்டி தன் நலத்தையும் காத்துக்கொண்டிருக்கிறது அமெரிக்கா!” - இப்படித்தான் அமெரிக்க வெளியுறவு வட்டாரத்தில் செய்திகள் கசிந்து கொண்டிருக்கின்றன.

ஆக, ‘பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்’ என்பதுதான் அமெரிக்காவின் நிலைப்பாடு போலிருக்கிறது. இதனால் பல ஆயிரம் கோடிகளைக் கொட்டி நடத்த வேண்டிய போர் ஆபத்து தற்காலிகமாக நீங்கி இருக்கிறது. இது இந்தியாவுக்கு ஒருவகையில் லாபம்தான் என்றாலும், இந்த முடிவால் காஷ்மீர் பிரச்சினையை சர்வதேச பிரச்சினையாக்க வேண்டும் என்ற பாகிஸ் தானின் ஆசையையும் அமெரிக்கா முன்னெடுத்து வைத்திருக்கிறது. அதுமட்டுமல்ல, அமெரிக்கா எதையும் சுயநல நோக்கோடுதான் செய்யும் என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம்.

*(நன்றி: விகடன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ், புதுவருட தினங்களில் ஊரடங்கைத் தளர்த்தி உதவுக

## யாழ்.ஆயர் படைத் தளபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ.22

கிறிஸ்தவர்களின் விசேட தினங்களான கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட தினங்களில் அவர்கள் ஆலயங்களுக்குச் சென்று திருப்பலிகளில் பங்குபற்றுவதற்கு வசதியாக இரவுவேளைகளில் ஊரடங்கைத் தளர்த்தி உதவுமாறு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கோரியுள்ளார்.

படைத்தளபதிக்கு யாழ்.ஆஜர் அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.ஆயரின் செயலாளர் அருட்திரு எஸ்.ஏ.றொஷான் அடிகளார் உதயனுக்குத் தெரிவித்தார்.

கிறிஸ்தவர்களின் முக்கிய நாள்களான கிறிஸ்மஸ், புதுவருட தினங்களில் நள்ளிரவில் மக்கள் தத்தமது ஆலயங்களுக்குச் சென்று திருப்பலிகளில் பங்குபற்றுவது வழக்கம். இதற்கு வசதியாக எதிர்வரும் 24ஆம், 31ஆம் திகதிகளில் இரவில் ஊரடங்கைத் தளர்த்தி கிறிஸ்தவர்கள் ஆலயங்களுக்குச் சென்றுவர உதவுமாறு அந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக ஆயரின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (அ-50)

## ஆங்கில டிப்ளோமா

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் உயர் தேசிய ஆங்கில டிப்ளோமாக் கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதுவரை பதிவு செய்யாத மாணவர்களை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## தீவகத்தில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நீங்கியது

வேலணை,டிசெ.22

தீவகத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் போதிய மருந்து வகைகள் கையிருப்பில் உள்ளன எனத் தெரிவிக்கப்படு கின்றது.

அண்மைக் காலமாகத் தீவக வைத்திய சாலைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாக 'உதயன்' சுட்டிக்காட்டியிருந்தமை தெரிந்ததே.

கடந்த 15 ஆம் திகதி 4 ஆம் காலாண்டுக்கான மருந்துகள் தீவக வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதையடுத்தே இந்த மருந்துத் தட்டுப்பாடு நீங்கியுள்ளது. (202-267)

# தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் புதிய நியமனம் பெற்ற ஆசிரியர்களின். சுயவிவரக் கோவைகள் தயாரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 22

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் அண்மையில் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களின் சுயவிவரக் கோவைகள் தயாரிக்கப் படவுள்ளன.

சுயவிவரக் கோவை தயாரிப்பபதற்கு பின்வரும் ஆவணங்களை குறிப்பிட்ட திகதிகளில் வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வலயக் கல்வி பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கேட்டுள்ளார்.

நியமனக்கடிதம் - 3 பிரதிகள், பிறப்புச் சான்றிதழ் - 2 மூலப்பிரதிகள், கல்வித் தகைமைச் சான்றிதழ் - மூலப்பிரதியுடன் 2 பிரதிகள், குணச் சான்றிதழ் - 2 அவற்றில் ஒன்று பிரிவு கிராம அலுவலரிடம் பெற்றது, திருமணச் சான்றிதழ் - 2 மூலப்பிரதிகள் கணவன் அல்லது மனைவி, பிள்ளைகள் ஆகியோரின் பிறப்புச் சான்றிதழ் - 2 மூலப்பிரதிகள், தேசிய அடையாள அட்டை - 2பிரதிகள், கணவன் அல்லது மனைவியின் தேசிய அடையாள அட்டை - 2 பிரதிகள் ஆகியவை சமர்ப்பிக்க வேண்டும்.

கைதடி, நாவற்குளி ஆகிய பிரதேச பாடசாலைகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கும் ஏனைய பாடசாலைகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் 30 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மேற்படி ஆவணங்களுடன் சமூகமளிக்குமாறும் கேட்டுள்ளார். (202-207)

# செவ்வாய் நடந்த 4 முனைத் தாக்குதலில் புலிகள் பல்குழல் வெடிகணை செலுத்திகளை பயன்படுத்தினர்

## 'டெய்லி மிரர்' பத்திரிகை கட்டுரையில் தகவல்

கொழும்பு, டிசெ.22

கிளாலி மற்றும் கிளிநொச்சி களமுனைகளில் கடந்த செவ்வாய்க்கிழமை சிறிலங்கா படையினர் மேற்கொண்ட பல முனை நகர்வுகளுக்கு எதிரான தாக்குதல்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் பல்குழல் வெடிகணை செலுத்திகளை பயன்படுத்தியுள்ளனர். கொழும்பிலிருந்து வெளிவரும் 'டெய்லி மிரர்' பத்திரிகை இத்தகவலை தெரிவித்துள்ளது.

'டெய்லி மிரரில்' இது தொடர்பாக வெளிவந்த முக்கிய பகுதிகள் வருமாறு:-

சிறிலங்கா படையினரின் மூத்த அதிகாரிகள் பலர் கடந்த திங்கட்கிழமை இரவு பாரிய தாக்குதல் ஒன்றுக்காக வேகமாக செயலாற்றிக் கொண்டிருந்தனர். மறுநாள் காலை தாக்குதல் தொடங்கவிருந்தது. அதிகாலை 4 மணியளவில் 53, 55, 57, 58 ஆவது படையணிகள் அதன் கட்டளை அதிகாரிகளின் வழிநடத்தலில் களமிறக்கப்பட்டன. 57 மற்றும் 58 ஆவது படையணிகள் இணைந்து பூநகரி - பரந்தன் வீதி வழியாக கிளிநொச்சி நோக்கியும் 57 ஆவது படையணியின் மற்றைய பிரிகேட் அக்கராயனில் இருந்து வடக்குப் புறமாகவும் இரணைமடுகுளம் நோக்கி மற்றுமொரு அணியும் நகர்வுகளைத் தொடங்கின.

கிளாலி - முகமாலை களமுனையில் 53 மற்றும் 55 ஆவது படையணிகள் நகர்வை மேற்கொண்டன. அங்கு கடும் சமர் மூண்டது.

55 ஆவது படையணி கடுமையான இழப்புக்களை சந்தித்தது. இந்த இழப்புக்களால் அவர்களின் திட்டம் கைகூடவில்லை. கிளிநொச்சி முனையில் விடுதலைப் புலிகள் அலை அலையாக வந்து தாக்கினார்கள். எனவே படையினரால் முன்நகர்ந்த பிரதேசங்களை தக்கவைக்க முடியவில்லை.

அதிக இழப்புகளை தொடர்ந்து 53 மற்றும் 55 ஆவது டிவிசன்கள் தந்திரோபாய பின்நகர்வை மேற்கொண்டதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் கனரக ஆயுதங்களையும், பல்குழல் வெடிகணை செலுத்திகளையும் ('றொக்கெற் லோஞ்சர்') பயன்படுத்தியிருந்தனர்.

படையினரின் நகர்வுகளுக்கு வன்னியில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழை பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்றது. பல பகுதிகளில் படையினர் நீர் தேங்கியுள்ள பகுதிகளின் ஊடாக நகர்வை மே[illegible] கொள்ள வேண்டியுள்ளது.

இம்மோதல்களில் சிங்க றெஜிமென்ட், சிலோன் இலகு காலாட்படை றெஜிமென்ட், கெமுனு வோஜ், கெமுனு றெஜிமென்ட் போன்ற படைப் பிரிவுகள் பங்குபற்றியிருந்தன. படைத் தரப்பு வட்டாரங்கள் தெரிவிப்பதை விட இழப்புக்கள் அதிகமாகும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வைத்தியர் நியமனம்

வேலணை,டிசெ.22

வேலணை வைத்தியசாலைகளில் இயங்கிவரும் உளவள சிகிச்சை நிலையத்திற்கு புதிய வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி தயாபரணி பாரதிதாசன் உளவள சிகிச்சை நிலையத்தில் நேற்றுமுன்தினம் முதல் கடமையாற்றுகிறார். இந்நிலையத்தில் கடமையாற்றிய தென்னிலங்கை வைத்திய அதிகாரியின் இடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த உளவள சிகிச்சை நிலையம் மாதத்தில் இரண்டு சனிக்கிழமைகளில் இயங்கும் எனவும் தீவகப் பிரதேசத்திலுள்ளவர்கள் இங்கு சிகிச்சை பெற முடியும் எனவும் மேலும் இங்கு வரும் உள நோயாளர் கட்டாயம் ஒரு உதவியாளருடனும், தமக்குரிய 'கிளினிக்' கொப்பி மருந்துப் பைகள் என்பனவற்றுடன் வருகை தர வேண்டும் எனவும், முதற்தடவையாக சிகிச்சைபெற வருவோரும் இங்கு வர முடியும் எனவும் புதிதாக நியமனம் பெற்ற வைத்தியர் தெரிவித்தார். (202-267)

# மாபெரும் கண்காட்சியும் களியாட்ட விழாவும் யாழ்.நகரில் எதிர்வரும் 27 முதல் 29 வரை

''யாழ்ப்பாணத்தின் எதிர்கால நோக்கு'' என்ற மகுடத்தில் யாழ். குடாநாட்டில் வாழும் மக்களுக்காக தொழில்சார் மற்றும் கல்விக் கண்காட்சி இவ்வார இறுதியில் மிகவும் கோலாகலமாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சியும் களியாட்ட விழாவும் யாழ். பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்தின் ஏற்பாட்டில் சமாதானச் செயலகத்தின் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தின் அரச நிறுவனங்களினதும் தனியார் வர்த்தக சமூகததினதும் அனுசரணையில் நடைபெறும் என்று படைத்தரப்பினர் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியை இம்மாதம் 27, 28 மற்றும் 29 ஆகிய மூன்று தினங்கள் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி வளாகங்களில் நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

கண்காட்சி தினமும் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாவதுடன் இதற்கென யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இருந்தும் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

யாழ்.குடாநாட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலையை விட்டு விலகிய இளைஞர், யுவதிகளுக்காக தற்காலத்தில் பயன்படுத்தப்படும் தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் இலத்திரனியல் ஊடகம் பற்றிய அறிவையும் பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கப்படுவதுடன் அதன்மூலம் அவர்களுக்கு தொழில் வாய்ப்பை உருவாக்கிக் கொடுப்பதும் அவர்களிடத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தும் இக்கண்காட்சியின் பிரதான நோக்கமாகும்.

இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் ஏதுவாக இருக்கும். அத்துடன் சிறுகைத்தொழில்களில் ஈடுபடுவோருக்கு அவர்களின் உற்பத்திகளை விற்பனை செய்துகொள்ளும்முகமாக கிரமமானதும் வெற்றிகரமானதுமான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும்-

கடற்றொழிலாளர்கள் மற்றும் விவசாயத்துறையினருக்கு அவர்களின் தொழிலை வெற்றிகரமாக முன்னெடுத் துச் செல்லும் பொருட்டுத் துறைசார்ந்த நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்திக் கொள்வது பற்றி அவர்களை அறிவுறுத்துவதும் காட்சியின் முக்கிய அம்சமாகும். அவை குறித்த பயிற்சிகளை வழங்கி அதன்மூலம் சிறந்த விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த இது அரியதொரு சந்தர்ப்பம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### விற்பனைக் கூடங்கள்

இந்த தொழில்சார் மற்றும் கல்விக் கண்காட்சியில் சீ.ஐ.சீ, அக்றோ, லங்கெம், சொலெக், அரசாங்க கடற் றொழில் கூட்டுத்தாபனம், அபான்ஸ், மொபிடெல், டயலொக், கல்டெக்ஸ், ரிச்சட் பீரிஸ், ரண்கொத் என்ரபிறைசஸ், கொக்கோக் கோலா, எலிபண்ட் ஹவுஸ் நிறுவனங்கள் உட்பட மேலும் பல வர்த்தக நிறுவனங்களின் காட்சியறைக ளும் மற்றும் விற்பனை அங்காடிகளும் கொழும்பு நூல் வெளியீட்டாளர் சங்கத்தின் விற்பனை அங்காடிகளும் அடங்கும்.

அரசாங்க மற்றும் தனியார் வங்கிகளின் நடமாடும் சேவையினூடாக இங்கு சேவைகள் வழங்கப்படும்.

சிறுவர்களைக் களிப்பூட்ட ''மெரிகோரவுண்ட்'' விளையாட்டு, புகைவண்டி, அபாயக் கிணறு, கத்தரி ஊஞ்சல் உட்பட மேலும் பல களியாட்ட நிகழ்வுகளும், சீதுவை, சக்குரா, இசைக்குழுவுடன் நாட்டின் பிரபல தமிழ், சிங்களப் பாடகர் பாடகிகள் பலர் கலந்துகொள்ளும் இசைக் கச்சேரியும் மூன்று நாள்கள் இடம்பெறும்.


### வடக்கின் தாரகைப் போட்டி

இதேவேளை-

மேலும் யாழ்.குடாநாட்டில் பாடும் திறமைகொண்ட அனைவருக்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ''வடக்கின் தாரகை''யைத் தேர்ந்தெடுக்கும் மாபெரும் பாடல் போட்டியின் ஆரம்பப் போட்டிகள் தற்போது பிரதேச செயலக மட்டத்தில் நடைபெறுவதுடன் அதன் மாபெரும் இறுதிப்போட்டி 29ஆம் திகதி கண்காட்சி வளாகத்தில் காலை 10 மணிக்கு இடம் பெறும்.

வடக்கின் தாரகையாகத் தெரிவு செய்யப்படுபவருக்கு 15 இலட்சம் ரூபா பெறுமதியான மாருதி கார் ஒன்றும் பரிசாக வழங்கப்படுவதுடன், இரண்டாம் இடத்தைப் பெறுபவருக்கு பெறுமதிமிக்க கை உழவு இயந்திரம் ஒன்றும், மூன்றாம் இடத்தைப் பெறுபவருக்கு பஜாஜ் டிஸ்கவரி மோட்டார் சைக்கிள் ஒன்றும் பரிசாக வழங்கப்படும். அத்துடன் நான்காவது இடத்திலிருந்து பத்தாவது இடம்வரையிலான வெற்றியாளர்களுக்கு 20ஆயிரம் ரூபா வீதம் பணப்பரிசு வழங்கப்படும்.

யாழ். பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் ஆலோசனையில் இக்கண்காட்சி நடத்தப்படுவதாக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கை கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் 2008 ஆம் ஆண்டுக் கான கலா பூஷணம் விருது வழங்கும் வைபவம் கொழும்பு ஜோன்டி.சில்வா அரங்கில் நடைபெற்றபோது, கிழக்கிலங்கையின் சிரேஷ்ட ஊடகவியலாளரும், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பிரதித் தலைவருமான ஏ.எல்.எம். சலீம், முன்னாள் அமைச்சரும், ஜனாதிபதியின் ஊடக ஆலோசகருமான ஏ.எச்.எம். அஸ்வரிடமிருந்து கலாபூஷணம் விருதுடனான கௌரவத்தைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காண்க.

## கர்ப்பிணித் தாய்மாருக்கு உணவு உதவி

வேலணை, டிசெ.22

வேலணை அரச வைத்தியசாலையின் கர்ப்பிணிகள் கிளினிக்குக்கு வரும் தாய்மாருக்கு தேநீரும் மதிய உணவும் வழங்கப்பட்டு வருகின்றன.

சாட்டி மாதா தேவாலயப் பங்குத் தந்தை இவற்றை ஏற்பாடு செய்து வழங்கி வருகின்றார் என வைத்தியசாலையின் பொறுப்பு அதிகாரி ஆ.திருநாவுக்கரவு தெரிவித்தார்.

கர்ப்பிணித் தாய்மாரின் சிகிச்சையின் போது பல மணிநேரம் வைத்தியசாலையில் செலவிடுவதில் களைப்படைவதாகவும் அதனால் இவ்வுதவி அவர்களுக்கு மகவும் பயனுள்ளதாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

காலை 10 மணிக்குத் தேநீரும், மதியத்திற்கு உணவும் வழங்கப்படுகின்றன.

மேலும் இக்கிளினிக்கில் சிகிச்சை பெறும் தாய்மார்களுக்கு அவர்களின் பிரசவத்தின்போது ஒரு தொகுதி பிரசவ உடுப்பு, குழந்தைக்கான உடுப்புகள் என்பனவும் பங்குத்தந்தையால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு 20 தொகுதி அன்பளிப்புகள் கிடைத்துள்ளதாகவும் மேலும் தேவை ஏற்படும்போது வழங்குவர் எனவும் வைத்திய அதிபர் தெரிவித்தார். (202-267)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கம்பீர் - டிராவிட் அதிரடி ஆட்டம் இந்திய அணி 453 ஓட்டங்கள்!

## இலக்கைத் துரத்துகிறது இங்கிலாந்து


கம்பீர் - டிராவிட்

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையே மொஹாலியில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகளை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 453 ஓட்டங்களைக் குவித்தது. ஆரம் பத் துடுப்பாட்ட வீரர் கௌதம் கம்பீர் 179 ஓட்டங்களையும் ராகுல் டிராவிட் 136 ஓட்டங்களையும் குவித்து தமது அணியை வலுவான நிலைக்கு இட்டுச் சென்றனர்.

இவர்கள் இருவரையும் தவிர வேறு ஒருவருமே 30 ஓட்டங் களைத் தாண்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக பிளின்ரொப், சுவான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் பனேசர் 2 விக்கெட்டு களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சார்பாக அணித்தலைவர்ஜஜச கெவின் பீற்றர்சன் 144 ஓட்டங்களைக் குவித்தார். இவரும் பிளின்ரொப்பும் (62) இணைந்து நீண்டநேரம் துடுப்பெடுத்தாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை ஓரளவுக்கு உயர்த் தினர்.

நேற்றைய 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி 6 விக் கெட் இழப் புக்கு 282 ஓட் டங்களை எடுத் திருந்தது.




## ஆறு பேர் கொண்ட கிரிக்கெட் போட்டி

அகில இலங்கை வை.எம். எம். ஏ. தலைமைக் காரியாலயத்தினால் அதன் ஸ்தாபகத் தலைவர் ஏ. எம்.ஏ. அஸீஸ் மற்றும் செயலாளர் எம். லாபிர் ஹாசிம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக நாடு பூராகவுமுள்ள அதன் கிளை அங்கத்தவர்களுக்கிடையிலான ஆறு பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றினை எதிர் வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என விளையாட்டுக் குழுவின் தவிசாளர் எம். பௌஸான் அன்வர் தெரிவித்தார்.

மேற்படி போட்டி கொழும்பு ஸாஹிராக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற இருப்பதாகவும் போட்டியில் முதலிடம் பெறும் அணிக்கு ஏ.எம்.ஏ. அஸீஸ் கிண்ணமும் முப்பதாயிரம் ரூபாப் பணப்பரிசும், இரண்டாம் இடத்திற்கு எம். லாபிர் ஹாசிம் கிண்ணமும் இருபதாயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படவிருப்பதுடன் சிறந்த ஆட்ட நயகன், சிறந்த பந்து வீச்சாளர் போன்றோருக்கும் பணப்பரிசில்கள் வழங்கப்பட இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி போட்டிகள் வை.எம்.எம்.ஏ. அங்கத்தவர்களுக்குள் மட்டும் நடத்தப்படவிருப்பதால் பங்கு பற்றவிரும்பும் கிளைகள் தமது விண்ணப்பப்படிவங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் இலக்கம்- 63, விஜயராம மாவத்தை, தெமட்டகொட, கொழும்பு -09 இல் உள்ள தலைமைக் காரியாலயத்திற்கு உடன் அனுப்பி வைக்குமாறு தவிசாளர் கேட்டுக் கொள்கின்றார்.

பரிசளிப்பு நிகழ்வு அன்றைய தினம் இரவு வை.எம்.எம்.ஏ. தலைமைக் காரியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மொஹாலி டெஸ்ட் துளிகள்!

### மொஹாலி டெஸ்டில் நேற்றுமுன்தினம் நிகழ்த்தப்பட்ட சாதனைப் புள்ளி விவரங்கள் வருமாறு:-

★இந்திய வீரர் கௌதம் கம்பீர் 143 ஓட்டங்கள் எடுத்தபோது இந்த ஆண்டில் டெஸ்டில் ஆயிரம் ஓட்டங்களை நிறைவு செய்த 7ஆவது வீரர், இந்திய அளவில் 4ஆவது வீரர் என்ற சிறப்பைப் பெற்றார். 2008ஆம் ஆண்டில் அவர் 8 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருக்கிறார். ஏற்கனவே இந்த ஆண்டில் ஷேவாக் (1445), வி.வி.எஸ்.லட்சுமண் (1071), டெண்டுல்கர் (1047) ஆகிய இந்திய வீரர்களும் ஆயிரம் ஓட்டங்களைக் கடந்துள்ளனர்.

ஓர் ஆண்டில் 4 இந்திய வீரர்கள் ஆயிரம் ஓட்டங்களைத் தாண்டுவது இதுவே முதல் முறையாகும். இதற்கு முன்பு அதிகபட்சமாக 1979ஆம் ஆண்டு கவாஸ்கர் (1555), குண்டப்பா விஸ்வநாத் (1388), திலிப் வெங்சர்க்கார் (1174) ஆகிய 3 இந்திய வீரர்கள் ஓரே ஆண்டில் ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்து இருந்தனர்.

★ டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரே அணியின் 4 வீரர்கள் ஓர் ஆண்டில் ஆயிரம் ஓட்டங்களைக் கடப்பது 2ஆவது முறையாக நிகழ்ந்திருக்கிறது. இதற்கு முன்பாக இங்கிலாந்து அணியில் பீட்டர்சன், கொலிங்வூட், ஸ்டிராஸ், அலஸ்டயர் குக் ஆகியோர் 2006ஆம் ஆண்டில் ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து சாதனை படைத்திருந்தனர்.

★கம்பீர் ஒரு நாள் போட்டியிலும் 2008ஆம் ஆண்டில் ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் விளாசியுள்ளார். இவ்வாறு டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டியில் ஓரே ஆண்டில் ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 10ஆவது வீரர் கம்பீர் ஆவார். அதே சமயம் டெண்டுல்கர் (1997ஆம் ஆண்டு), கங்குலி (2007ஆம் ஆண்டு) ஆகிய இந்தியர்கள் முன்பே இந்த பெருமையைப் பெற்றிருக்கிறார்கள்.

★கம்பீர் - டிராவிட் ஜோடி 2ஆவது விக்கெட்டுக்கு 314 ஓட்டங்கள் சேர்த்து அசத்தியது. இந்த மைதானத்தில் ஓர் ஜோடியால் எடுக்கப்பட்ட அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை இது. (இதற்கு முன்பு முதல் விக்கெட்டுக்கு நியூஸிலாந்தின் ரிச்சர்ட்சன் - வின்சென்ட் ஜோடி 231 ஓட்டங்கள். 2003ஆம் ஆண்டு) மேலும் இங்கிலாந்துக்கு எதிராக 2ஆவது விக்கெட்டுக்கு இந்திய ஜோடி பெற்ற அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகவும் (முன்பு பரூக் என்ஜினீயர் - அஜீத் வடேகர் ஜோடி 192 ரன்கள், மும்பை, 1973ஆம் ஆண்டு) இது பதிவானது.

## ஆஸியை 6 விக்கெட்டுக்களால் வீழ்த்தியது தென்னாபிரிக்க அணி

அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 6 விக்கெட்டுகளால் அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடிப்பெடுத்தாடியது. இதன்படி தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 375 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அந்த அணி சார்பாக கடிச் 83 ஓட்டங்களையும் கிளார்க் 62 ஓட்டங்களையும் சைமன்ட்ஸ் 57 ஓட்டங்களையும் எடுத்தனர்.

தென்னாபிரிக்க அணி சார்பாக நிற்னி சிறப்பாக பந்து வீசி 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஸ்ரைன், மோர்கல், ஹரிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தடக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 281 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. கலிஸ் மற்றும் வில்லியர்ஸ் ஆகியோர் தலா 63 ஓட்டங்களைப் பெற்றனர்.

அவுஸ்திரேலிய அணியின் பந்து வீச்சாளர் மக்கல் ஜோன்சன் மிகவும் சிறப்பாக பந்து வீசி 8 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

முதல் இனிங்ஸில் 94 ஓட்டங்களில் முன்னிலை வகித்த அவுஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் மேலும் 319 ஓட்டங்களை சேர்த்து மொத்தமாக 413 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

414 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணி 4 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. சுமித் (108) மற்றும் டிவில்லியர்ஸ் (106) ஆகிய இருவரும் சதம் அடித்து அணியை வெற்றியை நோக்கி அழைத்துச் சென்றனர்.(த)

## டோனிக்கும் கோயில்!

ராஞ்சி, டிச.22

இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனிக்கு அவரது சொந்த ஊரான ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் ரசிகர்கள் கோயில் கட்டிவரும் தகவல் வெளியாகியுள்ளது. டோனி பெயரில் ரசிகர்கள் மன்றம் தொடங்கப்பட்டு, அவர்களுக்குள் நிதி திரட்டி இந்த கோயிலைக் கட்டுகிறார்கள். ராஞ்சி புற நகர் பகுதியில் 1650 சதுர அடியில் இதற்கான கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. அடுத்த ஆண்டுக்குள் இப்பணி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து டோனியின் ரசிகர் மன்றத் தலைவர் ஜிதேந்திரகுமார்சிங் கூறியதாவது:-

''அமிதாப்பச்சன், ஷாருக்கான் ஆகியோருக்கு லண்டனில் மெழுகு சிலை இருக்கும் போது, 5 அடி உயர டோனி சிலையை நிறுவி நாங்கள் ஏன் கோயில் கட்டக்கூடாது?'' என்று கேள்வி எழுப்பினார். இதற்கு டோனி சம்மதிப்பாரா? என்று கேட்டதற்கு, ''அவரை சமாதானப் படுத்த முயற்சித்து வருகிறோம். கிரிக்கெட் வரைபடத்தில் எங்கள் மாநிலத்தையும் அவர்



இடம்பெற செய்து இருக்கிறார்'' - என்றார்.

கோயில் கட்டுவது, தாங்கள் அவருக்கு செலுத்தும் மரியாதை என்றும் அவர் குறிப்பிட்டார். டோனியின் குழந்தைப் பருவம் முதல் இளமை பருவம் வரை சுமார் 200 புகைப்படங்களை சேகரித்து வைத்துள்ளனர். அதனைப் பார்வைக்கு வைக்கவும் முடிவு செய்துள்ளனர்.

## கிரிக்கெட்டின் முன்னுதாரணம் சச்சின்!

லண்டன், டிச. 22


இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட் விளையாட்டுக்கே முன்னுதாரணமாக திகழ்வதாக இங்கிலாந்து சகலதுறை வீரர் பிளின்ரொப் கூறியுள்ளார்.

சென்னை டெஸ்ட் போட்டியில் அபார சதம் அடித்து இந்தியாவை வெற்றிபெற வைத்த டெண்டுல்கரின் ஆட்டம் பற்றி பிளின்ரொப் இங்கிலாந்து நாளிதழ் ஒன்றில் குறிப்பிட்டுள்ளதாவது:-

சென்னையில் சச்சின் டெண்டுல்கர் ஆடிய ஆட்டம் கனவு ஆட்டம் போல அமைந்திருந்தது. டெண்டுல்கர் ஆடியதைப் பார்க்கும்போது அவரைக் கண்டு வியக்காமல் இருக்க முடியாது. கிரிக்கெட் விளையாட்டுக்கே அவர் முன்மாதிரியாக விளங்குகிறார்.

டெண்டுல்கருக்கு எதிராக விளையாடும் போது எதிரணி வீரர்களாலும் மிகவும் சிறப்பாக விளையாட முடிகிறது. அவருக்கு பந்து வீசுவதை நான் மிகவும் விரும்புகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**பிளின்ரொப் புகழாரம்**



## கண் பார்வையற்ற வீரர்கள் மோதும் கிரிக்கெட் போட்டி சென்னையில்

சென்னை, டிச. 22

பார்வையற்ற வீரர்கள் பங்கேற்கும் தென் இந்திய கிரிக்கெட் போட்டி சென்னையில் திங்கட்கிழமை முதல் 3 தினங்கள் நடைபெறுகிறது.

தேசிய பார்வையற்றோர் கிரிக்கெட் அமைப்பின் தமிழ்நாடு பிரிவு, நந்தனம் வை.எம்.சி.ஏ. மைதானத்தில் இப் போட்டியை நடத்துகிறது.

இப்போட்டியில் கேரளம், ஆந்திரம், கர்நாடகம், தமிழகம் ஆகிய மாநிலங்களில் இருந்து தலா 2 அணிகள் பங்கேற்கின்றன.

தொடக்க சுற்றுகள் 20 ஓவர்கள் அடிப்படையிலும், இறுதிப் போட்டி 30 ஓவர்கள் அடிப்படையிலும் நடைபெற உள்ளன. தேசிய பார்வையற்றோர் கிரிக்கெட் அமைப்பின் தமிழ்நாடு பிரிவு செயலாளர் எம். சகாதேவன் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தான் செல்கிறது இலங்கை கிரிகெட் அணி

கராச்சி, டிச. 22

இந்தியக் கிரிக்கெட் அணி ஜனவரி மாதம் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டியில் விளையாடத் திட்டமிட்டிருந்தது. மும்பையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து இந்திய அணியின் பாகிஸ்தான் [illegible]ப்பட்டது.

[illegible]ந்து இலங்கை அணி பாகிஸ்தானில் விளையாட ஒப்புக்கொண்டுள்ளது. அந்த அணி பாகிஸ்தானுடன் 3 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டி மற்றும் 20 ஓவர் ஆட்டம் ஆகியவற்றில் விளையாடுகிறது.

இதற்கிடையே இலங்கை அணி பாகிஸ்தான் வர ஒப்புக்கொண்டுள்ளதால் அந்த அணிக்கு 15.6 கோடி ரூபா வழங்குவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. இலங்கை - பாகிஸ்தான் தொடர் ஜனவரி 19ஆம் திகதி தொடங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங். மீது சண்டை போட திகதி கூறிவிட்டு வருக அதை எதிர்கொண்டு முறியடிக்க நாங்கள் தயார்!

## கட்சியின் தலைவர் தங்கபாலு ஆவேசம்



சென்னை, டிச. 22

காங்கிரஸ் ஆதரவுடன் ஆட்சி நடக்கும் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியை இழிவுப்படுத்தும் செயலை இனியும் அனுமதிக்க மாட்டோம். யாராவது அவ்வாறு செய்ய நினைத்தால் விடமாட்டோம் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.வீ.தங்கபாலு ஆவேசமாக கூறியுள்ளார்.

காங்கிரஸ் தலைமை மீதோ, காங்கிரஸார் மீதோ சண்டை போட யாராவது விரும்பினால் என்னிடத்தில் திகதி குறிப்பிட்டு விட்டு வந்தால் அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றுக் காலை 11.15 மணிக்கு சத்தியமூர்த்தி பவனுக்கு தங்கபாலு வந்தார். அவர் காரை விட்டு இறங்கியதும் கட்சித் தொண்டர்கள் அவரை சூழ்ந்து கொண்டு, திருமாவளவனை கைது செய்ய வேண்டும் என்று பலத்த கோஷம் எழுப்பினார்கள்.

அத்துடன், நேற்று முன்தினம் ஆயுதம் ஏந்தி சத்தியமூர்த்தி பவனுக்குள் நுழைந்து விடுதலைச் சிறுத்தைகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். நாங்கள் செருப்படிதான் வாங்க வேண்டுமா? எங்களையும் ஆயுதம் ஏந்த அனுமதிதாருங்கள் என்றும் தொண்டர்கள் ஆவேசமாக கூறினர். அப்போது அவர்களிடம் தங்கபாலு,

'இங்கு நடந்த சம்பவங்கள் அனைத்தும் சோனியா காந்திக்குத் தெரியும். எந்த நேரத்தில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அது கண்டிப்பாக எடுக்கப்படும். அதுவரை அமைதி காத்திடுங்கள்' என்று சமாதானப்படுத்தி விட்டு அலுவலகத்திற்குள் சென்றார்.

அலுவலகத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்அவர் கூறியவை வருமாறு-

நேற்று முன்தினம் நான் தேனி மாவட்டத்தில் நடந்த செயல்வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்றேன். அந்த நேரத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோருடைய உருவப்பொம்மைகளை பெரியார் திராவிடர் கழகத்தினர் எரித்துள்ளனர்.

இதுபற்றி கேட்கச் சென்ற காங்கிரஸாரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அடுத்த ஒரு மணி நேரத்தில் அலுவலகத்தில் காங்கிரஸார் யாரும் இல்லாத நேரத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கற்களை வீசியும், இங்குள்ள நண்பர்களை அடித்தும் வன்முறை நிகழ்த்தியுள்ளனர்.

காங்கிரஸ் தலைமை மீதோ, காங்கிரஸார் மீதோ சண்டை போட யாராவது விரும்பினால் என்னிடத்தில் திகதி குறிப்பிட்டுவிட்டு வாருங்கள். சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.

நேற்று முன்தினம் விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் என்னிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு காங்கிரஸ் அலுவலகத்தை தாக்கியது விடுதலைச் சிறுத்தைகள் அல்ல - என்றார். அதற்கு நான், வீடியோவில் பதிவு செய்யப்பட்டுள்ளதை போட்டுப் பாருங்கள், யார் என்று தெரியும் என கூறினேன்.

காங்கிரஸ் பற்றி பேசுவதற்கு திருமாவளவனுக்கு அருகதை இல்லை. நேற்று வரை அவர் அ.தி.மு.கவுடன் இருந்தவர். காங்கிரஸை எதிர்க்க விடுதலைச் சிறுத்தைகளுக்கு எங்கிருந்து தைரியம் வந்தது? இதற்குப் பின்னால் யார் இருக்கிறார்கள்? என்பது தெரியவேண்டும். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசுவோரை நாங்கள் எதிர்ப்போம் - என்றார்.



சனிக்கிழமை வீதிமறியலில் ஈடுபட்ட தங்கபாலு உட்பட 330 பேரை பொலிஸார் கைது செய்தபோது......

# வரும் 26இல் தமிழீழ அங்கீகார மாநாடு

## திட்டமிட்டபடி நடைபெறும் என்கிறார் திருமாவளவன்



எங்கள் கட்சியின் இளம் சிறுத்தைகள் எழுச்சி மாநாடு மற்றும் தமிழீழ அங்கீகார கோரிக்கை மாநாடு எதிர்வரும் 26ஆம் திகதி திட்டமிட்டபடி சென்னையில் நடைபெறும் - என்று அக்கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் கூறியுள்ளார்.

சத்தியமூர்த்திபவன் தாக்குதல்சம்பவம் குறித்து அவர் சென்னையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையிலேயே அதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

பெரியார் தி.க. தலைவர் கொளத்தூர் மணி கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அக் கட்சியினர் சனிக்கிழமை காலை காங்கிரஸ் தலைவர்களின் உருவப்பொம்மைகளை எரித்துள்ளனர். அதன் பின் காங்கிரஸ் கட்சியினர் அண்ணாசாலையில் மறியல் செய்துள்ளனர்.

அப்போது சத்தியமூர்த்தி பவன் அருகே வைக்கப்பட்டிருந்த எங்கள் கட்சியின் தொழிற்சங்க விளம்பரத் தட்டியை காங்கிரஸ் கட்சியினர் சேதப்படுத்தியுள்ளனர். அதை அங்கிருந்த எங்கள் கட்சியினர் தட்டிக்கேட்டதால் இரு தரப்புக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டுள்ளது.

பின்னர் காவல் துறை தலையிட்டு சமாதானப்படுத்தியதால், இரு தரப்பினரும் கலைந்து சென்றுவிட்டனர். இது ஒரு சிறு சலசலப்பு. அவ்வளவுதான். ஆனால் சத்தியமூர்த்தி பவனை தாக்கினர் எனச் சிலர் வேண்டுமென்றே இப்பிரச்சினையைப் பெரிதுபடுத்துகின்றனர் - என்றார்.

## பொலிஸார் முன்னிலையில் காங்கிரஸார் மீது தாக்குதல்



திரைப்பட இயக்குநர் சீமான், பெரியார் தி.க. தலைவர் கொளத்தூர் மணி ஆகியோரின் கைதைக் கண்டித்து சென்னை ராயப்பேட்டை மணிக்கூண்டு அருகில் கூடிய பெரியார் திராவிடர் கழகத் தொண்டர்கள் காங்கிரஸ் தலைவர்களின் உருவப்பொம்மைகளை எரித்தனர். பின்னர் காங்கிரஸ் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவன் மீது விடுதலைச் சிறுத்தைகள் கல்வீசி, அங்கிருந்த தொண்டர்கள் சிலரைத் தாக்கினர்.

பொலிஸார் கண் எதிரில் கடந்த சனிக்கிழமை காலை இச் சம்பவங்கள் அடுத்தடுத்து நடந்தன. அதன்போது எடுக்கப்பட்ட படம் இது.

# ஈழத் தமிழரின் நலன்களைப் பாதுகாக்க விரும்பத்தகாத நிகழ்வுகளைத் தவிர்க்குக!

## அனைத்துத் தரப்பினருக்கும் ராமதாஸ் வேண்டுகோள்



சென்னை, டிச. 22

இலங்கைத் தமிழர்களின் நலன் கருதி அனைத்துத் தரப்பினரும் இனிமேல் விரும்பத்தகாத நிகழ்வுகளைத் தவிர்க்க வேண்டும் - என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து, சனிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு-

"இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக, தேசிய அளவில் உள்ள அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெறும் முயற்சியை பா.ம.க. மேற்கொண்டு வருகிறது. பா.ம.க. நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் கடந்த சில நாள்களாக டில்லியில் பா.ஜ.க. தலைவர் அத்வானி உள்ளிட்டோரைச் சந்தித்துள்ளனர்.

இலங்கைத் தமிழர்களின் நலனைக் காப்பதில் தேசிய அளவிலான கட்சிகளின் ஆதரவு திரண்டு வருகிறது. இந்த நேரத்தில் தமிழகம் ஒன்றுபட்டு நிற்கிறது என்பதைக் கட்டிக் காப்பது நமது கடமை.

ஆனால், துரதிஷ்டவசமாக கடந்த சில நாள்களாகத் தமிழகத்தில் நடந்து வரும் சில நிகழ்வுகள் இந்த ஒற்றுமையைக் குலைப்பதாக இருக்கின்றன என்பது வேதனை அளிக்கிறது. இந்தியா உள்ளிட்ட நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழர்கள் விரைவில் சொந்த ஊர்களுக்குத் திரும்பி, அமைதியாக வாழ வேண்டும் என்பதே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும்.

அவர்களின் இன்னல்களைத் தீர்ப்பதில் தமிழகம் ஒன்றுபட்டு நிற்கிறது என்பதை உறுதியுடன் உணர்த்த வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் நலன் கருதி அனைத்துத் தரப்பினரும் இனி விரும்பத்தகாத நிகழ்வுகளைத் தவிர்க்க வேண்டும்.

தமிழக அரசும், கடந்த சில நாள்களாக நடந்துள்ள நிகழ்வுகளைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ள அனைத்து நடவடிக்கைகளையும் மறுபரிசீலனை செய்து நல்லெண்ண அடிப்படையில் அவற்றைக் கைவிட முன்வர வேண்டும் - என்றுள்ளது.

# இலங்கையிலிருந்து தங்கக் கம்பிகளை கடத்திய பெண் சென்னையில் கைது

ஆலந்தூர், டிச. 22

இலங்கையிலிருந்து, சுடிதாரில் ஒரு கிலோ தங்கக் கம்பிகளை மறைத்து கடத்தி வந்த இலங்கைப் பெண் சென்னை விமான நிலையத்தில் வசமாக மாட்டிக் கொண்டார்.

விசாரணையில், அந்தப் பெண் இலங்கை தலைநகர் கொழும்பைச் சேர்ந்த சாய்ரோஸ் லலிதா (வயது - 35) எனத் தெரியவந்தது.

சுடிதாரால் மறைக்கப்பட்டிருந்த அவருடைய கைகளைச் சோதனை செய்தபோது, சுத்த தங்கத்தை 2 கம்பிகளாக மாற்றி கையில் வளையம்போல் சுற்றி இருந்ததைப் பார்த்து அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர். அவற்றின் மதிப்பு ரூ.15 லட்சம்.

# இந்தியச் செய்திகள்

## சிங்களத் தம்பதி இந்தியாவில் தஞ்சம்

இலங்கையிலிருந்து தனுஷ்கோடிக் கடற்கரையை கடந்த வெள்ளிக்கிழமையன்று வந்தடைந்த சிங்களத் தம்பதி, இந்தியாவில் அடைக்கலம் தரவேண்டும் - என வேண்டுகோள் விடுத்தனர்.

இலங்கை மன்னாரில் இருந்து 7 பெண்கள், 6 குழந்தைகள் உட்பட 21 அகதிகள் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையை கடந்த வெள்ளிக்கிழமை படகில் வந்தடைந்தனர்.

அவர்களோடு இலங்கை மகரகம பகுதியைச் சேர்ந்த துவர சந்தன (வயது - 30), கொழும்பு அருகே க...வத்தை நகரைச் சேர்ந்த சாருக தில்கானி (வயது - 17) தம்பதியினரும் வந்திருந்தனர்.

தனுஷ்கோடி காவல் நிலையத்தில் கியூ பிரிவுப் பொலிஸார், உள்ளூர் காவல்துறையினர் விசாரணை நடத்தி, மண்டபம் அகதிகள் முகாமிற்கு அவர்களை அனுப்பி வைத்தனர்.

காதலித்து திருமணம்கொண்ட நாங்கள், இலங்கை வவுனியாவில் இருந்த தமிழரான வசந்தமாலா வீட்டில் தங்கி இருந்தோம். அப்பகுதியில் தற்போது தீவிரமாகப் போர் நடந்து வருகிறது.

இதனால், அகதிகளோடு சேர்ந்து இராமேஸ்வரத்துக்கு வந்தோம். எங்களுக்கு அடைக்கலம் அளிக்க வேண்டும் என அந்தத் தம்பதியினர் வேண்டுகோள் விடுத்தனர்.

இந்நிலையில் அவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கமுடியாது எனத் தெரிவித்துள்ள இந்திய அதிகாரிகள், அவர்கள் கடவுச்சீட்டு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்படுவர் எனத் தெரிவித்துள்ளனர்.

# இலங்கை அகதிகளுக்கு வழங்கப்பட்டு வரும் வசதிகளை தெரிந்துகொள்ளாது தி.மு.க. அரசு மீது குற்றஞ்சாட்டுவதா?

## விஜயகாந்துக்கு கருணாநிதி கண்டனம்



சென்னை, டிச.22

இலங்கை அகதிகளுக்கு செய்து கொடுக்கப்படும் வசதிகள் குறித்து தி.மு.க. அரசு மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் கூறுவதா? - என்று விஜயகாந்துக்கு முதல்வர் கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், அவிநாசியில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமைப் பார்க்கச் சென்றதைப் பற்றி தெரிந்து கொண்ட பிறகுதான்; தமிழ்நாட்டிலுள்ள மற்ற அகதிகள் முகாம்களைப் பற்றியும், அதில் வாழ்ந்து வருகின்ற அகதிகளைப் பற்றியும் நான் விசாரித்துத் தெரிந்துகொண்டதைப்போல 'ஆனந்த விகடன்' பேட்டியில் கூறியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகள் முகாம்களின் பின்னணியைப் பற்றியும், தமிழக அரசு, அவர்களின் நலன் கருதி வழங்கி வரும் சலுகைகளைப் பற்றியும் முழுமையாகத் தெரிந்து கொள்ளாமல் விஜயகாந்த் ஏதேதோ சொல்லியிருக்கிறார்.

1983ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் காரணமாக முதன்முதலில் இலங்கை அகதிகள் இந்தியாவுக்கு வரத் தொடங்கினர்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 30.11.2008 அன்றைய நிலைவரப்படி, அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள குடும்பங்கள் மொத்தம் 19,547, அதாவது 73,425 பேர். முகாம்களைத் தவிர வெளியில் தங்கியுள்ள குடும்பங்கள் மொத்தம் 9,299, அதாவது 25,425 பேர். தமிழ்நாட்டிலுள்ள 25 மாவட்டங்களில் 113 அகதிகள் முகாம்கள் இயங்கி வருகின்றன.

தமிழகத்தில் இரண்டு இடைத்தங்கல் முகாம்கள் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் கொட்டப்பட்டியிலும் உள்ளன. இடைத்தங்கல் முகாம்களில் அகதிகள் காவல் துறையின் கண்காணிப்பில் இருக்கும்போது தினமும் மூன்று நேரம் சமைத்த உணவு வழங்கப்படுகிறது. மேலும், தேவையான மருத்துவ பரிசோதனைகளுக்குப்பின் தட்டம்மை நோய்களுக்கான நோய் தடுப்பு மருந்துகள் இலவசமாக கொடுக்கப்படுகின்றன.

அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு தி.மு.க. ஆட்சி சார்பிலும், மத்திய அரசினை வலியுறுத்தியும் பின்வரும் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அகதிகள் முகாம்களில் தங்கியிருப்போருக்கு வழங்கப்படும் நிதி உதவியினை 1.8.2006 முதல் - அகதி முகாம் - குடும்பத் தலைவருக்கு மாதந்தோறும் 200 ரூபாயிலிருந்து 400 ரூபாவாகவும், அந்தக் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு வயது வந்தோருக்கும் 144 ரூபாயிலிருந்து 288 ரூபாவாகவும், அந்த முகாம்களின் குடும்பத்திலுள்ள முதல் குழந்தைக்கு 90 ரூபாயிலிருந்து 180 ரூபாவாகவும், அந்த முகாம்களின் குடும்பத்திலுள்ள மற்ற குழந்தைகளுக்கு 45 ரூபாயிலிருந்து 90 ரூபாவாகவும்-உயர்த்தி வழங்கப்படுகிறது.

அகதிகள் முகாம்களில் உள்ள மாணவர்கள் 12ஆம் வகுப்பு வரை படிக்க அரசு மற்றும் அரசு நிதிஉதவி பெறும் பாடசாலைகளில் கல்வி, பாடப் புத்தகங்கள், சீருடை, மதிய உணவு, முகாம்களில் இருந்து பாடசாலை வரை செல்ல பேருந்து பயணச் சலுகை ஆகியன இலவசமாக வழங்கப்படுகின்றன. 11ஆம் வகுப்பில் பயிலும் இலங்கை அகதி மாணவர்களுக்கு இலவசமாக கைக்கிள் வழங்கப்படுகிறது.

2004 - 2005 ஆம் ஆண்டில் அகதிகள் முகாம்களுக்கு மொத்தம் செலவிடப்பட்ட தொகை 28 கோடி ரூபா என்பதற்கு மாறாக; 2008 - 2009 ஆம் ஆண்டில் 48 கோடியே 58 லட்சம் ரூபா என உயர்த்தப்பட்டு செலவிடப்படுகிறது.

முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு இப்படி ஏராளமாக சலுகைகளை வழங்கியுள்ள அரசைப்பார்த்து-ஒரே ஒரு அகதிகள் முகாமை மட்டும் பார்த்துவிட்டு, ஏதோ தனக்குத்தான் எல்லாம் தெரியும்; அரசின் எல்லாக் காரியங்களுக்கும் தானே தூண்டுகோல் என்ற பாணியில் விஜயகாந்த் குறை சொல்லியிருப்பதும், அதை அந்த இதழ் பளபளப்பாகவும், வரவேற்பாகவும் வெளியிட்டு இருப்பதும் எவ்வளவு "விரசம்" நிறைந்தது என்பதை நடுநிலையாளர்கள் சிந்திக்க வேண்டுகிறேன் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துச் சிதம்பர மண்டபத்தில் நடைபெற்ற

# அமரர் மகேஸ்வரனின் நினைவு நிகழ்வில் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், டிசெ.22

முன்னாள் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சரும் முன்னாள் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் தியாகராஜா மகேஸ்வரனின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஈழத்துச் சிதம்பர அறப் பணி நிலையத்தில் நடைபெற்றன. குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

காரைநகர் அபிவிருத்திச் சபைச் செயலாளரும் ஓய்வுபெற்ற அதிபருமான பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நினைவுரைகளை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், ஆங்கிலத்துறை விரிவுரையாளர் கலாநிதி திருமதி வீரமங்கை யோகரட்ணம், இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையா ளர் என்.சிவரட்ணம், யாழ். வர்த்தகச் சங்கத் தலைவர் எஸ். ஜெயக்குமார், விவாகப் பதிவாளர் திருமதி சகுந்தலா ஏகநாதன் உள்ளிட்ட பலர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் 'பத்திரிகையின் பார்வையில் மகேஸ்வரன்', 'நாடாளுமன்றம் சூட்டிய புகழாரம்', 'நாடாளுமன்றில் மகேஸ்வரன்' ஆகிய மூன்று நூல்களையும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் வெளியிட்டு வைத்தார். ஓய்வுபெற்ற நீதிபதியும் ஊர்காவற்றுறை பதில் நீதிவானுமான எஸ்.ஏ.ஈ. ஏகநாதன், காரைநகர் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் எஸ். சிவகுமார் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இந்த மூன்று நூல்களையும் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தொகுத்திருந்தார். நிகழ்வின் ஆரம்பத்தில் திருமதி விஜயகலாவின் தாயார் அமரர் மகேஸ்வரனின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்தார்.

நூலின் ஆய்வுரையினை ஆசிரியர் ந.விஜயசுந்தரம் நிகழ்த்தினார். முன்னதாக ஈழத்துச் சிதம்பரத்தில் விஷேட அபிஷேக பூசை வழிபாடுகளும் பஜனை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வுகளில் குடா நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் வருகை தந்திருந்தனர். (அ-250)

# 13 வயதுப் பிரிவினர் கிரிக்கெட் அரையிறுதியில் மத்திய கல்லூரி கொக்குவில் இந்துவை வென்றது

வலி.வடக்கு, டிசெ.22

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணம் செலான் வங்கி ஆதரவுடன் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திய கிரிக்கெட் போட்டி அரையிறுதி ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இரண்டு விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதிப் போட்டி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 28.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 61 ஓட்டங்களையே பெற்றுக்கொண்டது.

சத்தியன் 17, பார்த்தீபன் 10, மயூ... 6 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்... உதிரிகளாக 14 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் சார்பில் அனுசாந்தன் 2.5 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சௌமிதரன் 6 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களுக்கு 3 விக் கெட்டுக்களையும் யூலியஸ் 8 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். மிகவும் குறைந்த இலக்கான 62 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு யாழ். மத்திய கல்லூரிதுடுப்பெடுத்தாடக்களமிறங்கிய போதிலும் அதனை சுலபமாக பெறமுடியவில்லை.

41.1 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

நிரூபன் ஆட்டமிழக்காது 9 ஓட்டங்களையும் ஸ்ரீபன் 7 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 27 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் மயூரதாசன் 10 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களையும் லிங்கநாதன் 10 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் மோகனப்பிரியன் 7.1 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (அ-86)

# வன்னி மாவட்டத்தில் கடலுணவுக்கு கிராக்கி: தொழில் வாய்ப்பற்ற நிலையில் மீனவர்கள்

கிளிநொச்சி, டிசெ.22

படையினர் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் காரணமாக வன்னிப்பகுதியில் கடல் உணவுகளின் விலைகள் பெருமளவு அதி கரித்துள்ளன.

பூநகரி மற்றும் மாந்தை மேற்குப் பிரதேச சமாசங்களுக்கு உட்பட்ட மீனவர்கள் படையினரின் சுற்றிவளைப்புகளால் இடம் பெயர்ந்து தொழில் வாய்ப்புகளை இழந்துள்ளதுடன் தொழில் செய்ய இயலாத நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு,முல்லைத்தீவுப் பகுதிகளில் தொடராகப் படையினரால் நடாத்தப்படுகின்ற வான்வழி மற்றும் கடல் வழி எறிகணைத்தக்குதல்களினால் அச்சமடைந்துள்ள மீனவர்களில் குறைந்தளவிலானோரே தொழிலில் ஈடுபட்டுவருகின்றனர். எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் மீனவர்கள் தமது படகுகளில் தொழிலுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதனால் கட்டு மரங்களிலேளே தமது தொழில் நடவடிக்கைளை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தகைய நிலைமைகள் காரணமாக அண்மைய நாள்களில் இருந்து வன்னி சந்தைகளில் மீன்வகைகள் அதிக விலையில் விற்கப்பட்டு வருகின்றன.

சூடை,காரல்,போன்ற சிறியரக மீன்கள் கூட 200 ரூபா முதல் 400ரூபாவரையும் பாரை, நண்டு போன்றவை 300 ரூபா மூதல் 600 ரூபா வரையும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கபுப்பட்டுள்ளது.

# திருமலையின் எல்லைப்புற வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதனால் பொதுமக்கள் திண்டாட்டம்

திருமலை, டிசெ.22

திருகோணமலை மாவட்டத்தின் கிராமப் புறங்களில் அமைந்துள்ள அரச வைத்தியசாலைகள் பல தொடர்ந்தும் மூடப்பட்டிருப்பதால், பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக எல்லைக் கிராமமான திரியாய மற்றும் ஆலங்கேணி பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன.

தற்போது பெய்துவரும் அடைமழையினால் பல்வேறு தொற்றுநோய்களுக்கு ஆளாகியிருக்கும் மக்கள் வைத்தியசாலைகள் மூடப்பட்டுக் கிடப்பதால் பலத்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இவர்கள் தாம் வாழும் கிராமங்களிலிருந்து சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் பயணித்து திருகோணமலை அரசினர் பொது வைத்தியசாலைக்குச் சென்றே சிகிச்சை பெற வேண்டியவர்களாக உள்ளனர்.

திரியாய் மருத்துவமனையைப் பொறுத்தவரை அங்கு பணியாற்றிய சிங்கள வைத்தியர் பாதுகாப்புக் கருதி அங்கிருந்து சென்றுவிட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், வைத்திய தொழிற்சங்கம் சுகாதார அமைச்சருடன் நடத்திய பேச்சுகளையடுத்து, வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு பெரும்பான்மை இன வைத்தியர்கள் கடமைக்குத் திரும்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறையில் திருவாசக முற்றோதல்

வடமராட்சி, டிசெ. 22

மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையமும், அறநெறிப் பாடசாலையும் இணைந்து, பருத்தித்துறைபிரதேசத்திலுள்ள கோவில்களில் திருவாசக முற்றோதலை ஆரம்பித்துள்ளன.

இப்பகுதியிலுள்ள ஓதுவர் குழுவினால் கடந்த 16ஆம் திகதி மேலைப்புலோலி மாலந்தொணிப்பிள்ளையார் கோவிலில் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட திருவாசக முற்றோதல் தினமும் ஒவ்வொரு கோவிலிலும் இடம் பெற்று வருகிறது.

இன்று திங்கட்கிழமை காலை 7மணி முதல் பிற்பகல் 5மணிவரை மேலைப்புலோலி உசனை வைரவர் கோவிலிலும், நாளை செவ்வாய்க்கிழமை, குத்தான்பாதி வைரவர் கோவிலிலும், நாளை மறுதினம் புதன்கிழமை அத்தியடி முதலியாள் கோவிலிலும் திருவாசக முற்றோதல் நடைபெறும். (202-236)

# பூஸா முகாமிலிருந்த ஏழுபேர் விடுவிப்பு

கொழும்பு, டிசெ.22

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏழுபேர் கடந்த வியாழனன்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்புட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர் என மலையக மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரும், கடத்தல் மற்றும் காணாமல் போதல் தொடர்பான விசாரணையைக் கண்காணிக்கும் உறுப்பினரும், வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்ப பயிற்சி பிரதி அமைச்சருமான பெ. இராதாகிருஷ்ணன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அய்யாவு சாண்டேஸ்வரன், விநாயகத்தம்பி சொர்ணலிங்கம், எஸ்.ரஞ்சித் பிராங்கிளின், ரஞ்சித் பெர்னாண்டோ, ஞானப்பிரகாசம் ஜெயராஜ், ஜோன் அன்ரனிப்பிள்ளை, சுனில் வண்ணகோமுகே என்ற ஏழுபேரே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரினால் கடந்த ஒகஸ்ட் 25 இல் கைது செய்யப்பட்டு துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியல் பீட இரண்டாம் வருட மாணவரான இராசையா அபிநவ் என்பவரும் விடுதலை செய்யப்பட்டதுடன் -

கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த எஸ்.சிவலிங்கராசா,பி.பரமசிவம், டி.கே.சிவலிங்கபிள்ளை, ஜே. ஏ.பிரேமதாஸ், ஜே. ரசிக்கலா, ஏ.சுசித்திரா, எச்.டி. ஹெலன்டயானா என்ற ஏழுபேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர் .

மேலும், நீர்கொழும்புப் பகுதி வீடொன்றில் பணிப்பெண்ணாக இருந்த மஸ்கெலியா, டீசைட் தோட்டத்தைச் சேர்ந்த சந்திரகுமார் பிரியங்கா என்ற பெண்ணும் சந்தேகத்தின் பேரில் கடந்த செப்டெம்பரில் கைது செய்யப்பட்டு கடந்த மூன்று மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டு தற்போது விடுவிக்கப்பட்டுள்ளார் - என்று செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கில் நத்தார் கொண்டாட்டம்

மட்டக்களப்பு, டிசெ. 22

கிழக்கு மாகாணத்தில் வாழும் கிறிஸ்தவ மக்கள் எதிர்வரும் வியாழக்கிழமை நத்தார்பண்டிகையைக் கொண் டாடுவதற்கு தற்போது தயாராகி வருகின்றனர்.

இயேசு பாலகரின் பிறந்த தினத்துக்கு இன்னும் ஆறு தினங்களே எஞ்சியுள்ள நிலையில் கிழக்கு மாகாணத் தின் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த கிறிஸ்தவ மக்கள் கிறிஸ்து பிறப்பினை வரவேற்பதற்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழைக்கு மத்தியிலும் மக்கள் நத்தார் பண்டிகைக்குத் தேவையான பொருள்களை ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

கிறிஸ்தவ சமய மக்கள் பெரும்பான்மையாக வாழும் நகரங்களில் பண்டிகைக் கால வியாபார நடவடிக்கைகள் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நாட்டின் பல பிரதேசங்களிலும் பிரதான நகரங்களில் பண்டிகைக் கால வியாபார நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பல் வைத்தியர்களுக்கு விரைவில் நியமனம்

கொழும்பு,டிசெ.22

நாட்டில் பற் சுகாதார சேவையை மேம்படுத்தும் வகையில் 108 பல்வைத்தியர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வைத்தியர்களில் 49 பேர் பொலன்னறுவை,அனுராதபுரம், மொனராகலைமற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளிலும்,49 பேர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வைத்தியசாலைகளிலும் சேவையாற்றும் வகையில் நியமனங்களை வழங்குவதென சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கம்பளை-கோவலை வீதியில் பஸ் விபத்து; 20 பேர் காயம்

கம்பளை, டிசெ.22

கம்பளை - கோவலை பிரதான வீதியில் குருந்துவத்தைப் பகுதியில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் பஸ் ஒன்று பாதையை விட்டு விலகி விபத்துக் குள்ளானதில் 20 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் 7 பேர் கம்பளை வைத்தியசாலையிலும் 13 பேர் குருந்துவத்தை வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் 3 சிறுவர்களும் 5 பெண்களும் அடங்குகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (சி)



புயல் வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட ஜே/107, ஜே/109 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சிறுவர்களுக்கு மக்கள் வங்கியின் யாழ்.பிரதான வீதிக் கிளை தனது பணத்தில் இருந்து சேமிப்புக் கணக்கை ஆரம்பித்து அதற்கான சேமிப்பு புத்தகங்களை நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கியது.

அதன் போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காண்கிறீர்கள். மக்கள் வங்கி முகாமையாளர் வீ.எஸ்.முதலி, கிராம அலுவலர் இ.சந்திரகுமார் ஆகியோர் சிறுவர் களுக்கான சேமிப்புப் புத்தகங்கள் வழங்குவதையும் உதவி முகாமையாளர் கே.சிவகுமார், லயன் எஸ்.நவநாதன் உட்பட விருந்தினர்கள் அருகில் நிற்பதையும் காணலாம். (படங்கள்:- லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## இலங்கையில் போரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியின் தலைவர் எல்.கே.அத்வானியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்று ஞாயிற்றுக் கிழமை புதுடில்லியில் சந்தித்து இலங்கை யில் நடைபெற்று வரும் போரால் அப்பாவி ஈழத் தமிழர்கள் படும் இன்னல்கள் குறித்து விளக்கினார்.

தமிழ் மக்களின் இன்னல்களைப் போக்க இந்தியா உதவ வேண்டும். இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தும்படி அந் நாட்டு அரசை இந்தியா வலியுறுத்த வேண்டும் என்று அத்வானியிடம் சிவாஜிலிங்கம் கேட்டுக் கொண்டார்.

அதனை ஏற்றுக்கொண்ட அத்வானி, இலங்கை இனச்சிக்கல் குறித்தும், அங்கு போரை நிறுத்த வேண்டியதன் தேவை குறித்தும் நாடாளுமன்றத்தில் தாம் வலியுத்த உள்ளதாக உறுதியளித்தார்.

இச்சந்திப்புத் தொடர்பாக சிவாஜிலிங்கம் எம்.பி. கூறியவை வருமாறு-

இலங்கையில் அப்பாவித் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் குறித்து பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் எல்.கே.அத்வானி அவர்களிடம் நான் எடுத்துக்கூறினேன்.

இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையிலும், அடுத்த தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க இருக்கும் கட்சி என்ற வகையிலும், இலங்கைத் தமிழரைப் பாதுகாக்கும் பொறுப்பு பாரதிய ஜனதாவுக்கு உண்டு என்று அவரிடம் வலியுறுத் தினேன்.

அதனை ஏற்றுக்கொண்ட அத்வானி, இலங்கைத் தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்கத் தமது கட்சி குரல் கொடுக்கும் என்று என்னிடம் உறுதியளித்தார் - என்றார்.

இலங்கையில் இந்துக் கோவில்கள் இடிக்கப்படுகின்றமை பற்றி அத்வானியிடம் தாம் எடுத்துக் கூறினார் எனவும், அதற்கு அவர் கடும் கண்டனம் தெரி வித்தார் எனவும் சிவாஜிலிங்கம் எம்.பி. மேலும் தெரிவித்தார்.

இராஷ்டிரிய ஜனதாத் தள தலைவர் லாலு பிரசாத் யாதவ், ஐக்கிய ஜனதாத் தள தலைவர் ரத்யாதவ் உள்ளிட்ட தலைவர்களையும் சந்தித்து இலங்கை இனச்சிக்கல் தொடர்பாக ஆதரவு திரட்ட சிவாஜிலிங்கம் முடிவு செய்திருக்கிறார் என தகவல்கள் தெரிவிக் கின்றன.

(அ-சி)

## ஆழிப்பேரலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான தேசிய மட்டத்திலான பிரதான வைபவம் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கண்டி தலதாமாளிகையில் சமய நிகழ்வுகளுடன் இடம்பெற்றுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து மாவட்ட செயலகங்களிலும் பிரதேச செயலகங்களிலும் தேசிய பாதுகாப்பு தின நிகழ்வுகள் ஏற் பாடு செய்யப்பட்டுள்ளன.

ஆழிப்பேரலை அனர்த்தத்திற்குட்பட்டவர்களை நினைவு கூரும் வகையில் 26 ஆம் திகதி காலை இரண்டு நிமிட நேர மௌன அஞ்சலி அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இந்த மௌன அஞ்சலி ஒரே நேரத்தில் நடைபெற வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆழிப்பேரலை அனர்த்தத்தின் நான்காவது ஆண்டு நினைவு தினத்தை அனுஷ்டிப்பதற்கான பல்வேறு ஏற்பாடுகளை அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புகள் மேற்கொண்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-சி)

## வன்னியில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களில் பலரும் தேசியக்கொடிகளை தாங்கியவாறும் வாகனங்களில் தேசிய கொடிகளை பறக்கவிட்டும் கோஷங்கள் எழுப்பியவாறும் பேரணியில்கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி பஸ் தரிப்பு நிலையத்தில் கொடிகாமத்திலிருந்தும் கைதடியிலிருந்தும் வந்த பேரணிகள் சந்தித்தன. இதனால் சாவகச்சேரி பஸ் தரிப்பு நிலையம் மக்கள் கூட்டத்தால் நிறைந்தது.

நேற்றைய பேரணியால் வர்த்தக நிலைங்கள் பொதுச் சந்தைகள் மூடப்பட்டு வீதிகள் வெறிச் சோடிக் காணப்பட்டன.

அதேவேளை, வடமராட்சியிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களை அவர்கள் விருப்பப்படி வெளியே வருவதற்கு விடவேண்டும் எனக் கோரும் பேரணி நடைபெற்றது.

ஆர்ப்பாட்டப் பேரணி பருத்தித்துறை சிவன் கோயிலடியில் இருந்து நெல்லிடி கந்தமுருகேசனார் சிலைவரை நடைபெற்றது. இந்தப் பேரணியிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். (அ-131-78-25)

## புலிகளை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பது குறித்து அரசுக்குள் கடும் விவாதமொன்று இடம்பெற்றுள்ளது.

கண்டி தலதா மாளிகையின் மீதான தாக்குதலைத் தொடர்ந்து 1998 இல் விதிக்கப்பட்ட தடை செப்டெம்பர் 2002 இல் நீக்கப்பட்டது.

தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் பேச்சுகளில் ஈடுபட முடியாது என விடுதலைப் புலிகள் தெரிவித்ததைத் தொடர்ந்தே இத்தடை நீக்கப்பட்டது. மீண்டும் தடைகளை விதிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கும் அவர்களது கட்டுப்பாட்டிலுள்ள மக்களுக்கும் கடுமையான செய்தியைச் சொல்ல ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்புகிறார்.

விடுதலைப் புலிகளைத் தடை செய்யாமலே அரசு இதுவரை போரை முன்னெடுத்தது. இராணுவ நடவடிக்கைகள் வெற்றியளித் துள்ளதன் காரணமாக தற்போது அரசுக்குத் தனது அணுகு முறைகளை மேலும் சரி செய்யவும் புதிய விடயங்களைச் சேர்க்கவும சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

கிளிநொச்சி எப்போது கைப்பற்றப்படும் என்பது குறித்து உறுதியாக எவரும் எதனையும் தெரிவிக்காதபோதிலும் அரசியல் வட்டாரங்கள் மூன்று மாதங்கள் எனத் தெரிவிக்கின்றன. யுத்த முனையில் கிடைக்கும் வெற்றிகளை அடிப்படையாக வைத்தே அடுத்த கட்டத்தைத் தீர்மானிப்போம் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி விடுதலைப் புலிகள் மீதான தடையை விதித்ததும் புதுடில்லிக்கும் இதன் மூலம் வெளிப்படையான செய்தியொன்றைச் சொல்வார் என அரச வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. (அ-சி)

## உயிருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்ட போது 50 இராணுவத்தினர் உயிரிழந்தனர். 160 பேர் வரை காயமடைந்திருந்தனர். அதன் போதே படைச்சிப்பாய் ஒருவர் விடுத லைப் புலிகளால் உயி ருடன் பிடிக்கப்பட்டார் என்றும் அந்தச்செய்திகள் கூறுகின்றன.

அந்தச் சிப்பாய் 53ஆவது கொமாண்டோ டிவிசனில் 'சிங்க' படைப்பிரிவில் இருந் துள்ளார் என்றும் இவர் அனுராதபுரம் கல்கமுவப் பகுதியைச் சேர்ந்த நிசாந்த ரண சிங்க (வயது-22) எனவும் அந்தத் தகவல் கள் மேலும் தெரிவித்துள்ளன.


Personal Classes & Group Classes
123/2, Temple Road, Jaffna
(U.N.D.P இற்கு அருகில்)
Grade 9, 10, 11 இற்கான
SCIENCE
By: N.MAHENDRAN
T.P 077 667 9544

RAM COMMUNICATION
நத்தார் பண்டிகையை முன்னிட்டு விசேட உள்நாட்டு, வெளிநாட்டு பொதிகள் VCD, CD, உலர் உணவுப் பொதிகள் பாதுகாப்பாகவும் விரைவாகவும் அனுப்பிவைக்கப்படும்.
விசேடமாக குறைந்த கட்டணங்களில்
Internet Browsing மற்றும் Internet Call, Local Call, IDD, Fax, Email, Laminating, Photo Copy என்பனவும் இங்கு மேற்கொள்ளப்படும்.
எமது Mang Express Service இன் விமான சேவை தினமும் நடைபெறுகின்றதை அறியத் தருகின்றோம்.
தொ.பே.: 021 222 8428,
Email: n.ramcom@yahoo.com

2009ல் வெளிவருகின்றது
2009 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் தரம்:5 மாணவர்களுக்கான புதிய பாடத்திட்ட
அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய, அகில இலங்கையில் சாதனை படைத்த
திருமலை கணேசலிங்கம்
(உதவிக்கல்விப்பணிப்பாளர், பிரதமபரீட்சகர்)
வருடந்தோறும் தயாரித்து வெளியிடும்
வெற்றித்தேர்வு (Top Question paper)
தரம்:3.2009 ஜனவரிமுதல்நவம்பர்வரை 10தேர்வுகள்
தரம்:4.2009 ஜனவரிமுதல்நவம்பர்வரை 15தேர்வுகள்
தரம்:4.2009 ஜனவரிமுதல்யூலைவரை 20தேர்வுகள்
விடை, இலவச கைடுடன் பலவண்ண நிறங்களில்
பாடசாலை ஆரம்பமாக உங்கள் கைகளில் கிடைக்கும்
உடன் புத்தகசாலையில் பதிவு செய்யுங்கள் அட்டையைப்பெறுங்கள்
விரிவான விபரங்களுக்கு தொடர்புகொள்ளுங்கள் 0212229016

NAFISA SPOKEN ENGLISH
Nafisa Spoken English - VCD+ACD
Day by Day Spoken English. Tick - Soft - VCD/DVD/ CR- ROM
GO GO'S சிறுவர்களுக்கான Learning English - VCD
பின்வரும் புத்தக நிலையங்களில் பெறலாம்.
பூபாலசிங்கம் - யாழ்., அன்னை - யாழ்., ஆல் சிலோன் - யாழ்.

Diploma in Computer Technology
முற்றிலும் தரம் 5 புலமைப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கானது.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 24.12.2008 12.00PM
விபரங்களுக்கு நேரில்: 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

Group Class
CHEMISTRY
2011 A/L
ஆரம்பம்:- 28.12.2008
By: DIAS B.Sc. (Hons) Spl. Ch.
★பெற்றோர்/பாதுகாவலர் வருகை அனுமதிக்கு அவசியம்.
College of Chemistry
32, பழம் றோட், கந்தர் மடம்.

பெற்றோர்களே! மின்வெட்டினால் உங்கள் பிள்ளைகளின் கல்வி பாதிக்கின்றதா!





உங்கள் மின்சார கட்டணத்தை
இழை மின்குமிழிற்குப் பதிலாக CFL மின்குமிழைப் பயன்படுத்துவதன் மூலம்
30% முதல் 60% வரை குறையுங்கள்.
(30% மின்சாரத்தை சேமியுங்கள்)





ஒவ்வொரு பெற்றோர்களும் உங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி கருதி 300/= முதல் 400/=வரை செலவு செய்வதன் மூலம் (ஒரு CFL மின்குமிழை பயன்படுத்துவதன் மூலம்) பல ஆண்டு காலமாக இருந்த மின்வெட்டை நிரந்தரமாக இல்லாமல் செய்யுங்கள்.
சனசமூக நிலைய நிர்வாகிகளே! மாதர்சங்க நிர்வாகிகளே!
உங்கள் பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு வீடுகளிற்கும் ஒரு CFL ஐ வாங்கி விநியோகிப்பதன் மூலம் உங்கள் பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிடுங்கள்.
ஆலயநிர்வாகிகளே! வர்த்தகநிலைய உரிமையாளர்களே!
நீங்கள் பயன்படுத்துகின்ற ரியுப்லைற்றிற்கு எலக்ரோனிக் சோக்கைப் பயன்படுத்துவதன் மூலம் மின்கட்டணத்தில் 50% மீதப்படுத்துங்கள் மின்வெட்டை இல்லாது செய்யுங்கள்.
ஏற்கனவே 10 பிரதேசசெயலகம், யாழ்ப்பாண மாநகரசபை, 4 பிரதேசசபைகள், 10 பாடசாலைகள் CFL மின்குமிழைப்பயன்படுத்தி அதிகளவு மின்சாரகட்டணத்தை மீதப்படுத்துகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
குறிப்பு:- பாடசாலைகள், வங்கிகள், ஆலயங்கள், பலநோக்குகூட்டுறவுச்சங்கங்கள், சனசமூக நிலையங்கள், மாதர்சங்கங்கள், பிரதேசசெயலகங்களிற்கு 15% கழிவுகளில் ஒருவருட உத்தரவாதத்துடன் ஒரு மாதகடன் அடிப்படையில் வழங்கப்படும்
JAFFNA TECHNICAL INSTITUTE (பெருமாள் கோயில் முன்றில்) No. 45, Clock Tower Road, Jaffna. T.P: 222-6434
NEW ASIAN CENTER (வர்த்தகவங்கி முன்பாக) No. 56/15, Stanly Road, Jaffna.T.P: 0779254078

MATHS CLASS
தரம்: 6 - O/L
தனியாகவோ/குழுவாகவோ உங்கள் இல்லம் வந்து அடிப்படை அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
வகுப்புகள் நடைபெறும் இடங்கள்
திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ்நகரம், கந்தர்மடம், நல்லூர், அரியாலை, கண்டிக்குளி, கச்சேரி
மேலதிக விவரங்களுக்கு
T.P. 0776510413


## மரண அறிவித்தல்

### தம்பிராசா சிதம்பரம்

காளுவன் சந்தி, சுழிபுரத்தைச் சேர்ந்த தம்பிராசா சிதம்பரம் நேற்று (21.12.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சரவணமுத்து - கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் சின்னத்தம்பி - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் தம்பிராசாவின் அன்பு மனைவியும் ஞானமூர்த்தி (சுவிஸ்), ஞானலிங்கமூர்த்தி (லிங்கம்), அமரர் ஞானரஞ்சிதம், ஞானவைரவமூர்த்தி (கனடா) ஞானேஸ்வரி (லண்டன்), ஞானாம்பிகை (அவுஸ்திரேலியா), ஞானகுமார் (லண்டன்) ஆகியோரின் தாயாரும் உமாதேவி, ஞானமலர், புவனகாந்தன், தயாலட்சுமி, சந்திரசேகரன், குணசேகரம், கோமதி, ஞானேஸ்வரி ஆகியோரின் மாமியும் பிரசாந்தினி, மாதங்கி, லவன், சுதர்சன், விமலராசா, கோபிநாத், சபிதா, ரகுநாத், விராஜ், அனோஜ், சங்கீத், கிருஷ்ணமேனன், தினேஷ், தனுசா, சர்வினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2008) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுழிபுரம் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளுவன் சந்தி,*
*சுழிபுரம்.*

தகவல்:
லிங்கம் (மகன்).


விற்பனையாகிறது
2009 ஆம் ஆண்டுக்கான யுனிலங்கா வர்ணக் கலண்டர்கள், ஒவ்வொரு மாதத்திலும் இந்திய சாஸ்திரிகளால் கணிக்கப்பட்ட அந்தந்த மாதத்திற்குரிய 12 ராசிகளுக்குரிய பலன்களுடன் வர்ணக் கலண்டர்கள் விற்பனையாகின்றன.
அன்னை புத்தக நிலையம்
இல.7, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
லக்சுமி காகிதாதிகள்
இல.3, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

NEW SCIENCE HALL
KANNATHIDDY JAFFNA
G.C.E. A/L MATHS & SCIENCE CLASSES
2011 BATCH
ENGLISH MEDIUM
PHYSICS :- Mr.S.SOTHILINGAM
CHEMISTRY :- Mr.N.MAHESWARAN
COM - MATHS:- Mr.P.SENTHILNATHAN
BIOLOGY :- Mr.T.THAMBIRAJAH
AND OUR USUAL TEACHER'S
COMMENCE ON 28.12.2008
(LIMITED NUMBER'S WILL BE ADMITTED ENROL EARLY)

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.
2011 A/L
கணித, உயிரியல் வகுப்புக்கள்
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம்:- 28.12.2008 - 9.30 a.m.

CHEMISTRY
2011 A/L
English Medium Classes
Commence on 27.12.2008
By: DIAS B.Sc. (Hons) Spl. in Chem.
"The Result Oriented Education"
College of Chemistry
32, Palam Rd, Kantharmadam.
Parents/ Gaurdians Should Accompany for Admission


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.